ஜநவிநோதிநி.

இல. 5, 6.] {மேமீ ஜூன்மீ} 1885. [புஸ்த. XVI.

கடற்கரைக் காட்சி.

கடற்கரைக்காட்சியிலுள்ள அற்புதங்களைப் பல கவிகள் பலவிதமாக வர்ணித்திருக்கின்றனர். அவ்வற்புதங்கள் இத்தன்மையனவென்று எடுத்துரைப்பது எளிதன்று; ஆயினும் அவற்றுள் சிலவற்றை இதனடியில் ஒருவாறு கூறுகின்றோம். கடற்கரையிலிருக்கின்றவர்களுக்காகிலும் அல்லது அங்குள்ள காட்சிகளைக் காண்பவர்களுக்காகிலும் சாதாரணமாக மற்றெந்தக் காரியத்திலும் கருத்துச்செல்வதில்லை. எத்தனையோவகையான வேலைகள் செய்யவேண்டுமென அவர்கள் கருதினராயினும் ஒன்றும் செய்யப்படுவதில்லை. கடலில் எழுகின்ற அலைகளிலும் அவற்றைக் காண்போர்களுடைய கண்களிலும் பளபளவென்று மின்னிப் பிரகாசித்து, அனைவருடைய கண்களையும் கூசச்செய்கின்றவையான கதிரவனுடைய கிரணங்கள் ஒருபக்கத்தில் விளங்காநின்றன; மற்றொருபக்கத்தில் கரையிலுள்ளவர்களுடைய காதுகளைச் செவிடாக்கும்படி எப்போதும் உரத்துச் சப்தித்துக்கொண்டு கடலில் அலை எழுவதினால் கோஷங்கள் உண்டாகின்றன. இவை முதலிய காட்சிகள் பலவும் ஒன்றுகூடி, வேலைசெய்து அலுத்து இளைப்பாறும்படி கடற்கரையோரத்திற்கு வந்து சோம்பலாய்க் கடலைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களைப் பின்னுமதிகமான சோம்பலுள்ளவர்களாகச் செய்துவிடுகின்றன. அங்குள்ள ஏகாந்தமான நிலைமையானது அவர்களைப் பின்னும் தளரச்செய்து மயக்கிவிடுகின்றது. அதனால் அவர்கள் ஒன்றுந்தோன்றாது கடலில் எழுகிற அலைகளையே பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். ஒவ்வொரு சமயங்களில் அங்கு அகப்படுகின்ற கூழாங்கற்களை எடுத்துக் கடலிலெறிவது அவர்களுக்குப் பொழுதுபோக்கான காரியமாயிருக்கலாம். அவ்விடத்தில் உட்கார்ந்தபடியே அக்கற்களையெடுத்து இவ்வளவு தூரத்திலிருக்கின்ற சின்ன அலை



யின்மேல் விழவேண்டுமென்று உத்தேசித்து அவ்விதமே குறிதப் பாமல் எறிவதில் மனதிற்கொருவகை ஆனந்தமும் சரீரத்திற்குச் சுறுசுறுப்பும் உண்டாகலாம். கடற்கரைகளில் புஸ்தகங்களை யெடுத் துக்கொண்டுபோய்ப் படிப்பது தகுதியான பொழுது போக்கென்று அனேகர் எண்ணுகின்றனர். யோசிக்குமளவில் அதுவும் ஏற்ற

தன்று. கடலோரத்திற்குப் போகும்போது அனேகர் விநோதகதை முதலியவைகளடங்கிய புஸ்தகங்களைக் கையிலெடுத்துக்கொண்டு போகிறார்களாயினும், அவ்விடத்தில் ஒருவரும் அப்புஸ்தகங்களைப் படிப்பதில்லை; புஸ்தகத்தைத் திறக்கும்போதே வெகுவாய் அவர்களுக்குக் கண்மயங்கி நித்திரைவந்துவிடுகிறது. ஆதலால் அவ்விடத்தில் அவர்கள் சாதாரணமாய்ச் செய்யும் காரியமாவது ஒருவரையொருவர் பார்த்து அவரவர் தரித்திருக்கும் ஆடையாபரணங்களைக் கண்டு ஆனந்தப்படுவதும், கடலில் அலையெழுந்து பார்ப்பவர் பாதங்கள் வரையும் ஓடிவருவது, திரும்பித் தீவிரமாய்ப் போவது முதலான நீரோட்டங்களைப் பார்த்துப்பார்த்து மகிழ்வதும், கடலில் முழுகுகின்ற செம்படவர்கள் அலைகளை அலக்ஷியமாகத் தாவி மூழ்கி மூழ்கிக் கிளம்புவதைக்கண்டு களிப்பதும், சிறுபிள்ளைகள் கடலோரத்திலுள்ள மணல்வெளிகளில் குண்டுவெண்கல், பளிங்குக்கல், கிளிஞ்சல், பலகறை, சோழி, சிப்பி, ராவணன்சுருட்டு, ராவணன் முழி, சீதாசொருக்கு, வலம்புரிச்சங்கு, சூற்சங்கு, தாழஞ்சங்கு, பாலடைச்சங்கு, முட்சங்கு, வெற்றிச்சங்கு வகைகள் முதலாய்க் கடலினின்றும் கரையில் ஒதுக்கப்பட்ட பலவகைப்பொருள்களை ஓடியோடிப் பொறுக்கிக்கொண்டும், பற்பலவிதமான விளையாட்டுக்கள் விளையாடிக்கொண்டும் கோலாகலமாயிருப்பதைப் பார்த்துக் களிப்பதுமாகிய இவைகளே எல்லோருக்கும் ஏற்றவையான பொழுதுபோக்காயிருக்கின்றன.

இவைகளன்றித் துறைமுகங்களில் செம்படவர்கள் படகு ஓட்டிக்கொண்டு அலைகளைத் தாண்டிப்போய் தூரத்திலுள்ள கப்பலுக்குச் சாமான்கள் ஏற்றிக் கொண்டுபோய்க் கொடுப்பதும், அதிலுள்ள சாமான்களைக் கரைக்குக் கொண்டுவருவதும், கடலில் நெடுந்தூரம் சென்று மீன்பிடிக்க வலைபோட்டுப் பிறகு கரைவந்துசேர்ந்து கூட்டங்கூடி அவ்வலைகளை யிழுப்பதுமாகிய இவைமுதலியவைகளும் வெகு விநோதக்காட்சியாயிருக்கின்றன. மேலும் சாதாரணமான மரக்கலங்களும் நீராவிக்கப்பல்களும் கூட்டமாய்க்கூடிப் பாய்மரக் காடுபோல அடர்ந்திருக்க, பின்னும் புதிதாய்ப் பல கப்பல்கள் அங்கு வந்துசேரவும் அங்குள்ளவைகள் ஒவ்வொன்றாய்ச் சரக்கேற்றிக் கொண்டு புறப்பட்டுப்போவதுமாகிய இக்காட்சிகளும் காண்போருக்குக் களிப்பு தராமற்போவதில்லை.

முக்கியமாய்க் கடற்கரையைக் காணும்போது அவ்விடத்தில் சிறுவர்களுக்கு உண்டாகின்ற ஆனந்தம் மற்றெவருக்கும் இல்லை. அவ்விடத்திலுள்ள நாநாவர்ண மணல்களும், கூழாங்கற்களும், புன்னைக்கொட்டை, அடம்பங்கொடி, ராவணன்மீசை முதலான கடற்பூண்டுகளும் பலவகைப் பூச்சி ஓடுகள் முதலான விளையாட்டுக் கருவிகளுமாகிய யாவும் சிறுவர்களுடைய விநோதத்திற்காகவே படைக்கப்பட்டிருப்பதுபோல் எங்கும் பாவியிருக்கின்றன. கடற்

கரையிலுள்ள மணல்வெளியிலே மாலைப்பொழுதில் மந்தமாருதம் வீச மஞ்சள்வெயில் வெகு சுகமாய் அவர்கள்மேல் படும்போது அதின் அழகை இத்தன்மையதென்று சொல்லிமுடியாது. அந்த உச்சாகமான வேளைகளில் சிறுவர்கள் பந்தயம் போட்டுக்கொண்டு ஓடுகிறதும், கூத்தாடுவதும், ஒருவரையொருவர் பிடித்திழுப்பதும், தள்ளுவதும், மணலைத்தோண்டி அதற்குள் ஒருவரையொருவர் அழுத்துவதும், அவர்கள் வைத்திருக்கும் கைக்குட்டை குல்லாய் முதலியவைகளை ஒளிப்பதும், மணல்களால் கோபுரங்கள்போலவும் வீடுகள்போலவும் சுரங்கங்கள்போலவும் உருவங்கள் அமைப்பதும் ஆகிய இத்தன்மையான விளையாட்டுகள் விளையாடுவதே அவர்களுக்கு வெகுவிநோதமாயிருக்கின்றது. இவ்விநோதமான பாலலீலைகளைப் பார்க்கும் பெற்றோர்களுக்கு வேறு பேரானந்தம் வேண்டுமோ!

திருவநந்தபுரம் மகாராஜா.

இத்தேசத்து மகாராஜாக்கள் ஜன்மப்பிராயச்சித்தமாய் ஒருவருடைய வாழ்நாளில் ஒருதரம் துலாபாரம் என்கிற மகாதானம் செய்வது வெகுகாலமாக வழக்கமாயிருக்கின்றது. துலாபாரமாவது, தனது தேகத்தையே தானம்செய்வது கூடாமையால், அதற்குப் பிரதி தன் தேகத்துக்குச் சரியான எடை பொன் நிறுத்து அதைப் பண்டிதர் முதலிய பல பெரியோர்களுக்கும் பேதைகளுக்கும் தானம் கொடுப்பதாம். ஒரு பெரிய பூமண்டலத்தை ஆளும் மகாராஜாக்கள் எவ்வளவு நடுநிலைமையாக அரசாட்சி செய்துவரினும் சில விஷயங்களில் பிசகிப்போகக்கூடுமாகையால் அதுகாரணமாக அவர்களுக்கு அநேகம் பாபங்கள் நேரிடும். அவைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமாய், குடிகளைச் சந்தோஷிப்பித்து அதன்மூலமாகக் கடவுளும் திருவுளம் உவக்கும்படி செய்வதற்காகவே, சரீரதானப் பிரதிநிதியான இம்மகாதானம் செய்துவருகின்றனர்.

இவ்விந்துதேசத்துக்கு ஓர் உயர்ந்த திலகமணியென்னும் அர்த்தமுள்ள ஜி. வி. ஸ். ஐ. என்கிற பட்டப்பெயர் பெற்ற மகா கனம் பெருந்திய திருவனந்தபுரத்து மகாராஜா ராமவர்மா அவர்கள் இத்தேசத்து வழக்கப்படியே சென்ற ஏப்பிரல்௴ 29உக்குச் சரியான நாளது பார்த்திபஹு சித்திராபவுர்ணிமி புண்ணியகாலத்தில் துலாபாரமென்கிற மகாதானம் செய்தார். இந்த தானம் செய்வதற்கு முன்னதாகச் செய்யவேண்டிய தேவபூஜை முதலிய சடங்குகள் பலவுண்டு. அச்சடங்குகள் யாவையும் முடித்துக்கொண்டு, நிறுப்பதற்காக வைத்திருக்கும் துலாக்கோலையும் பூஜித்து, மகாராஜா ஸர்வா

பரண பூஷிதராய் முடியில் மணிமகுடம் அணிந்து தராசின் ஒரு தட்டில் உட்காருவார். மற்றொரு தட்டில் அவர் எடைக்குச் சரியான பொன் ராசி ராசியாகக் கொட்டப்படும்; அதாவது ஏறக்குறைய 130 ராத்தல் எடையாகின்றது. இந்தத் துலாபாரத்தில் அந்தப் பொன்களைப் பெரிதும் சிறிதுமாய்ப் பற்பல அளவுள்ள நாணயங்களாக அச்சிட்டு நிறுத்தார்கள். அந்தச் சமயத்தில் ராஜாங்க உத்தியோகஸ்தர் பலரும் வந்து சூழ்ந்திருந்தனர். அவர்களுக்கெல்லாம் மகாராஜா தன் சொந்தக் கையினாலேயே விசேஷமான ஸம்மானங்கள் செய்தார். தற்காலத்தில் மகாராஜா அணிந்துகொண்டிருந்த ஆபரணங்கள்யாவும் ராஜகுருவுக்குச் சேருகின்றவை. துலாபாரத்துக்குச் செய்துவைத்த நாணயங்கள் 2 ரூபாய்க்காசு முதல் 85 ரூபாய்க்காசு வரையில் பல அளவாக இருந்தன. இந்தத் துலாபாரத்துக்கு இப்போது 2 லக்ஷம் ரூபாய்வரையில் செலவாயிற்றென்கிறார்கள். அந்தத் திரவியத்தில் அவர்களுடைய குலதெய்வமான பத்மநாப சுவாமிக்கும் ராஜாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் சேர்ந்ததுபோக, மிகுந்தது அவரவர்களுடைய நிலைமைக்கும் யோக்கியதைக்கும் தக்கபடி பல்லாயிரம் பிரஜைகளுக்குத் தானம் கொடுக்கப்பட்டது.

இந்தத் துலாபாரம் தவிரவும், இது நடத்திய ஒருவருஷத்துக்கெல்லாம் ஹிரணியகர்ப்பம், கோகர்ப்பம் அல்லது பத்மகர்ப்பம் என்று மற்றொரு மகாதானமும் மகாராஜாக்கள் செய்வதுண்டு. இதுவும் மகாராஜாவின் எடைக்குச் சரியான பொன்னினால் பசுவின் வடிவமாகவாவது தாமரைப்பூ வடிவமாகவாவது செய்து பின்பு தானம்செய்வதாம். இச்சடங்குகள் யாவையும் பண்ணின பாவம் தொலைவதற்காகவேயன்றி வேறல்ல.

இந்த ராமவர்ம மகாராஜா 1837--ஆ மேமீ 19உ பிறந்தவர். இவருடைய தாயாரான ருக்மிணீபாய்க்கு இவருடன் பிள்ளைகள் எழுபேர். அவர்களுள் இவர் கடைசியானவர். குழந்தைப்பருவம் முதற்கொண்டே இவருக்குப் படிப்பில் நோக்கம் அதிகமெனத் தெரியவருகின்றது. வடமொழியிலும் அங்கிலேயபாஷையிலும் சிறிதுதூரம் கற்றுத்தேர்ந்து பிறகு,மகாவல்லவரென்று இப்பொழுது எங்கும் புகழ்பெற்றிராநின்ற ஸர். த. மாதவராவ் அவர்கள் அப்பொழுது இச்சென்னைச் சர்வகலாசாலையில் கற்றுத் தேறிப் பல பரிசுகள் பெற்றிருந்தமைகண்டு, அவரை அவ்விடம் அழைப்பித்து, அவரிடத்தில் கற்கத்தொடங்கி நான்கு வருஷகாலம் படித்துவந்தார். இம்மகாராஜா சிறுபிராயத்திலேயே பல பத்திரிகைகளுக்கு விஷயங்கள் எழுதிக்கொடுக்கத் தொடங்கினார். முதல் முதல் இவர் சுயமாய்க் கற்பித்து எழுதிய விஷயங்கள் அதினியம் என்கிற பத்திரிகையில் பிரசித்தமாயிருக்கின்றன. அவருடைய கற்பனையின் பல விஷயங்களையும் இங்கு எடுத்து உரைக்கப் புகுந்தால் விரியும். அக்காலத்தில் அத்தேசத்தின் நிலைமை மிகவும் ஈனஸ்திதியை அடைந்து

பொருள்வருவாயும் வெகுவாய்க் குறைவுபட்டுப்போயிருந்தமையால், அதைச் சீர்ப்படுத்த ஸர். த. மாதவராவ் அவர்கள் ஒருவராலன்றி மற்றெவராலுமாகாதெனத் தெரிந்து, அவரை அந்த ராஜ்யத்தில் மந்திரியாக நியமித்தார்கள். அக்காலத்தில் அவர் செய்த திருத்தங்களே நாளதுவரையில் அத்தேசத்தைப் பரிபாலித்துவருகின்றன.

1861-ஷுத்தில் தற்காலம் யுவராஜாவாயிருந்த இம்மகாராஜா முதல்தடவை இச்சென்னைமாநகரைக் காணவந்து, அக்காலத்தில் இந்தராஜதானிக்குக் கவர்னராயிருந்த தெனிஸன்பிரபுவினால்மிகுந்த ஸாமர்த்தியமும் கல்விகேள்விகளும் உடையவரெனக் கொண்டாடப்பட்டார். மறுபடி சுவதேசத்துக்குத் திரும்பிப்போனபின்பும் படிப்பைக் கைவிடாமல் விருத்திசெய்துகொண்டு ஒவ்வொருசமயங்களில் பத்திரிகைகளுக்கு விஷயங்களுமெழுதிவந்தார். 1872 – ஷுத்தில் இந்து தேசத்து மந்திரிகள் எனப் பெயர்வைத்து ஸர். த. மாதவராவ் அவர்களைப்பற்றி ஒரு உபந்நியாஸமெழுதியிருக்கிறார். வெகு அருமையான விஷயமென்று அதைப் பார்த்தவர் அனைவரும் கொண்டாடுகின்றனர். இவ்வாறிருக்க தேகத்தில் அவருக்குச் சிற்சில அசவுக்கியங்கள் உண்டாக, அதுகாரணமாய் இடையிடையே அவருடைய வித்தியாபிவிருத்திக்குத் தடைநேரிட்டுக்கொண்டுவந்தது. 1874–ஷு முதல் 1877–ஷு வரையில் அவர் மிகவும் உடல் மெலிந்திருந்தார். அதனால் அக்காலத்தில் தேகம் சவுக்கியப்படுவதற்காகத் தமது ராஜ்யத்திலேயே சிறிதுதூரம் இங்குமங்கும் சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்தார். அச்சமயங்களிலும் பயிர்த்தொழிலைப்பற்றியும் பசு பக்ஷிமிருகாதிகளின் வரலாற்றைப்பற்றியும் ஆராய்ச்சி செய்துகொண்டுவந்தார்.

தமது தமையனார் காலம்சென்றபிறகு 1880-ஷு ஜூன்மீ 17வ இம்மகாராஜாவுக்குத் திருவனந்தபுரம் ராஜ்யத்தில் பட்டம் சூட்டப்பட்டது. இவர் சிங்காசனமேறியவுடனே ராஜ்யத்திற்குச் செய்த முதன்மையான நன்மையாவது, இச்சென்னையில் ரெஜிஸ்திரார் ஜனரலாய், மிக்கஅனுபவமும் ஸாமர்த்தியமும் ராஜ்யதந்திரநிர்வாக சக்தியுமுடையவராயிருந்த வ. ராமய்யங்காரவர்களை திவானாக நியமித்துக்கொண்டதேயாம். சென்ற ஐந்து வருஷகாலத்தில் இவருடைய பரிபாலனத்தில் அந்த ராஜ்யம் மிகவும் விருத்தியடைந்திருக்கின்றது. இந்த திவான் அவ்விடம்போய்ச் சேர்ந்தவுடனே அத்தேசத்துச் சட்டங்களை இக்காலத்துக்கு ஏற்றபடி திருத்தியதுமாத்திரமேயன்றி, விகாரமான பல தேசாசாரங்களையும் மாற்றி, உபயோகமற்ற கட்டுப்பாடுகளையும் ஒழித்துவிட்டார். ராமவர்ம மகாராஜா 1881–ஷு காசியாத்திரையாகப் புறப்பட்டு வடக்கேயுள்ள பம்பாய், பூனா, ஜபல்பூர், பிரயாகை, காசி, கல்கத்தா முதலிய நகரங்களைப் பார்த்து, பல புண்ணியஸ்தலங்களைத் தரிசித்து, கங்கை முதலிய புண்ணிய நதிகளில் நீராடிவந்தார். அங்கிருந்து திரும்பி அப்ப

டியே நேராக ராமேசுவரயாத்திரைபோய் ஸேதுதரிசனம் பண்ணி விட்டு ராஜ்யம்போய்ச் சேர்ந்தார். இம்மகாராஜா நல்ல ஸாஹித்திய ஞானமும், ஸகல சாஸ்திரபரிசயமும், நல்ல நாகரிகத்தேர்ச்சியுமுடையவராகி, சென்னை யூனிவர்சிட்டியென்னும் சர்வகலாசாலையிலும், சீமையில் பின்னும் பல சங்கங்களிலும் சேர்ந்திருக்கின்றனர்; பெரியோர்களிடத்தில் மட்டுமரியாதையும் குடிகளிடத்தில் அன்பும் உடையவரும் ஆஸ்திகருமானவர்.

திருவனந்தபுரத்தில் அன்னஸத்திரங்கள் விசேஷமாயிருக்கின்றன. எத்தனைபேர் வந்தாலும் யாவர்க்கும் யதேஷ்டமாய் அன்னதானங்கள் செய்யப்படுகின்றன. அவ்விடங்களில் புசிக்க உடன்படாதவர்களுக்குச் சமையலுக்கு வேண்டிய சாமக்கிரிகள் கொடுக்கப்படுகின்றன.

பரசுராம க்ஷேத்திரமென்று சொல்லப்படுகின்ற இந்தத் திருவநந்தபுராஜ்யத்திற்கு, கிழக்கில் 8,000 அடி உயரமுள்ள ஒரு கம்பீரமான மலைத்தொடரும், மேற்கில் அரபிக்கடலும் எல்லைகளாயிருக்கின்றன. இவ்வெல்லைகளுக்கு மத்தியில் அந்த ராஜ்யம் 6,730 சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயிருக்கின்றது. அத்தேசத்தில் எங்கே பார்த்தாலும் கண்ணுக்கு எட்டினதூரம் பச்சென்று தோன்றுகிற நெல் வயல்களும், தென்னந்தோப்புகளும், பனந்தோப்புகளும் நிறைந்து வெகு விநோதக் காட்சியாயிருக்கின்றன. அத்தேசத்தில் ஏறக்குறைய 2,401,200 பிரஜைகள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

கவிநவரத்நம்.

நமது இந்துதேசத்தில் மற்றத் தேசங்களைவிட ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலான பாஷைகளில் வரகவிகள் என்று பேர்பெற்ற வித்வான்கள் பலர் இருந்திருக்கிறார்கள். ஆயினும் அவர்களது கீர்த்தியின் சரீரங்களாகிற புத்தகங்களைமாத்திரம் நாம் பார்த்தும் படித்தும் வருகிறோம். அவர்களுடைய சரித்திரங்களைப்பற்றி நிச்சயமாய்ச்சொல்ல நமக்கு ஒன்றும் ஆதாரங்கள் இல்லை. ஆனால் ஜனங்களுக்குள் அவர்களைப்பற்றி வழங்கிவருகின்ற கதைகளினாலும், சிலாசாஸநம் முதலிய ஆதாரங்களினாலும் சில விஷயங்கள் ஒருவாறு தெரியவருகின்றன. அவைகளைக்கொண்டு நம்மால் கூடிய மட்டும் அவர்களுடைய சரித்திரங்களைப்பற்றிச் சிறிது எழுத முயலுவோம்.

நவரத்தினங்கள். — ஸம்ஸ்கிருதபண்டிதர் யாரையாவது காளிதாஸன் முதலிய கவிகள் எப்பொழுது வாழ்ந்திருந்தார்கள் என்று கேட்டால், அவர்கள் ஒரு சுலோகம்சொல்வது உண்டு. அதன் தாத்

பரியம் என்னவென்ருல், காளிதாஸன், தன்வந்தரி, க்ஷபணகன், அமரஸிம்ஹன், சங்கு, வேதாளபட்டன், கடகர்ப்பரன், வராகமி கிரன், வருசி இவர்கள் ஒன்பதுபேர்களும் ஒன்பது ரத்நங்கள் போல விக்கிரமாதித்ய மகாராஜாவின் சபையில் விளங்கிவந்தார்க ளென்று சொல்லுவார்கள். இதைவிடக் கொஞ்சம் அதிகமாய் இவர் களைப்பற்றி எழுத நாம் முயலுவோம்.

காளிதாஸன்.

விக்கிரமார்க்க சகமென்று வடநாடுகளில் வழங்கிவரும் ஆண் டுக்குத் தலைவஞன விக்கிரமாதித்ய அரசன் கி. மு. 56-வது வரு ஷத்தில் வாழ்ந்திருந்தவன். அந்தக் காலமானது சற்றேறக்குறைய 1940 வருஷங்களுக்குமுன். அப்பொழுது அந்த மகா ராஜன் வடக்கே ஆட்சிசெலுத்திவந்தான். இவர்காலத்தில்தான் இந்த ஒன் பது ரத்நங்கள் விளங்கினூர்களோ அல்லது அதற்குமுந்தியோ பிந்தியோவென்று சந்தேகிக்கவேண்டியதாய் இருக்கிறது. ஏனெ னில், விக்கிரமராஜனென்றும், போஜனென்றும் பேர்பெற்ற மற் ருெரு அரசன் மாளவதேசத்தில் கி. பி. 1040-1090 வருஷங்களு க்கு இடையில் ஆண்டுவந்ததாக அநேக சிலாசாஸநங்களினுல் தெரி யவருகிறது. மேலும் இவர் வசித்த முக்கியபட்டணங்கள் உஜ்ஜயினி, தாரா முதலிய நகரங்களாகத் தெரியவருகிறது. ஒன்பது ரத்நங் கள் உஜ்ஜயினிநகரத்தில் விக்கிரமராஜன் சபையில் பிரகாசித்ததாக வழங்கிவருகிறபடியாலும், இந்த விக்கிரமனுக்கு போஜனென்னும் மற்ருெருபேர் இருக்கிறபடியினுலேயும், காளிதாஸன் சற்றேறக் குறைய 800 வருஷங்களுக்குமுந்தி மாளவதேசத்தில் வசித்து வந்ததாகச் சிலர் சில ஆதாரங்களைக்கொண்டு கூறக்கூடும்.

ஆனுல் இதுவும் சரியன்று; ஏனெனில் போஜனுகிய விக்கிரமனைப் பற்றிக் காலம் ஏற்பட்டபோதிலும், காளிதாஸன் இவர்காலத்தில் இருந்தான் என்பதற்கு என்ன ஆதாரம். சாளுக்ய அரசன் புளகேசி என்பவர்நாளில் கொடுக்கப்பட்ட ஒரு சாஸநத்தில் பாரவி, காளிதா ஸன், இருவர்களுடைய பேர்கண்டிருக்கிறது. இந்த சாஸநத்தின் காலம் சாலீவாஹன சகவருஷம் 507. அதாவது கி. பி. 585. இந்த காலத்திற்குமுந்தியே காளிதாஸன்பெயர் ஜனங்களுக்குள் பிரசித் தமானதாகத் தெரியவருகிறது. குறைந்தபக்ஷம் சாலீவாஹன சகம் 500 வருஷத்தில் அதாவது 1300 வருஷத்திற்குமுன் காளிதாஸன் ஜீவித்திருந்ததாக, நாம் கர்ணபரம்பரையாய்க் கேட்டிருப்பவைக ளைக்கொண்டு சொல்லலாம்.

இவன் முதலில் ஸம்ஸ்கிருதம் என்பதே தெரியாதவனுயிருந்து பின்புகாளிகாதேவியின் வரப்பிரஸாததத்தால் ஸம்ஸ்கிருதவித்தையை அறிந்தான் என்பதற்கு ஜனங்கள் ஒரு கதை சொல்வார்கள். மாளவ தேசத்தில் அரசன் ஒருவனிருந்தான். அவனுக்கு நாலுவேதமும் ஆறு

சாஸ்திரங்களும் அறிந்த ஸம்ஸ்கிருதத்தில் ஸரஸ்வதிக்கு ஒப்பான ஓர் கன்னிகை இருந்தாள். அவள் தன்னைப்போலப் படித்த வித்வானுக்கே மாலையிடவேண்டுமென்று கருத்துக்கொண்டு, வருகிற வரன்களையெல்லாம் பரிக்ஷித்து, ஒருவரும் தன்னளவு படிக்கவில்லையென்று அவர்களை அவமானப்படுத்தி அனுப்பிக்கொண்டே இருந்தாள். இப்படி வந்துபோனவர்கள் அநேகர் இவள் படுத்தின அவமானத்தினால் வெட்கமும் கோபமும் அடைந்து இவளை எப்படியாவது மோசம்செய்து இவளுக்கு ஓர் முழுமூடனை மணம்புரிவிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டார்கள். இதற்குள் அந்தப் பெண்ணின் பிதாவாகிய அரசனுக்கும் விவாககாலம் தப்பிப்போகிறதேயென்று தன் பெண்மேலேயே வருத்தமுண்டாகி, யாராவது ஒரு பையன் அகப்பட்டால் அவனுக்கு இந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துவிடவேண்டும் என்னும் அபிப்பிராயம் வந்துவிட்டது. இந்த எண்ணத்தை முன்னம் அவமானமடைந்த வித்வான்கள் அறிந்து, இதுதான் சமயம், ஓர் பெரும்மூடனைத் தேடிப்பிடித்துக் கொண்டுபோய் விடவேண்டுமென்று தங்களுக்குள்ளே தீர்மானித்துக்கொண்டார்கள். அன்றையதினமே அவர்கள் ஆற்றங்கரைக்குப் போய்க்கொண்டிருக்கையில், ஓர் பிராமணன் ஒருமரத்தின் நுனிக்கிளையில் உட்கார்ந்துகொண்டு அடிக்கிளையை வெட்டிக்கொண்டிருப்பதைக்கண்டு இவன்தான் அவளுக்குத் தகுந்தவனென்றெண்ணி, அந்தப் புத்தியீனனைப் பிடித்துக்கொண்டுபோய் மாப்பிள்ளைமாதிரியாக அலங்கரித்து அரசனிடத்தில் விட்டார்கள். வந்தவன் வெகு அழகாய் இருப்பதைக்கண்டு அரசன் மயங்கி ஆர் இவரென்று விசாரிக்க, கூடவந்தவர்கள் இவர் எங்களுக்கெல்லாம் வித்தியாகுரு என்றார்கள். இவர்கள் யோக்கியதையை அரசன் முன்னமே அறிந்தவனாகையால் குருவினுடையயோக்கியதையும் அதிகமாகவே இருக்கவேண்டுமென்றெண்ணி, ஒன்றும் விசாரிக்காமலே பெண்ணை மணையில் உட்காரவைத்து, அந்தப் பிராமணப்பிள்ளைக்குக் கலியாணஞ்செய்துகொடுத்துவிட்டான். அன்று இராத்திரி பள்ளியறையைச் சிங்காரித்து மாப்பிள்ளையை உள்ளே அனுப்பிவிட, அந்தப் புருஷன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பெண்கள் சிரோமணி, தனது கணவன் பெரும்மூடனாயிருப்பதையும், நடந்திருக்கும் மோசத்தையும் அறிந்துகொண்டு அவன் முகத்தைத் திரும்பிப் பாராமல், ஸம்ஸ்கிருத பாஷையில் சிறிது நீ கற்றுக் கொண்டுவந்தாலொழிய இந்த வீட்டில் நுழையாதே என்று சொல்லியனுப்பிவிட்டாள். அந்தப் பிராமணனோ என்ன மூடனாயிருந்தபோதிலும் ஒரு பெண்ணினால் தனக்கு நேரிட்ட அவமானத்தைப் பொறுக்கக்கூடாமல், அந்த ஊருக்குச் சமீபத்திலிருந்த ஒரு காட்டிற்புகுந்து ஒருவர்கண்ணிலும்படாமல் ஓடிப்போக நிச்சயித்து நடந்துகொண்டிருந்தான். அவன் போனவழியில் ஒரு காளிகோவில்

தென்பட்டது. அவனது அதிர்ஷ்டத்தால் அவன் அங்குபோய்ச் சேரும்பொழுது காளிகாதேவி வெளியில்புறப்படுகிற சமயமாய் இருந்தது. மனுஷ்ய சஞ்சாரமில்லாத தனது காட்டில் அன்று ஒருவன் வந்ததைக்கண்டு காளி திகைத்து நீ யாரப்பா என்று வினவ, அவன் தனது துக்கங்களைச் சொல்லிக்கொண்டான். காளி அவனைக்கண்டு பரிதபித்து, அவன் நாக்கை நீட்டச்சொல்லி ஸரஸ்வதியின் பீஜாக்ஷரத்தை அதில் எழுதிவிட்டாளாம். தேவி பிரஸாதத்தால் அப்பொழுதே அவன் எல்லாவித்தையையும் கற்றவனாய், தனக்கு கல்விச்செல்வத்தையளித்த தேவியை உத்தேசித்தே தனதுமுதல் கிரந்தமாகிய சியாமளா தண்டகத்தைப் பாடிக்கொண்டே அன்று இரவே தனது மனையாட்டி வீடுவந்து சேர்ந்தான்.

அவள் இவன் பாடிக்கொண்டு வருவதைக்கேட்டுத் திகைத்து இவன் கதவை இடித்தபொழுது, "அஸ்தி கஶ்சித் வாக் விஶேஷ:" என்று கேட்டாள். 'இப்போது சிறிது கல்வித்திறம் உண்டாயிருக்கிறது' என்பது அதன்பொருள். அதை மனதில்வைத்துக்கொண்டு அவள்கேட்ட மூன்றுபதங்களைக்கொண்டே மூன்று புஸ்தகங்களை ஸம்ஸ்கிருதத்தில் இந்தப் பெண்ணின் நாயகன் எழுதினதாக ஜநங்கள் சொல்லுகிறார்கள். காளியின் பிரசாதம்பெற்றவனாகையால் இவன் பெயர் காளிதாஸனென்று அன்றுமுதல் விளங்கலாயிற்று. இவன் கவிகளுக்குள்ளெல்லாம் சிரேஷ்டன். தனது பெண்சாதிகேட்ட மூன்று பதங்களில் 'அஸ்தி' என்பதைக்கொண்டு குமாரஸம்பவம் என்னும் கிரந்தத்தையும், 'கஶ்சித்' என்னும் பதத்தைக்கொண்டு மேகதூதம் என்னும் காவ்யத்தையும், 'வாக்' என்னும் பதத்தைக் கொண்டு ரகுவம்ச மகாகாவ்யத்தையும் காளிதாஸன் இயற்றினான். சாகுந்தலம், மாளவிகாக்கினிமித்ரம், விக்கிரமோர்வசி, என்னும் நாடகங்களையும் இன்னும் அநேக புஸ்தகங்களையும் எழுதினான். ஸம்ஸ்கிருதத்தில் இவனுடையநடை மிகவும் தெளிவான நடை. அன்றியும் உள்ளதை உள்ளபடி வர்ணிப்பதில் இவனைவிடத் தேர்ந்தகவி ஸம்ஸ்கிருதபாஷையில் இல்லவேஇல்லை. "மிருச்சகடி" என்னும் நாடகத்தைச்செய்த சூத்திரக கவியை இவனுக்கு இந்தவிஷயத்தில் ஒருகால் சமானமாகச் சொல்லலாம். இவன் மிகவும் தெளிவானநடையில் எழுதினபடியால் கடினமான பதங்கள் இவனுக்கு உபயோகிக்கவே தெரியாதென்று வேறு சிலகவிகள் எண்ணிவிட்டார்கள். இதை அறிந்ததும் காளிதாஸ மகாகவியானவன் நளோதயம் என்னும் கிரந்தத்தைப்பண்ணினான். அதற்குப் பதம்பிரிக்க ஒரு கவியாலும் ஆகாமல் கடைசியாய் அந்தப் புஸ்தகத்திற்கு அவனே பதவுரை எழுதும்படி நேரிட்டது. இவனிடத்தில் மாளவதேசத்துராஜா அதிக பிரீதிவைத்திருந்தபடியால் மற்றக்கவிகள் இவனை வெறுத்துவந்தார்கள். அன்றியும் இவனைப்பற்றிப் பலகாலங்களில்

அரசனிடத்தில் கோட்சொல்லிவந்தார்கள். அரசன் ஒவ்வொருவி தத்திலும் காளிதாஸனைப் பரிசோதித்துப்பார்த்து, இவன் மகாத்மா என்றறிந்தபடியால் அவன் பாதங்களைத் தலையால்வகித்துச் சாகுமள வும் அவனைக் காப்பாற்றிவந்தான். காளிதாஸன் சாக்தன். அதன் நிமித்தம் இரண்டொருதடவை பூசைக்காக இவன் மதுமாம்ஸாதி கள் வாங்கிக்கொண்டுபோவதை இவனுக்குச் சத்துருவாகிய ஒரு கவி கண்டு, காளிதாஸன் கஷ்கத்தில் மீன்கொண்டுபோகிறானென்று அரசனிடம் சொல்ல, அரசன் அவனைக்கைப்பிடியாக வரவழைத்து அவன் கஷ்கத்திலிருந்ததைக் கீழே வைக்கச்சொல்லிப்பார்த்து, இரா மாயணமாய் இருக்கக்கண்டு இவர் மகானென்று அவர் திருவடிகளை வணங்கினானும். இன்னொருசமயத்தில் ஒருவன் காளிதாஸனைப் போசனத்துக்கு அழைத்து அவன் வெகுநேரம்வரையில் வராமலி ருந்து பிறகு தந்தசுத்திசெய்யாமல் கூடவந்து உட்காந்தபொழுது, இப்படி வரலாமோவென்று ஜனங்கள்கேட்க, உடனே கங்கையில் ஸ்நாநம்பண்ணி என் பாபத்தைப்போக்கிக்கொள்ளுகிறேனென்று அவன் முற்றத்தில் உட்காந்து, கங்கையைப் பிரார்த்திக்க, அந்த நதி ஆகாசமார்க்கமாய்வந்து அவன் தலையில் அபிஷேகஞ்செய்து போ னாளாம்.

காளிதாஸன் சாக்தனாகவும் சிவபக்தனாகவும் இருந்தது அவன் புஸ்தகங்களில் எங்கும் தெரிவதுடன், அவன் விஷ்ணுதுவேஷி அல்லவென்றும், அத்வயித மதத்தைக் கொண்டவனென்றும் தெரிய வருகிறது. அநேக இடங்களில் விஷ்ணுஸ்தோத்திரங்களும் செய் திருக்கிறான்.

சில ஐரோப்பியர்கள், இவன் ஒருமனிதன் தன் வாழ்நாட்களுள் எழுதக்கூடியதைவிட அதிகமாய் எழுதியிருப்பதைக்கண்டு மலைத்து, காளிதாஸன் ஒருவனல்ல, பலபேர்களாயிருக்கவேண்டுமென்று தங் கள் புத்தகங்களில் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இது நமது மகா கவிகளைக்கண்டு பொறாமைப்படுவதேயன்றி வேறல்ல. காளிதாஸன் என்பது காரணப்பெயர். அப்படி காளியின் வரத்தைப் பெற்றவர் களுக்குள் இவன் ஒருவனென்று ஜனங்கள் சொல்லுகிறார்களேயன்றி வேறல்ல. அன்றியும் பாஷை நடையில் வித்தியாசம் சில புஸ்தகங் களில் தெரிகின்றது. அதனால் அவன் ஒருவனல்ல என்பார்கள். அப்படி வித்தியாஸநடை காணப்படும் புஸ்தகம் நளோதயம் ஒன் றே. இதற்குக் காரணம் முன்னாலேயே சொல்லிவிட்டோம். நளோ தயம் என்பது பொறாமைப்பட்ட கவிகளுடைய வாயை அடக்கச் செய்யப்பட்ட கிரந்தம். மற்ற கிரந்தங்களெல்லாம் ஒரேமாதிரியே. அவைகளில் தென்படும் அதி நுட்பமான வித்தியாசங்கள் இவன் சிறுவயது, கிழவயது முதலிய பருவங்களுக்கேற்ற வித்தியாசங்க ளேயல்லாது வேறுவித வித்தியாசமல்ல.

அமரஸிம்மன்.

இந்த மகாவித்வான் ஒன்பது ரத்நங்களுக்குள் ஒன்ருய் விக்கிரமாதித்ய மகாராஜன் சபையில் உஜ்ஜயினீபட்டணத்தில் காளிதாஸன் முதலான கவிகளோடுகூட இருந்ததாக ஜனங்கள் சொல்லுகிருர்களென்று முன்னமே சொல்லியிருக்கிருேமே, அதைச் சற்று விசாரிப்போம்.

இந்த அமரஸிம்மன் என்பவர் ஸம்ஸ்கிருதபாஷையில் நிகண்டு பண்ணியிருப்பவர்களுக்குள் முக்கியமானவர். காளிதாஸ மகாகவியினுடைய புஸ்தகங்களில் காளிதாஸன் அமரஸிம்மனுக்கு முன்னே இருந்ததாகச் சில அடையாளங்கள் தெரியவருகின்றன. அமரஸிம்மனுடைய நிகண்டுவில் கூறிய பொருள், திணை, பால் இவைகளுக்கு வித்தியாஸமாய்க் காளிதாஸன் சில பதங்களை வெகுவிடங்களில் பிரயோகித்திருக்கிருர். இதனுல் அமரஸிம்மன் என்பவர் காளிதாஸனுக்குப் பின்னிருந்தாகத் தெரியவருகிறது. இதை அனுசரித்து வடக்குதேசத்தில் "புத்தகயா" என்னும் ஊரில் ஒரு சிலாசாஸநத்தில் விக்கிரமார்க்க சகம் 1005-ம் வருஷம் அமரதேவர் அந்தக் கோவிலைக் கட்டிவைத்ததாகக் கண்டிருக்கிறது. விக்கிரமார்க்க சகம் 1005-வது வருஷம், கி. பி. 949க்கு சரியானவருஷம். இதனுல் வெளிப்படுவதென்னவென்ருல் கி. பி. 949-ம் வருஷம் அமரஸிம்மன் பிரபலதசையில் இருந்துகொண்டு பவுத்தர் கோவிலைக் கட்டினுரென்றும், அவர் சற்றேறக்குறைய அதேகாலத்தில் தமது நிகண்டுவைச் செய்திருக்கவேண்டுமென்றும் தோன்றுகிறது. புத்தகயாவில் நமக்கு இப்பொழுது அகப்பட்டிருக்கும் சாஸனரீதியாய் அமரஸிம்மன் காளிதாஸனுக்கு 450 வருஷத்திற்குப்பின் இருந்ததாகவும் அவர் பவுத்தமதஸ்தர் என்றும் தெரியவருகிறது. நவரத்நங்களில் ஒன்ருய் இவனைச் சொல்வதில் இவன் வேறுமதஸ்தனுயிருந்தபோதிலும் நமக்கு ஆக்ஷேபமொன்றுமில்லை. ஆனுல் இவன் உஜ்ஜயினியில் ஆண்டுவந்த விக்ரமார்க்கன்நாளில் வசித்துவந்தவனல்ல, அதற்கு 100 வருஷத்திற்குப் பிந்தி இருந்தவன். இவன் நிகண்டு தவிர வேறு பல கிரந்தங்களும் எழுதியிருந்தான். ஆனுல் அவைகள் பவுத்தர்களுக்கும், பிராமணர்களுக்கும் நடந்த சண்டையில் அழிந்துபோயின.

வராகமிகிரன்.

இவர் நமது தேசத்தில் சோதிஷசாஸ்திர வித்வான்களுக்குள் சிரோமணியாய்விளங்கி, பிரஹத்சாதகம், லகுசாதகம், பிரஹத்ஸம்ஹிதை முதலான பிரசித்த கிரந்தங்களை எழுதினவர். இவரையும் நவரத்நங்களில் ஒன்ருய் ஜநங்கள் கூறுகிருர்கள். ஆனுல் இவர் அமரஸிம்மனுக்கு 200 வருஷம்முந்தியிருந்தவர். வானசாஸ்திரமானது இதர தேசங்களைவிட நமது இந்துதேசத்தில் 1500 வருஷங்களுக்கு

முன் ஓங்கிவளர்ந்திருந்தது. இந்த வானசாஸ்திரத்தைக் கற்றறிந்தவர்கள் ரோமாபுரி யவநதேசம் முதலான இடங்களிலிருந்து இவ்விடம் வந்து அந்தசாஸ்திரத்தை நன்ருய்க்கற்றுக்கொண்டுபோனுர்கள். அவர்கள் எழுதிவைத்திருக்கிற ஆதாரங்களால் வராகமிகிரர் கி. பி. 504 வருஷத்தில் பிறந்து 587-வது வருஷம்வரையில் ஜீவித்திருந்ததாகத் தெரியவருகிறது. இவர் நெடுநாளிருந்தபடியால் வானசாஸ்திரத்திலும், ஜோஸ்யத்திலும் அநேக புஸ்தகங்கள் எழுதினுர். ஜோதிஷம் என்பதைத் தப்பாய் அர்த்தங்கொண்டு, கிரகணம் என்ருல் பாம்பு ஒன்று கிரகங்களை விழுங்குகிறதென்று ஜநங்கள்கொண்டிருந்த அபிப்பிராயத்தை முதலில் மாற்றமுயன்றவர் இவரே. இவரது சித்தாந்தங்களில் சிலவற்றை நாம் எடுத்துக்கூறுவோமாகில், இப்பொழுது அங்கிலேயர் வானசாஸ்திரத்திலிருந்து நாம் சற்று அதிகமாய்க் கற்றுக்கொண்டதாக எண்ணியிருக்கிருர்களே, அந்தச் செருக்கை இறக்கிவிடுவோம். சந்திரபிம்பம் சூரியனுக்கும் பூமிக்கும் மத்தியில் இருக்கிறதென்றும், ஒரேகாலத்தில் சூர்ய தேஜஸானது சந்திரபிம்பத்தின் ஒரு பாதியில்தான் விழுகிறதென்றும், மற்ருெரு பாதி இருட்டாயிருக்கிறதென்றும், கிரகணமென்பது கிரகங்கள் ஒன்றையொன்று மறைக்கும்பொழுது உண்டாகிறதென்றும், அந்த நிழலையே ராகு கேதுக்கள் என்று கூறி அவை கிரகங்களைக் கிரகிப்பதாக ரிஷிகள் வர்ணித்துக் கூறியிருக்கின்றனரென்றும் நமது முன்னோர்களுக்கு முதல் முதலில் தெளிவாய் எடுத்துக்கூறினவர் வராகமிகிரரே. அன்றியும் சந்திரகிரகணம் மேற்கிலிருந்து தொடுகிறதில்லையென்றும், சூரியகிரகணம் கிழக்கிலிருந்து தொடுகிறதில்லையென்றும் முதல் முதல் உலகத்துக்குப் போதித்தவரும் இவரே. சற்றேறக்குறையக் காளிதாஸன் காலத்தில் இவர் ஜீவித்ததாகச் சொல்லலாம்.

தன்வந்தரி.

இவர் வசித்தகாலத்திற்குச் சாஸநம் முதலிய உறுதியாய்ச் சொல்லக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனுல் இவர் எழுதியிருக்கும் வாக்கியநடை வராகமிகிரர் நடையைப் பல இடங்களில் ஒத்திருக்கிறபடியால் இவரும் அவர்காலத்திலேயே ஜீவித்திருக்கலாமென்று தோன்றுகிறது. வராகமிகிரர் கி. பி. 504 முதல் 587-வது வருஷம் வரையில் ஜீவித்திருந்ததாக முன்னமே சொல்லியிருக்கிறோமே. இவரும் சற்றேறக்குறைய அந்தக்காலத்திலேயே வாழ்ந்திருக்கலாமென்று அநுமானிக்கவேண்டியதாயிருக்கிறது. இவர் வைத்தியசாஸ்திரத்தில் அநேக கிரந்தங்கள் எழுதியிருக்கிருர்.

க்ஷபணகன், சங்கு, வேதாளபட்டன், வாருசி இந்நால்வர்களும் நவரத்நங்களில் சேர்ந்தவர்கள்தாம். ஆனுல் இவர்களை ஜநங்கள் நவரத்நங்களாகச் சொல்வதையும் இவர்கள் பெயரையும்தவிர அவர்களைப்பற்றி மற்ற வரலாறுகள் ஒன்றும் கிடைக்கவில்லை.

கடகர்ப்பரன்.

இவரும் நவரத்நங்களில் ஒருவர். இவர் கடகர்ப்பரமென்றெரு புஸ்தகம் மழைக்காலத்தைப்பற்றி வர்ணித்து எழுதியிருக்கிறார். இதுதவிர இவர் இருந்தகாலம் முதலியன ஒன்றும் தெரியாது.

டில்லிநகரத்திலிருந்த மயூரசிங்காதனம்.

இந்தியாவின் வயிரக்கற்கள் உலகத்தின் மற்ற இடங்களிலிருப்பவைகளைக்காட்டிலும் ஒளிவீசுவதில் மிகச் சிறந்தவைகள் என்பதிற் சந்தேகமில்லை. இந்தியாவில் மொகலாயஅரசர் ஆளுங்காலமாகிய 1658-ஆ௵த்தில் ஔரங்கஜீபு, தன் தகப்பன் ஷாஜிஹானைச் சிங்காதனத்தினின்று நீக்கிவிட்டுத் தான் அரசாட்சியைக் கைக்கொண்டபோது ஓர் நூதனமான எண்ணமுடையனாய், சிங்காதனத்தின் மேல் சக்கரவர்த்தி உட்கார்ந்துகொண்டிருக்கையில் ஒருமயில் தன் சிறகுகளை விரித்து நிழல்கொடுத்துக்கொண்டும், தலையால் ஏறெடுத்துப்பார்த்துக்கொண்டும் இருக்கும் பாவனையாக அவ்வவ்விடத்திற்குத் தக்கதாய் விலையுயர்ந்த நவமணிகளிழைத்து "டாக்டிடென்ஸ்" என்று துருஷ்கபாஷையில் பேர்பெற்ற மயூரசிங்காதனம் ஒன்று அமைக்கும்படிக் கட்டளையிட்டான். அந்தப் பறவைக்குள்ள இயற்கையான வர்ணங்களைக்காட்டக் கீழ்த்திசைநாடுகளில் மிக்க அபூர்வமாயும் சிறந்தவைகளாயும் ஆராய்ந்தெடுத்த கற்கள் பதிக்கப்பட்டன. பிரசித்தமாய்ச் சொல்லிக்கொள்ளும் "ஒளிமலை" என்று அர்த்தமுள்ள "கோஹினூர்" என்பதும், "சைனூய்மலை" என்று அர்த்தங்கொண்ட "கோஹிநூர்" என்பதும் ஆக இரண்டு மேலான வயிரங்கள் கண்களுக்குப் பதிலாய் அமைக்கப்பட்டன. இவ்வாறு அழகாய் உரு அமைக்கக் கட்டளையிட்ட அரசன் தனக்கு "சிங்காதனபூஷணம்" என்று அர்த்தங்கொள்ளும் ஔரங்கஜீபு எனப் புதுப்பெயர் ஒன்று வகித்துக்கொண்டான். அவன் 87வயது வரையில் இந்தச் சிங்காதனத்திலிருந்து அரசுசெலுத்தியதாகக் காணப்படுகிறது.

அவனுக்குப் பின்வந்த அநேக அரசரின் ஆளுகைக்குப் பிறகு அந்த மயூரசிங்காதனம் பிரிக்கப்பட்டு மகிமைகுன்றிக் கற்கள் பல வகைகளில் சிதறிப்போயின. நாதர்ஷா என்னும் பாரசிகத்தரசன் படையெடுத்து டில்லியைப் பிடித்துக்கொண்டு மயூரசிங்காதனத்தின் ரத்தினங்களைப் பறித்துக்கொண்டபோது "கோஹினூர்" என்னும் வயிரம் காணப்படவில்லை. அதைக் கண்டுபிடிக்க அவன் செய்த பிரயத்தனங்களெல்லாம் வீணாய்ப்போயின. கடைசியில் அந்தப்

புரத்திலிருந்த ஒருஸ்திரீ, தோல்வியடைந்த சக்கரவர்த்தி தரித்துக் கொள்ளுகிற தலைப்பாகைக்குள் மறைத்துவைத்துக்கொண்டிருக்கிறுரென்று, நாதர்ஷாவுடன் சொல்லி ரகசியத்தை வெளியிட்டாள். விலைமதிக்கக்கூடாத அந்த வைரக்கல்லை அடைவதற்காக நாதர்ஷா சாதுரியமான தந்திரம் ஒன்று செய்யவேண்டியதாயிற்று.

டில்லியின் பெருத்த பொக்கசங்களையெல்லாம் நாதர்ஷா கைக்கொண்டு சிங்காதனமிழந்த மொகலாய சக்கரவர்த்தியினிடத்தில் உடன்படிக்கைசெய்துவிட்டபடியால் விரோதஞ் செய்துகொள்ளக் கூடாமையாயிருந்தது. ஆகையால் சமாதானமான சிலநாள் கழித்து டில்லியில் நடந்த ஓர் பெரிய தர்ப்பாரில் நாதர்ஷா தனக்கும் சக்கரவர்த்திக்குமுண்டாயிருக்கும் விசுவாசத்துக்கு அடையாளமாக இருவரும் தலைப்பாகையை மாற்றிக்கொள்ளவேண்டுமென்று சக்கரவர்த்தியுடன் சொன்னுன். சமான அந்தஸ்துள்ள அரசர்கள் ராச்சியவிஷயமாய்க்கூடிய சபைகளில் இந்த ஏற்பாட்டைத் தப்பாமல் அனுசரித்துவருகிறது வெகுகாலமாய் வழக்கம். நாதர்ஷா திடீரென்று சொன்ன இதைக்கேட்டுச் சக்கரவர்த்தி பிரமித்துப்போய் யோசித்துத் தகுந்த யுக்திசெய்வதற்குச் சாவகாசம் இல்லாமல், நயவஞ்சனையாய்ச் சொன்ன அபிப்பிராயத்துக்கு உட்படவேண்டியதாயிற்று. நாதர்ஷாவின் பாகை வயிரங்கள் பதிக்கப்பட்டுப் பளபளவென்று பிரகாசித்தபோதிலும் அது வெறும் ஆட்டுத்தோலால் தலையை மறைக்கச்செய்த ஒரு பகடியாக இருந்தது. சக்கரவர்த்தி யாதொரு விசாரமும் திகிலுமுள்ளவனுகக் காட்டவேயில்லை. அவனுடைய முகத்திலும் பாவனையிலும் யாதொரு வித்தியாசமும் தோன்றுமையால் நாதர் தான்செய்த உபாயம் நிஷ்பலனுனதாகவும் தான் மோசம்போனதாகவும் நினைக்கும்படியாயிற்று. பிறகு தன் கூடாரத்துக்குப் போய்ச் சக்கரவர்த்தியின் தலையணியைப் பிரித்துப்பார்த்து, தான் ஆசைப்பட்ட பளபளப்புள்ள அந்த வைரத்தைக்கண்டு சந்தோஷத்தால் "கோஹினூர்" என்று உரத்துச்சொன்னுன்.

1849-ஆண்டில் பஞ்சாப்நாட்டை இங்கிலீஷ்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டபோது லாகோர் துரைத்தனத்தார் இங்கிலீஷ்காரருக்குக் கொடுக்கவேண்டிய கடனில் ஓர் பாகத்திற்காக லாகோர் பொக்கசத்தைக் கைப்பற்றுகையில், கோஹினூர் என்னும் வயிரத்தை இங்கிலாந்துதேசத்து மகாராணிக்கு வெகுமதியாகக் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடுசெய்யப்பட்டது. அப்போது அதன் சரித்திரசம்பந்தமாய் நேர்ந்தவைகளிலெல்லாம் கடைசியும், அதிக விந்தையுமான ஓர் சங்கதி நடந்தது. ஈஸ்டு இந்தியா கம்பனி எனும் சங்கத்தார் அந்த விலையில்லா வயிரத்தைப் பஞ்சாப்நாட்டைக் கட்டிக் காக்கும்படி நியமித்திருந்த பிரக்கியாதிபெற்ற லாரென்ஸ் பிரபு வசத்தில் ஒப்புவித்தார்கள். அதை அவர் பெற்றுக்கொண்டு தன்

அரைச்சட்டையிலிருந்த சாக்கில் வைத்துவிட்டு அதைப்பற்றிப் பிறகு கவனிக்காமலிருந்துவிட்டார். பிறகு வீட்டுக்குப்போய் விருந்து சாப்பிடுவதற்காகப் போகவேண்டியிருந்தமையால் வேறு உடுப்புபோட்டுக்கொண்டு முன்னிருந்த அரைச்சட்டையைக்கழற்றிப் பக்கத்தில் எறிந்துவிட்டார். கொஞ்சகாலம்கழித்து மகாராணியிடமிருந்து "கோஹினூர்" என்னும் வயிரத்தை உடனே அனுப்பும்படி கவர்னர் ஜெனராலாயிருந்த டால் ஹௌஸி பிரபுவுக்கு உத்தரவு வந்தது. அப்போது லாரென்ஸ் தன் சகோதரராகிய ஹென்றி லாரென்ஸைப்பார்த்து அதை அனுப்பிவிடும்படி சொன்னார். இந்த ஹென்றி இந்தியாவைச் செயிக்கச்செய்த சண்டைகளில் ஆயுதம்பிடித்துத் தானும் சண்டைசெய்துமகிமைபெற்ற சேனாபதி. ஜான் லாரென்ஸ் சொல்லக்கேட்டதும் ஹென்றியானவர் "வயிரக்கல் தங்களிடத்தில் இருக்க நான் எப்படி அனுப்பக்கூடும்" என்றார். லாரென்ஸ் திடுக்கிட்டுத் தன் அஜாக்கிரதையைப்பற்றி மிகவும் வெறுத்துக்கொண்டு திகைத்து மனங்கலங்கி நின்றார். சிறிதும் பெரிதுமான விஷயங்களைத் தீரவிசாரித்து ஆய்ந்தோய்ந்து பார்த்தறிவதில் தீர்க்கமான யோசனையும், இரும்பையொத்த திடசித்தமுமுள்ளவரும், இந்தியா ராச்சியத்தை இங்கிலீஷ்காரருக்குக் காப்பாற்றிக்கொடுத்த பல பராக்கிரமமுள்ள தலைவருமான ஜான் லாரென்ஸ் சிறந்த ரத்தினத்தை மறந்து அசட்டைசெய்துவிட்டது ஒரு விந்தைதான். ஆயினும் அது அவர்வைத்த இடத்திலேயே இருந்தது. அவர் வாழ்நாள் சரித்திரம் எழுதிய சரித்திரக்காரர் லாரென்ஸ் சொன்னதாக உற்சாகமுண்டாகும்படி அடியில் வருமாறு எழுதியிருக்கிறார். அதாவது: "துருக்கனுடைய பகடியிலாவது மொகலாயருடைய மகுடத்திலாவது ஜொலித்துக்கொண்டிருக்கும்போதும், பாரசீகர், ஆப்கன், அல்லது சீக்குஜாதியார் நாட்டை ஜெயிப்பதற்காகக் கத்தியை உருவினகாலத்திலும், என் அரைச்சட்டைச் சாக்கில் மறதியினால் வைத்துவிட்டபோதிருந்தாற்போல் இவ்வளவு அதிசயமான கஷ்டமும், கண்ணிற்காணாமல் போய்விடும்படியான அபாயமும் அதற்கு நேரிட்டிராது" என்பதாம்.

இப்பொழுது கோஹினூர் என்னும் வயிரக்கல்லானது நமது மகாராணியாருடைய உவிண்ட்ஸர் மஹல் என்னும் அரண்மனையில் காப்பாற்றப்பட்டிருக்கிறது. அதைப்போல் அமைந்த உருவத்தை லண்டன்மாநகரத்துக் கோட்டையிலுள்ள ஆபரணசாலையில் விரும்பியவர்கள் போய்ப் பார்க்கலாம்.

வாஸவதத்தை என்னும் பெண்மணி.

(தொடர்ச்சி.)

கௌமுதீ மகோற்சவம் வந்ததுகண்டு அக்காலத்தில், முன் நிறுத்தி வைத்திருந்த உதயனசரிதமென்னும் நாடகத்தின் பிற்பாதியை ஆடும்படி தன் அந்தப்புரத்துப் பெண்களுக்கு வாஸவதத்தை கட்டளையிட்டிருந்தாளெனச் சென்ற சஞ்சிகையிற் சொன்னோமே. அவ்வண்ணமே ஆட்டத்திற்கு வேண்டிய பாத்திரங்கள் யாவும் சித்தமாயிருக்கவேண்டுமென முன்னமே திட்டஞ்செய்து குறித்தகாலத்தில் வாஸவதத்தை ஸாங்கிருத்தியாயனியுடன், அவள் செய்த நாடகத்தின் பெருமையைப் பலவாறு வியந்துகொண்டே, பரிஜனங்கள் பலரும் சூழ நாடகசாலைவந்து சேர்ந்தாள். ரத்தினங்கள் இழைத்த பொற்கம்பங்கள் நாட்டி இடையிடையே முத்துமாலைகள் தொங்க விட்டுத் தேவேந்திரசபையைப்போல அந்நாடகசாலை வெகு விசித்திரமா யிருந்தது. அவ்விடம் சேர்ந்தவுடனே மகாராணியார் தான் அணிந்துகொண் டிருந்த பூணாரங்கள் அனைத்தையும் கழற்றிக்கொடுத்து அவ்வாபரணங்களை அணிந்துகொண்டு ஆரணியகை தனது வேஷத்தைத் தரிக்கவேண்டுமென வும், வத்ஸராஜன் சிறைப்பட்டிருந்தபோது உஜ்ஜயினியில், நளகிரியென் னும் யானை மதம்கொண்டு யார்க்குமடங்காது கட்டுத்தறியை முறித்துக் கொண்டு கொடுந்தீமை செய்யத்தலைப்பட, வத்ஸராஜன் அதைப் பிடித்து அடக்கி விலங்கிட்டமையால், அதற்காகப் பிரத்தியோதராஜனால் அவனுக் குப் பரிசாய் அளிக்கப்பட்ட பூஷணங்களைப் பூண்டு மனோரமை வத்ஸரா ஜன் வேஷத்தைத் தரிக்கவேண்டுமெனவும் உத்தரவுசெய்தாள்.

இதிப்படிநிற்க, சன்னியாசிப்பெண்ணாகிய சாங்கிருத்தியாயனிக்கு ஆரணியகையின் வரலாறு அனைத்தும் நன்றாய்த் தெரியுமாதலால், நற்குணநற் செய்கைகள் அமைந்த அப்பெண்மணியை எவ்வகையிலேனும் வத்ஸராஜ னுக்கு மணம்புரிவிக்கவேண்டுமென்பது அவளது கோரிக்கை. அச்சுபகாரி யத்திற்கு அந்தப்புரத்திலுள்ள தாதிமார்களுள் சிலரும் மனமுவந்து தம்மாலி யன்றவளவு அதற்குவேண்டிய சகாயம்செய்து வந்தார்கள். ஆயின் அம்மு யற்சி வாஸவதத்தைக்குத் தெரிந்தால் ஒருவேளை அவளுக்குக் கோபமாகுமோ வென்று பயந்து எல்லோரும் அதை ரகசியமாகவே வைத்திருந்தனர்.

பிரகிருதத்தில் இந்நாடகம் ஆடும்படி ஏற்பாடுசெய்ததெல்லாம் அரசன் ஆரணியகையைப் பார்க்கவேண்டுமென்பதற்காகவேயன்றி வேறல்ல; மனோ ரமை அரசன் வேஷந்தரிப்பதென்று வெளிக்குமாத்திரம் பகிரங்கப்படுத்தி; ஒருவருக்கும் தெரியாமல் அரசனே நேரில்வந்து ஆட்டமாடுகிறதென்று அத ற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவ்வண்ணமே அரசன் ரகசியமாய்ச் சித்திரசாலைவந்து சேர, அங்கிருந்த மனோரமையானவள் ராணி யார் தன் கையில் கொடுத்த பூஷணங்களையெல்லாம் அரசனை அணிந்து கொள்ளச்செய்து, வேஷந்தரித்துக்கொண்டு பாத்திரப்பிரவேசம்செய்யும் மற்ற வேஷக்காரரைப்போலவே அவனை நாடகசாலைக்குப் போகவிடுத் தாள்.

ஆட்டம் ஆரம்பித்து, வத்ஸராஜன் வாஸவதத்தைக்கு நன்றாக வீணைவா சிக்கக் கற்பித்தால் அவனைச் சிறைமீட்டுவிடுவதாய் வாஸவதத்தையின் பிதா

வாக்களித்ததும், அவ்விதமாகவே வாஸவதத்தை அவனிடத்தில் கற்றுத்தேர்ந்ததுமாகிய கதை வெகு விநோதமாய் ஆட்டுவிக்கப்பட்டது. அவையெல்லாம் தனது பால்யசரித்திரமாகையால் அதுகண்டு வாஸவதத்தையும் மிக்க மகிழ்ச்சிகொண்டாள். ஆயின் ஒன்று,—தான் உத்தேசித்தகாரியம் கைகூடுநிமித்தம் ஸாங்கிருத்தியாயனி அந்நாடகத்தின் இடையிடையே அந்தந்த சந்தர்ப்பத்திற்கு அனுகுணமாய்ச் சாதுரியமான பொய்க்கதைகள் சேர்த்துவைத்திருந்தாள். அரசன் அந்தப் பிரகரணங்களை அபிநயித்து ஆடும்பொழுது, அவைகளைப் பார்த்துநின்ற வாஸவதத்தை, இவ்வாறெல்லாம் முன்னே எனக்கும் எனது வீணையாசிரியருக்கும் நடந்ததுண்டோ? இவையாவும் நீ செய்த குறும்பல்லவாவென்று ஸாங்கிருத்தியாயனியின்மேல் கோபங்கொண்டு, இப்பொய்க்கதையைப் பார்க்க எனக்குப் பிரியப்படவில்லை; நீயே பார்த்து மனமகிழ்ந்திரு என்று சொல்லிவிட்டு வெளியேபோக எழுந்தாள். அது கண்டு ஸாங்கிருத்தியாயனி, ராஜகுமாரி, இவ்வகையான காந்தர்வவிவாகம் சாஸ்திரசம்மதமும் பெரியோர்களால் கொண்டாடப்பட்டதுமேயாம். இதைக்கண்டு நீ வெட்கப்படலாகாது; நாடகமென்றால் இவ்வாறுதான் பொய்யும் மெய்யும் கலந்திருக்கும்; ஆட்டத்துநடுவில் ரஸபங்கம்செய்துவிட்டு எழுந்து போவது உசிதமல்லவென்று சொல்லித்தடுத்தாள். எவ்வளவு சொல்லியும் கேளாமல் அவள் எழுந்து வெளியேபோகப் புறப்பட, அவளுடைய தோழியான இந்தீவரிகையும் பின்தொடர்ந்து சென்றாள். செல்லுகையில் வழியிலே அரசனுடன் வந்த விதூஷகன் அலுத்துத் தூங்குவதை இந்தீவரிகை பார்த்து அதை அரசிக்கு அறிவிக்க, அரசி, ஓகோ, இங்கே இவனிருப்பதால் மகாராஜாவும் வந்திருப்பார்; இவனை யெழுப்பிக்கேட்டால் உண்மை தெரியவருமென்று சொல்லி அவனை யெழுப்பினாள். அவன் குறைத்தூக்கத்தால் கண்ணைத் திறவாமல் மூடியகண் மூடினபடியே, எழுப்பியது இன்னாரென்றும் பாராமல் முன் நினைவுகொண்டு, மனோரமே, மகாராஜா கூத்தாடிவிட்டு வந்துசேர்ந்தாரா, இன்னும் ஆடுகிறாரா என்றான்.

அவ்வாய்மொழியைக் கேட்ட வாஸவதத்தை மிக்க விசனமடைந்து, ஓகோ, மோசம்போனேமே! என்று மனதில் நினைத்து, மகாராஜாவா ஆடுகிறது? மனோரமை யெங்கே என்று கேட்க, விதூஷகன், இதோ சித்திரசாலையில் வேடிக்கைபார்த்துக்கொண்டு உட்காந்திருக்கிறாளென்றான். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மனோரமை, அரசி வேறே எண்ணங்கொண்டு கேட்டதற்கு இவன் வேறே எண்ணிப் பதில்சொல்லி எல்லாவற்றையும் கலைத்துவிட்டானே என்று திகில்கொண்டிருக்க, அரசி கோபத்துடன், மனோரமே நன்றாய் ஆடினாய் என்றாள். மனோரமை நடுநடுங்கி அரசியின்காலில் விழுந்து, மகாராணியாரே, நான் யாதொரு தப்பிதமும் செய்யவில்லை; இவன்தான் என் ஆபரணங்களைப் பிடிங்கிக்கொண்டு வாசற்படியிலுட்காந்து என்னை வெளியே வரவொட்டாமல் தகைந்துவிட்டான்; நான் கூக்குரலிட்டேன், மத்தள ஓசையில் ஒருவருக்கும் என் கூச்சல் கேட்கவில்லையென்று சொல்லி வேண்டிக்கொண்டாள். அரசி அதுகேட்டு, எல்லாம் தெரிந்தது; ஆரணியகையின் சரிதமாகிய நாடகத்திற்கு வஸந்தகனே சூத்திரதாரனென்பது முன்னமே எனக்குத் தெரியும் என்றாள். அதுகேட்டு விதூஷகன், பெருமாட்டி, ஆரணியகை எங்கே, நான் எங்கே! தாமே யோசித்துப் பார்க்கலாமென்று சொல்ல, அரசி, மனோரமே இவனைப் பின்கட்டாய்க் கட்டி இழுத்துக்கொண்டு வா, இவனாட்டத்தைப் பார்க்கலாமென்று கட்ட

ளையிட, மனோரமை அப்படியே அவனைக் கட்டி, போக்கிரித்தனம் செய்த தற்குத் தகுந்ததண்டனை அடையவேண்டியதுதானே என்று சொல்லிக்கொண்டே இழுத்துக்கொண்டுபோனாள்.

அரசி பரபரப்புடன் மகாராஜாவினிடம் சென்று, மகாராஜனே, மன்னிக்கவேண்டும்; நான் மனோரமை என்று நினைத்து என் முடியிலிருந்த உற்பல மாலையால் ஆட்டத்தில் தமது திருவடிகளைக் கட்டிவைத்தேன்; பொறுக்க வேண்டுமென்று சொல்லி அக்கட்டை அவிழ்த்துவிட, ஸாங்கிருத்தியாயனி இதை எல்லாம் பார்த்து, நாடகம் வேறாய் இருக்கிறதே, இப்படிப்பட்ட இடத்தில் நம்மைப் போன்றவர்களிருப்பது தகாதென்று புறப்பட்டுப்போய் விட்டாள். அரசன் மனோரமையையும் விதூஷகனையும் கண்டு, ஓகோ, உண்மை தெரிந்துவிட்டதுபோலிருக்கிறதே என்று வெட்கி, தேவி கோப முற்றாளே, என்னசெய்யலாமென்று யோசித்துச் சற்று நிதானித்து, பிரிய முள்ள பெண்கள்நாயகமே, கோபத்தை விட்டுவிடவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அரசி, யார் கோபம்கொண்டிருப்பதென்று மறுமொழிகூற, அரசன், யாரென்றால் நீதான்; பிரீதியாகவே பார்க்கிறாயென்றாலும் கண்கள் சிவந்திருக்கின்றன; வாக்கு மதுரமாயிருக்கிறதென்றாலும் திடறுகின்றது; பெருமூச்சைத் தெரிய ஒட்டாமல் நீ மறைத்தாலும் மார்பு அசைவதினாலே தெரிந்துவிடுகிறது; தெளிவினால் நீ கோபத்தை மறைத்தாலும் அது நன்றாய்ப் புலப்படுகின்றது பார்; தயைசெய்து பொறுத்துக்கொள்ளவேண்டுமென்றான். அதுகேட்டு அரசி ஆரணியகையை இழுத்து, ஆரணியகே, நீ கோபித்துக் கொண்டிருப்பதாக நினைத்து மகாராஜா சமாதானஞ் செய்கிறார், எதிரேபோய் நில்லென்று தள்ள, ஆரணியகை நான் ஒன்றும் அறியேனே என்று சொல்ல, அரசி உனக்கு ஏதேனும் தெரியுமா, நல்லது உனக்குத் தகுந்த தண்டனை செய்கிறேன்; இந்தீவரிகே, இவளைப் பிடித்துக்கொள் என்றாள்.

விதூஷகன் அதுகண்டு, மகாராணியாரே, இப்போது கௌமுதீ மகோற்சவமாகையால் உன்னை வேடிக்கைசெய்யவேண்டுமென மகாராஜா இப்படி கூத்தாடினாரேயல்லது வேறல்லவென்று சொல்ல, வாஸவதத்தை, உங்கள் போக்கிரித்தனத்தைக் காண எனக்குச் சிரிப்பும் உண்டாகிறது என்றாள். அப்போது அரசன், அது மெய்யே, உன்னைக் கேலிசெய்வதற்காகவே யானிப்படி செய்தேன்; நீ கோபத்தை விட்டுவிடவேண்டுமென்று வணங்கி வேண்டிக்கொண்டான். என்ன சொல்லியும் அரசி கேளாமல், நாடகம் முடிந்து விட்டது; உள்ளே போகலாமென்று புறப்பட்டுப்போக, இந்தீவரிகை ஆரணியகையையும், மனோரமை விதூஷகனையும் கட்டி இழுத்துக்கொண்டு பின்செல்ல, எல்லாருமாய் அந்தப்புரம்போய்ச் சேர்ந்தார்கள்.

வாஸவதத்தை விதூஷகனைக் கட்டியிழுத்துக்கொண்டுபோனாளே, பின்பு என்னவாயிற்று என்பீர்களோ? சில நாழிகை கழித்து அவன் பரிதாபம் பொறுக்கமாட்டாமல் அரசி பச்சாத்தாபங்கொண்டு அவனைக் கட்டவிழ்த்து அவனுக்குச் சந்தோஷமாகும்படி மரியாதைசெய்து அனுப்பிவிட்டு, ஆரணியகைக்கு விலங்கிட்டு ஓரிருட்டறையில் ஒருவருமறியாமலிருக்கும்படி அவளைச் சிறைவைத்து, மனோரமைதவிர வேறே யாரும் அவளுடன் இருப்பது சரியல்லவென்று யோசித்து, இனி இப்படிப்பட்ட தப்பிதம் நேருமாயின் உன்னையே தண்டிப்பேனென்ன மனோரமைக்குத் திட்டஞ்செய்து அவளையே ஆரணியகைக்குத் துணையாக வைத்திருந்தாள். ஆனாலும், மகாராஜாவைப் பார்ப்பதற்கில்லாமற்போயிற்றே என்பதற்காக ஆரணியகைக்கு எவ்வளவு

துயரமுண்டாயிருந்ததோ, அவ்வளவு துயரம் தன்னை விலங்கிட்டுச் சிறை செய்ததற்காக அவளுக்கு உண்டாகவில்லை. இதனால் ஆரணியகை இரண்டொருமுறை தற்கொலை செய்துகொள்ளவும் துவக்கினாள்; ஆயினும் அப்படி செய்யவொட்டாமல் மனோரமை அவளுக்குப் பலவகையில் தேறுதல் சொல்லிவந்தாள். அதனாலேயே ஆரணியகை உயிரைவிடாமல் ஜீவித்திருந்தாள்.

வாஸவதத்தைக்கு உண்டான கோபம் தணியும்படி அரசன் பலமுறை வேண்டிக்கொண்டும் அவள் கோபம் மாறாமலே இருந்தபடியால், ஆரணியகையின்மீது அரசிகொண்ட கோபமும் கொஞ்சமேனுங் குறையவேயில்லை. ஆரணியகையைவிட்டுத் தான் ஒருநிமிஷம் பிரிந்தாலும் அவள் தற்கொலை செய்துகொள்ளுவாளென்னும் பயத்தினால் மனோரமை ஒரு நொடிப்பொழுதும் அவளைவிட்டுப் பிரியாமலேயிருந்தாள். அப்படியிருக்கையிலும் எப்பொழுதோ சிறிதளவு சமயம் கண்டுபிடித்து, அச்சமயத்தில் ஆரணியகைக்கு நேர்ந்த துயரத்தை அரசனுக்கு அறிவிக்கும்படி விதூஷகனுடன்மாத்திரம் சொல்லிவிட்டுவந்தாள்.

இதுநிற்க, மகாராணியின் சிறியதாயாராகிய அங்காரவதியென்பவள் வாஸவதத்தைக்கு ஒருகடிதம் எழுதியனுப்பினாள். அரசி அந்தக்கடிதாசியை வாசிக்கும்பொருட்டுக் காஞ்சனமாலையிடம் கொடுக்க, அவள் அதை வாசித்துப் பார்த்தாள்; அதில் திடவர்மன் ஸங்கதி யெழுதியிருந்தது. திடவர்மன் செய்தியைச் சிறிதேனும் மகாராணிக்கு யாரும் தெரிவிக்கக்கூடாதென்று முன்னமே வத்ஸராஜன் கட்டளையிட்டிருந்தபடியால், காஞ்சனமாலை அந்தச் செய்தியைச் சொல்ல மயங்கிநின்றாள். மயங்கவே என்ன விசேஷமோவென்று அரசி அதைத் தான் வாங்கிப் படித்தாள். அதில் "பெண்ணே வாஸவதத்தாய், என் உடன்பிறந்தாளே உன் தாயார், என் பர்த்தா திடவர்மா உனக்குச் சிறிய தகப்பனார், அவரைக் கலிங்க அரசன் ஒருவருஷமாய்ச் சிறைசெய்திருக்கிறான். உன் பர்த்தா இவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கும்போது, அவருடன் சொல்லிக் கலிங்கனை வென்று உன் சிறியதகப்பனாரை மீட்கும்படி செய்யாமல் நீ இப்படி உதாசீனமாயிருப்பது நன்றாயிருக்கிறதா" வென்று எழுதியிருந்தது. அதை வாசித்ததும் கண்ணும் கண்ணீருமாய் வாஸவதத்தை விசனமடைந்து மனங்கலங்கிநின்றாள். அது கண்டு அவளுக்குத் தேற்றரவு சொல்வதற்காகக் காஞ்சனமாலை போய் ஸாங்கிருத்தியாயனியை அழைத்துவந்தாள். ஸாங்கிருத்தியாயனி உடனேவந்து வாஸவதத்தையை நோக்கி, நீயேன் இப்படி விசனப்படுகிறாய் என்று கேட்க, அரசி அந்தக் கடிதத்தை அவளுக்குக் காட்டினாள். ஸாங்கிருத்தியாயனி அதைப்பார்த்து, அப்படியா, ஆனாலென்ன, வத்ஸராஜா அப்படிப்பட்டவரன்று; திடவர்மன் சிறைப்பட்டிருப்பதும், அவர் உனக்குச் சிறியதகப்பனார் என்பதும் மகாராஜாவுக்குத் தெரியும்; அவர் உதாசீனமாயிருக்கமாட்டார்; அதற்காக அவர் வேண்டிய உபாயம் செய்தேயிருப்பார்; நீ துக்கப்படவேண்டாமென்று தேறுதல் சொல்ல, அரசி, பகவதி, உனக்குக் கபடம்தெரியாது; என்னால் இப்போது மகாராஜாவுக்குக் காரியம் இல்லையே; என் பந்துக்கள் எப்படிப் போனால் அவருக்கென்ன? என் சிறியதாயாருக்கு இது தெரியாது; முன்போலவே நானிருப்பதாய் அவள் எண்ணிக்கொண்டிருக்கிறாள்; அதைப்பற்றி இப்படி எழுதினாள். நீ நாடகசங்கதி தெரிந்திருந்தும் இப்படி சொல்லுவது ஆச்சரியமாயிருக்கிறது என்ன, ஸாங்கிருத்தியாயனி, ஆனாலென்ன கௌமுதீமகோற்சவத்தில் வேடிக்கைசெய்ததுதானே என்றாள். அரசி, மெய்தான்; இவ்வ

ளவு ஸ்திதியிலிருந்தும் நான் பிராணனை விடாமல் வைத்துக்கொண்டிருப்பதற்காக என்னை நீ பரிஹாஸம் செய்யவேண்டியதுதான்; இப்படி நீ சொல்லிச் சொல்லித்தான் என்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டாய் என்று சொல்லி அழத்துவக்கினாள். அதுகண்டு ஸாங்கிருத்தியாயனி, ராஜபுத்ரி, என் வீணே விசனப்படுகிறாய்! வேண்டாம்; வத்ஸ ராஜன் சும்மா இருக்கமாட்டார்; அதற்குவேண்டிய முயற்சிகள் ரகசியத்திலேயே நடந்துகொண்டிருக்கும்; காரியமுடிந்தபின்பு அவரே நேரில்வந்து ஸந்தோஷ சமாசாரம் சொல்லி உன்னைச் சமாதானப்படுத்துவார் என்றுகூற, அரசி, இவையெல்லாம் உன் மனோராச்சியமேயன்றி நடக்கப்போகிற காரியமல்லவென்றாள்.

இங்கு இப்படியிருக்க அரசன் விதூஷகன்மூலமாய் ஆரணியகையின் செய்தியைத் தெரிந்துகொண்டு, அவளை விடுவிக்கும் உபாயமென்ன? தேவியின் கோபந்தணிந்தாலன்றி அவளை விடுவிக்கமுடியாதே. தேவியைச் சமாதானப்படுத்துவதெப்படியென்று இவ்வாறு பலவிதமாய் ஆலோசனைசெய்து, கடைசியில் தானே நேராகச்சென்று அவளைச் சமாதானப்படுத்தவேண்டுமெனத் தீர்மானித்து, விதூஷகனையும் அழைத்துக்கொண்டு அந்தப்புரத்துக்குச் சென்றான்.

அப்பொழுது அவ்விடத்தில் வாஸவதத்தை தன் சிற்றம்மையினிடமிருந்து வந்த கடிதத்தைப்பார்த்து மிக்க விசனமடைந்து ஸாங்கிருத்தியாயனியுடன் அங்கலாய்த்துக்கொண்டிருக்கிற தருணம். அரசன் அவ்விடம்போய்ச் சேர்ந்து தேவி மிகவும் மனங்கலங்கியிருப்பதுகண்டு அவளைப் பலவிதமாய் இன்சொற்சொல்லிச் சமாதானப்படுத்தப்பார்த்தான். எவ்வளவு சொல்லியும் அவள் கேளாமல் அழுதகண்ணும் சிந்தியமூக்குமாகவே இருப்பதுகண்டு அரசன், என் கண்மணியே! உன்னைப் பார்க்க எனக்கு மிகவும் மனத்துயரமுண்டாகின்றது; இனி இவ்வாறிருக்கலாகாது; எவர்மேல் ஏதுகுற்றமிருந்தாலும் பொறுத்துக்கொண்டு முகமலர்ச்சிகொள்ளவேண்டும் என வேண்ட, அரசி, மகாராஜாவான தமக்குத் துக்கமொன்றுமில்லை; சுகமேயிருக்கிறீர்கள். துக்கப்படுகின்றவர்களைப்பற்றிய விசாரம் தமக்கேது? வீணான இச்சகவார்த்தைகளை யேன் பேசுகிறீர்கள் என்றாள். அது கேட்டு ஸாங்கிருத்தியாயனி மகாராஜனே, இவள் துக்கத்திற்குக் காரணம் வேறு என்றுசொல்ல, ராஜா பரபரப்புடன் அது என்ன என்னவென்று கேட்க, அவள் அந்தக்கடிதாசியைக்காட்ட, அரசனும் அதை வாசித்துப்பார்த்து, இதுதானே; இதற்கு இவ்வளவு துயரமேன்? இது முன்னமே எனக்குத்தெரியும். காரியம் முடிந்தபின்பு சந்தோஷ சமாசாரத்தைத் தேவிக்குச் சொல்லவேண்டுமென்றிருந்தேன். இந்தக்கொடியனான திடவர்மன் விஷயத்தில் நான் சும்மாவிருப்பேனா? அங்கிருந்து சமாசாரம்வந்து சில நாளாயிற்று. "நமது சேனைகள் கலிங்கன் ஊரை முற்றுகைபோட்டுக்கொண்டன. அதன்மேல் அவன் இருக்க இடமில்லாமல் அகழில் ஒளித்துக்கொண்டிருக்கிறான்" என்று முன்னே சமாசாரம்வந்தது; அவனைக் கட்டிவிட்டதாகவோ கொன்றுவிட்டதாகவோ இப்போதோ நாளைக்கோ செய்திவரும் என்றான். அதுகேட்டு ஸாங்கிருத்தியாயனி, தேவி, மகாராஜா சும்மா இருக்கமாட்டாரென்று முன்னமே சொன்னேனே பார்த்தாயா என்று உரைக்க, வாஸவதத்தை அப்படியாயின் வெகு சந்தோஷம் என்றாள். இவர்களிப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே வாசற்காப்போன் வந்து அடிபணிந்து, மகாப்பிரபுவே, நமது சேனாபதி விஜயசேனனும் திடவர்மன் கஞ்சுகி விநயவசுவும் வந்து தமக்குப்

பிரியமான சமாசாரம் சொல்லக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றான். அவர்களை உடனே அழைத்துவரும்படி அரசன் கட்டளையிட்டான்.

அச்செய்தி கேட்டு வாஸவதத்தை ஸாங்கிருத்தியாயனியைநோக்கி, அம்மா, மகாராஜா என்னிஷ்டத்தை நிறைவேற்றினாரென்று நினைக்கிறேன் என்ன, ஸாங்கிருத்தியாயனி, நான் வத்ஸராஜன்மீது பக்ஷபாதமாய்ப்பேசுகிற வளன்றோ? அதைப்பற்றி என்னைக் கேட்பானேனென்றாள். கஞ்சுகியும் விஜயசேனனும் வரும்போது விஜயசேனன் கஞ்சுகியைநோக்கி மகாராஜாவைப் பார்க்கவேண்டுமென்று நினைத்துவரும்போதே வெகுசுகமும் ஆனந்தமும் உண்டாகிறதுஎன்ன, கஞ்சுகி, ஆம், சேவகர்கள் எல்லாருக்குமே மகாராஜாவைப் பார்ப்பதென்றால் சந்தோஷமாகவேயிருக்கும்; மஹாராஜாவின் கட்டளைப்படி யுத்தஞ்செய்து சத்துருக்களை வென்றுவந்திருக்கிற உமக்குச்சந்தோஷமுண்டாகத் தடையென்னவென்றாள். இவ்வாறு பேசிக்கொண்டே அரசன்முன் வந்து இருவரும் அரசனுக்கு வந்தனஞ்செய்ய, அரசனும் அன்புடன் சேனாபதியை அணைத்துக்கொண்டான். கஞ்சுகி, அரசியைநோக்கி, தேவீ, மகாராஜாவின் உத்தரவுப்படி விஜயசேனன் கலிங்கனைக் கொன்று திடவர்மனை ராஜ்யத்திலே நிலைநிறுத்தினார் என்றாள். அதுகேட்டு வாஸவதத்தை ஸாங்கிருத்தியாயனியைநோக்கி அம்மா, நீ இந்தக் கஞ்சுகியை அறிவாயாவென்ன, ஸாங்கிருத்தியாயனி அறிவேன் என்றாள்.

அரசன் விஜயசேனனைக் கொண்டாடி தேவியைப்பார்த்து, திடவர்மன் சுகமேயிருக்கிறாரென்ன, வாஸவதத்தை எல்லாம் தமது பெருமையே என்றாள். இப்படி எல்லாரும் சந்தோஷமாயிருக்கையில், விதூஷகன் அவர்களை நோக்கி, இப்படிப்பட்டகாலத்தில் இரண்டு மூன்று காரியம் முக்கியமாய்ச் செய்யவேண்டும். அவையாவன: குருபூஜை, பிராமணபூஜை, சிறைமீட்டல் இவைகளாம். மகாராணியிஷ்டம் எப்படியோ என்றான். அதுகேட்டு அரசன் விதூஷகனை ஆநந்தித்துநிற்க, அரசி ஸாங்கிருத்தியாயனியைப்பார்த்து, ஆரணியகையை விடுவிக்கலாமா என்ன, ஸாங்கிருத்தியாயனி, அய்யோ பாவம், அந்தப்பெண்ணைச் சிறைசெய்திருப்பதில் பயனென்ன, உடனே விடுவிக்கலாமென்றாள். அரசி, அப்படியானால் நீ போய் அவளை விடுவி என்ன, ஸாங்கிருத்தியாயனி அப்படியேயென்று புறப்பட்டுப்போய் அரசி கட்டளைப்படி அவளை விடுவித்துவிட்டுப் பிறகு ஒரு யோசனைசெய்தாள். அதாவது, இங்கே நாம் இவளை விடுவித்துப் பயனென்ன? இவளைக் கஞ்சுகி பார்த்தாலல்லவோ காரியம் கைகூடும். இங்கேயிருந்து ஆவதென்ன? இப்போது இவள் அங்கேபோகக் காரணமுமில்லையேயென்று யோசித்து, கடைசியாய் ஒருவிதமாக முடிவுசெய்துகொண்டு அதை ஆரணியகைக்கும் மனோரமைக்கும் தெரிவித்தாள். அதன்படியே மனோரமை, அரசன் அரசி கஞ்சுகி இவர்கள் பேசிக்கொண்டிருக்கிற இடத்தில் போய்ப் பதுங்கிக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது கஞ்சுகி மகாராஜனைநோக்கி, "தம்மாலே என் பிராணன் நிலைபெற்றதாகையாலே அதைத் தாம் இஷ்டப்படி உபயோகப்படுத்திக்கொள்ளலாம்" என்று திடவர்மன் விண்ணப்பம்பண்ணினாரென்று கூற, அதுகேட்டு அரசன் தலையைக் குனிந்துகொண்டிருக்கையில், விஜயசேனன், மகாபிரபுவே தம்மிடத்தில் திடவர்மன் வைத்திருக்கும் அன்பு சொல்லிமுடியாது என்றான். பின்பு கஞ்சுகி அரசனை நோக்கி, திடவர்மன் மற்றும் ஒன்று விண்ணப்பம்பண்ணிக்கொள்ளுகிறார். அதாவது,

எனது மகள் பிரியதர்சனேயை உமக்குப் பாணிக்கிரகணம் செய்துகொடுக்க உத்தேசித்திருந்தேன்; எனது துர்ப்பாக்கியத்தால் அவள் காணமல்போய் விட்டபடியால் உமது சம்பந்தம் விட்டுப்போகிறதேயென்று வெகுதுயரமாயிருந்தது; இப்போது தாம் வாஸவதத்தையை மணம்புரிந்துவிட்டபடியால் எனக்கு அந்தத் துயரமும் நீங்கிவிட்டது என்ருர் என்ருள். பிரியதர்சனே காணமற்போய்விட்டாளென்பது கேட்டதும் வாஸவதத்தை வெகு துயரத்துடன், கஞ்சுகீ, என் பிரியதர்சனே காணமற்போனவிதம் என்னவென்று கேட்கக் கஞ்சுகி, மகாராணி, முன்னே கலிங்கன் தொந்தரவு செய்தபோது எல்லோரும் இங்குமங்கும் ஓடிப்போய்விட்டார்கள். அங்கே பிரியதர்சனேயை யான் கண்டு இச்சமயத்தில் இவள் இங்கேயிருப்பது தகாதென்று அவளே அழைத்துக்கொண்டு வத்ஸராஜனிடம் வந்தேன். வழியில் விந்தியகேது வீட்டில் அவளே நிறுத்திவிட்டு, நான் அகஸ்திய தீர்த்தத்திற்கு யாத்திரைபோனேன். போய்த் திரும்பிவருவதற்குள்ளே யாருடையதோ சேனேகள் விந்தியகேதுவைக் கொன்றுவிட்டு அங்கே நகரமிருந்ததென்றே தெரியாமற்செய்துவிட்டன. அங்கே நான் முழுதும் தேடினேன், பிரியதர்சனே அகப்படவில்லே; எங்கோ போயினளோ, பின்பு ஒரு செய்தியும் தெரியவில்லே என்ருள். அரசி அதுகேட்டு எனது உடன்பிறந்தாள் எங்கேயோ காணமல் போய்விட்டாளேயென்று துக்கிக்கலானுள்.

அந்தச் சமயத்தில் திடீரென்று மனேரமை ஓடிவந்து, மகாராணி, பிராணன் போய்விடுகிற தருணமாயிற்றென்று கூச்சலிட, அரசி, மனேரமே பிரியதர்சனேக்காவென்ன, மனேரமை, இல்லேயில்லே, ஆரணியகை விஷபானம் செய்துவிட்டாள், பிராணன்போய்விடத் தருணமாயிற்றென்று சொல்லிக் காலில் விழுந்து அழுதாள். அரசியும், ஆரணியகையின் சமாசாரத்தில் பிரியதர்சனேயின் துக்கம் மறைந்துவிட்டது; ஜனங்கள் வீணுய் என்மேல் பழி கூறுவார்கள்; இப்போது உடனே இதற்குச் சிகிச்சை செய்விக்கவேண்டுமென்று யோசித்து, மனேரமாய், சீக்கிரமே நீ அவளே இங்கே அழைத்துவா, நமது மகாராஜா நாகலோகத்திலிருந்து விஷவைத்தியம் கற்றுவந்திருக்கிருர், இவரே சிகிச்சைசெய்வார் என்ன, மனேரமையும் அப்படியேயென்று போய் ஆரணியகையைப் பிடித்து அழைத்துக் கொண்டுவந்தாள்.

ஆரணியகை விஷம் தலேக்கு ஏறியவள்போலப் பாசாங்குசெய்துகொண்டே, தோழி, மனேரமே, நீயேன் என்னே இருட்டில் இழுத்துத்தள்ளுகிருய் என்ன, மனேரமை, விஷம் தலேக்கேறிவிட்டதே! மகாராணியார் சிகிச்சை செய்வார், சீக்கிரம் வாவென்ருள். அரசி, அரசன் கையைப் பிடித்துக்கொண்டு, மகாராஜனே சீக்கிரம் எழுந்திருக்கவேண்டும்; அய்யோ பாவம், இவ்வேழைப் பெண் உயிரை இழந்துவிடுகிருள்; சற்று தயைசெய்து இவளேப் பிழைப்பூட்டவேண்டும் என்ருள்.

இதற்குள்ளே கஞ்சுகி ஆரணியகையை நோக்கி, இவள் பிரியதர்சனே போலவே இருக்கிருளேயென்று ஐயங்கொண்டு, இவள் யாரென்று வாஸவதத்தையைக் கேட்க, இவள் விந்தியகேதுவின் மகள், அவனேக் கொன்று விஜயசேனன் கொண்டுவந்தாரென்று வாஸவதத்தை சொல்ல, கஞ்சுகி, அப்படியா சரி சரி! விந்தியகேதுவுக்குப் பெண்ணேது, பிள்ளேயேது? இவள்தான் பிரியதர்சனே; இவள் பிராணன் போய்விடப்போகிறதே என்று கீழேவிழுந்து புலம்பினுள்.

அப்பெண் பிரியதர்சனையென்பது தெரிந்தவுடனே வாஸவதத்தை, மகாராஜனே, எனது உடன்பிறந்தாள் உயிரிழந்துவிடுகிறாளே, சீக்கிரம் எழுந்திருந்து வைத்தியம் செய்யவேண்டுமென வேண்டிக்கொள்ள, அரசன், பயப்படாதே, இன்னும் கொஞ்சநேரம் பார்ப்போமென்றுசொல்லி, மனோரமே, இவளுக்கென்ன இஷ்டம் கேள் என்றான். மனோரமை, ஆரணியகாய் உனக்கிஷ்டமென்னவென்று கேட்க, அவள் பதில் ஒன்றும் சொல்லாமையாலே கையால் தொட்டு அசைத்து, சகி, உனக்கு இஷ்டம் என்னவென்று மறுபடி கேட்டதற்கு, ஆரணியகை, தழதழத்தகுரலாய், இப்போதுகூட மகாராஜாவைப் பார்க்கக் கொடுத்துவையாமற்போனேனே என்று சொல்லிக்கொண்டே தரையில் விழுந்துவிட்டாள். அப்போது விஷவேகம் ஆரணியகைக்கும், துயரமெல்லாம் அரசனுக்குமாயிருந்தன.

வாஸவதத்தை அதுகண்டு, அம்மா பிரியதர்சனே எழுந்திரு, மகாராஜா இதோ இருக்கிறார், நான் தெரியாமையினால் செய்ததைத் தப்பிதமாக நினைக்கலாகாது, அதற்காகக் கோபித்துக்கொண்டு என்னுடன் வார்த்தை சொல்லாமலிருக்கலாமா, தெரிந்துவிட்டபின்பு இனி அப்படி அபராதஞ்செய்யேன்; தெய்வமே யானுனக்கு என்னதப்பிதம் செய்தேன், என் சகோதரியை அநியாயமாய்ப் பிராணன்போக்கிவிடுகிறாயே, என்று புலம்பிப் பிரியதர்சனையின்மீது விழுந்தாள். அத்தருணத்தில் விதூஷகன் அரசனை நோக்கி, தோழா, நீ என்ன மூடன்போல் இந்த ஆபத்துவேளையிலும் சும்மா உட்கார்ந்துகொண்டிருக்கிறாய்; இது துக்கப்படக் காலமன்றே, கற்றவித்தையின் பிரபாவத்தைக் காட்டவேண்டும், எழுந்திருவென்ன, அரசன் ஆமாம், நான் இதுவரையில் மூடனாய்த்தான் இருந்தேன்; நல்லது, இதோ இவளைப் பிழைப்பூட்டுகிறேன்; ஜலம் கொண்டுவா என்றான். விதூஷகன் ஜலம்கொண்டுவந்து கொடுத்தான். அரசன் ஜலத்தை வாங்கிப் பிரியதர்சனையின்மீது தெளித்து மந்திரஜபம் செய்ய, பிரியதர்சனை மெல்ல எழுந்திருந்தாள். அவளெழுந்தது கண்டு அரசி சந்தோஷித்து, தெய்வாதீனம், எனது தங்கை பிழைத்தாளென்ன, விநயவசுவும் விஜயசேனனும் அரசன் சாமர்த்தியத்தைக் கண்டு வியந்தார்கள்.

பிரியதர்சனை அப்போது கொட்டாவிவிட்டுக்கொண்டே, மனோரமாய், நன்றாய்த் தூங்கினேன், ஒன்றும் தெரியாமற்போய்விட்டதே என, வாஸவதத்தை, இன்னும் கொஞ்சம் விஷவேகம் இருக்கிறதோவென்று அரசனைக் கேட்க, அரசன், ஆமாம், கண்களின் பார்வை இன்னும் இயல்பை அடையவில்லை; வாக்கு இன்னும் அவ்வளவு தெளிவாகவில்லை; மார்பின் நடுக்கம் இன்னும் விடவில்லை; உடம்பு மயிர்க்கூச்சும் புழுக்கமுமாயிருக்கிறது; இன்னும் கொஞ்சம் விஷமிருக்கிறது; சற்றுநேரம்போனால் எல்லாவிஷமும் போய்விடுமென்றான். கஞ்சுகி பிரியதர்சனையை வணங்கி, அரசன் மகளே, உனது பிதாவின் ஊழியக்காரியான வினயவசு நானென, பிரியதர்சனை, ஓகோ கஞ்சுகி, வினயவசுவா என்றாள். உடனே தன் தாய் தகப்பன்மார் சங்கதிகள் யாவும் ஞாபகத்திற்கு வந்துவிடவே, அய்யோ, அண்ணா அம்மாவென்று புலம்பலானாள். அதுகேட்டுக் கஞ்சுகி, அம்மணி நீ விசனப்படவேண்டாம், வத்ஸராஜன் தயவினால் நமது மகாராஜாவுக்கு இருந்த துயரமெல்லாம் விலகிவிட்டன; ராஜ்யமும் நிலைத்திருக்கிறது என்றுசொல்லித் தேற்றினாள். பின்பு அரசி அவளை அணைத்துக்கொண்டு இப்போதுதான் எனக்குத் திருப்தியாயிற்றென்றாள்.

"உன் தந்தையா, ஆம், உன் தந்தைதான்! இதெல்லாம் ஒன்றும் அவருக்குக் கவலையில்லை. அவர் ஒரு அற்பனுன தையற்காரன் மகனல்லவா? ஆ, அப்படிப்பட்ட ஈனஜாதியாருக்கு நான் அடிமைப் பட்டேனே; என் மூடத்தனத்தையல்லவோ பழிக்கவேண்டும். குப்பை உயருகிறதே, கோபுரம் தாழ்கிறதே."

"தாயே நீ என்னை எப்படிவேண்டுமானுலும் இகழ்ந்து பேசலாம்; அன்புள்ள எனது நல்ல தந்தையை இப்படிப் பேசத்துணியலாமா?"

"என்ன, அன்புள்ள நல்ல தந்தையா, ஆம் மெய்தான். தன்னருமையான மகனைச் சக்கிலியாக்க விரும்பினவர் நல்லவர்தாமே. உன் சகோதரியை ஒரு பெரிய பிரபுவுக்கு விவாகம்செய்வித்திருக்கிறதென்பதை அவர் மறந்தாரோ. உனது சகோதரன் என் கௌரவத்திற்குத்தக்கபடி விரைவிலே ராஜாங்கத்தில் ஒரு பெரியபதவி பெறப்போகிருன் என்பதும் அவருக்கு யோசனையில்லையா. அவர்களுடைய அந்தஸ்தையும் அபிவிர்த்தியையும் வெட்கக்கேடான உன்னுடைய நிலைமை கெடுத்துவிடுமென்பதை அவர் சிறிதும் கருதவில்லைபோலும். தன் சொந்த மகனுக்கு இத்தன்மையான பொல்லாத பழிப்பை உண்டாக்கியவர் அன்புள்ள நல்லதந்தையே அல்லவா?"

"தாயே அப்படியில்லை, அப்படியில்லை. வீணுய்த் தந்தையின் மேல் இப்படி பழிகூருதே, இதில் பிரவேசிக்கும்படி அவர் என்னை வற்புறுத்தவில்லை; எனக்காகவே வேண்டுமென்று வெகு வருத்தப்பட்டு இத்தொழிலைத் தேடும்படியாயிற்று. அவர் என்ன செய்வார். என்னிடத்தில் அன்பு அவருக்கு அதிகமே. என் சகோதரர்களைப்போல நான் அவ்வளவு புத்திசாலியல்லவாகிலும் யதோசிதமான அறிவுள்ளவனே என்று அவர் சொல்லுகிருர்."

"அறிவுள்ளவனு, ஆம், நீ அறிவுள்ளவனென்பதற்குச் சந்தேகம் என்ன? உனக்கு உன் தகப்பனுருண்டாக்கிய இழிவை அறிந்துகொள்ளவும்கூட அறிவில்லையல்லவா?"

"தாயே மெய்தான், உண்மையாய் உழைத்து வேலைசெய்வதில் வெட்கமுமில்லை, இகழ்ச்சியுமில்லை."

"உண்மையான தொழிலா? உனக்குச் சித்தப்பிரமம் பிடித்ததா என்ன? நல்லது, உன்னுேடு வாதாடிக்கொண்டிருப்பதிற் பயனென்ன. உன் தகப்பனுருடைய ஆஸ்தி இந்தத் தாழ்ந்த நிலைமை உனக்குக் கிடைக்கவேண்டியதாயிருந்தது. தன் கௌரவம் இத்தன்மையதென்ற மதிப்பும், தாயின் குலத்திற்கு ஒரு பழிப்பு உண்டாகக்கூடாதென்ற அபிமானமும் உனக்கில்லாவிடின் அதற்கு யாரென்னசெய்யலாம்."

"என்னருமைத்தாயே, இதனுல் உனக்காயினும் உன் குலத்திற்காயினும் ஒருபோதும் இழிவு உண்டாகாது. இத்தனைக்கும் நான்

இங்கே நிற்கப்போகிறவனன்று. நெடுந்தூரம் போய்விடப்போகிறேன். ஆதலின் தாயே, என்மேல் கோபம்கொள்ளாதே. முதலில் எனக்கு இவ்வுத்தியோகம் கிடைப்பதற்கே வெகு வருத்தப்படவேண்டியதாயிற்று. துவக்கத்தில் எனக்கும் இது சிறிது அருவருப்பாகவே யிருந்தது. என் தந்தை எனக்கு மற்றொரு உத்தியோகமும் தேடவழியில்லையென்று கண்ணும் கண்ணீருமாய்க்கூறியபொழுது, இதுதவிர வேறெதுவாயினுமாகட்டும், இதுவேண்டாம் என்று நானும் வேண்டிக்கொண்டேன். ஆயினும் அவர் என்னசெய்வார். என் சகோதரன் நல்ல புத்திசாலியாயும் சமர்த்தனாயுமிருக்க, நான் மந்த புத்தியாய்ப் பிறந்தேன். ஏதாயினும் ஒரு கிராம பாடகசாலையில் உபாத்தியாயத்தொழில் செய்வதற்குப் போதுமான யோக்கியதை சம்பாதித்துக்கொள்ளவும் திறமையில்லை. மேலும் ஒருவனுக்கு அடிமையாய் ஊழியஞ் செய்வதைப்பார்க்கிலும் சுதந்தரமாக வர்த்தகஞ்செய்து ஜீவிப்பது சிறந்ததென்று தந்தை சொல்லுகிறார். அவருடைய சம்பாத்தியமெல்லாம் என் சகோதரனுடைய படிப்புச் செலவுக்கே போதாமலிருக்கிறது."

"ஆயின் நீ சக்கிலித்தொழில் செய்து என் குலத்திற்கு இழிவு உண்டாக்கவேண்டுமென்றே துணிந்திருக்கிறாயா? ஒரு வேலையும் கிடைக்காதபக்ஷத்தில் பட்டாளத்திற்கு அனுப்பிவிடக்கூடாதா, கப்பல்களில் வேலைசெய்யும்படி விட்டுவிடக்கூடாதா?"

"தந்தை பட்டாளத்தையும் யோசித்தவர்தாம். அதற்கும் முதலில் பள்ளிக்கூடத்தில் படித்துப் பரீக்ஷை தேறவேண்டுமென்றார்கள். தாயே, பள்ளிக்கூடத்தில் சம்பளம்கொடுத்து என்னைப்படிப்பிக்க அவர்க்கு நிர்வாகமில்லையென்பது உனக்குத் தெரியுமே—"என்று சொல்லிக்கொண்டே அவன் கலகலவென்று கண்ணீர்விடலானான்.

பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கவும் அவருக்கு வகையில்லாமற்போயிற்று என்கிற பரிதாபமான பேச்சைக்கேட்டும் அவளுடைய கொடிய நெஞ்சு சிறிதும் கலங்கவில்லை. அவனுடைய தந்தைக்கு அவ்வளவு வறுமை நேர்ந்ததும் வீணுடம்பரங்களையும் பெருமைகளையும் கருதிய அவளுடைய மிதமற்ற செலவுகளினாலேயேயன்றி வேறல்ல.

அம்மகன் சொன்ன கடைசிவார்த்தைக்கு அவளொன்றும் மறுமொழி கூறவில்லை. அதற்கேற்ற பதில் அவள் மனதில் ஒன்றும் தோன்றவில்லைபோலும். அதனால் அம்மகன் பின்னும் சொன்னதாவது: "கப்பல்வேலைகளைப்பற்றியும் இதற்குமுன் நான் ஒன்றும் கற்றிருக்கவில்லை. அதுவன்றியும் எனக்கு வயது அதிகமாகிவிட்டது; இனிக்கப்பல்வேலையில் புகுவது கூடாது என்று தந்தையே சொன்னார். மேலும் முன்பணம்கட்டாமல் ஒருவனையும் அவ்வேலையில் ஏற்றுக்கொள்ளமாட்டோமென்கிறார்கள். அதற்குநமக்கு

முன்பணம்கொடுக்க உபாயமில்லையென்பது உனக்கே தெரியுமே. ஆகையால் நம்முடைய உறவினராகிய இவர் என்னைத் தானேவைத்துக்கொண்டு, எனக்கு வேண்டிய எல்லாச் செலவும் தானேகொடுத்து எனக்குத் தொழில் கற்பிப்பதாகச் சொல்லுகிறார். இவர் மிகவும் நல்லவர். இவர் என் தகப்பனாருக்கெழுதிய கடிதத்தை நீ படித்துப்பார்" என்றான். அது கேட்டு அவள் உக்கிராகாரமாய், "சக்கிலித்தொழில் செய்பவன் எழுதிய கடிதத்தை நான் படித்துப்பார்ப்பதில்லை. ஆ, அடா நீசப்பயலே, என் குலத்திற்குக் களங்கம் விளைவிக்கும்படி என் மகன் இழிதொழில்செய்யச் சம்மதிக்கப்பட்டிருக்கிறான் என்பதையா நான் படித்துப்பார்க்கிறது! நானொன்று சொல்லுகிறேன், கவனித்துக்கேள். உன் தகப்பனார் என்ன ஆலோசித்தாலும் சரி, நீ என்ன அற்பத்தொழில்செய்ய உடன்பட்டாலும் சரி; இத்தன்மையான இழிதொழில்மாத்திரம் செய்து என்குலத்திற்கு அவமதிப்பு உண்டாக்காதே. 'தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை' எனப் படித்திருக்கிறாயல்லவா. யாரென்ன சொல்லட்டும், என் பேச்சைத் தள்ளி இப்படிப்பட்ட காரியம் செய்யத்துணிவாயானால் நீ ஒருநாளும் க்ஷேமமாக வாழமாட்டாய்; தந்தை உன்னை எவ்வளவு வாழ்த்தினாலும் அதை என்சாபம் அழித்துவிடும் என்று உறுதியாக நினை" என்றாள்.

அவள் இவ்வாறு சொல்லுகையில், ஆ! ஆ! ஐயோ பாவம்! ஒன்றுமறியாத இப்பேதைப்பாலகனை நீ இவ்வாறு சபிக்கலாமா? எல்லோர்க்கும் பொதுவாய் ஸர்வஸாக்ஷியான கடவுள் ஒருவர் இருக்கிறாரென்பதை நீ மறந்தாய்போலும் என ஒரு சத்தம்கேட்டது. உடனே தெருக்கதவைத் திறந்துகொண்டு ஒரு மனிதன் உள்ளே நுழைந்தான். அவன் வயதுதளர்ந்து மெலிந்தவனாயினும், வெகு கம்பீரமான வடிவமுள்ளவனாயிருந்தான். அவன் அங்கே பேச்சாடின பெண்ணுக்குக் கணவனும், சிறுவனுக்குத் தந்தையுமாம். அவன் உடம்பு மெலிந்துபோனது அத்தனையாகக் கிழத்தனத்தாலன்று; மனிதர்களை உயிருடனே தகிக்கவல்லவையான, அவன் மனதில் குடிகொண்டிருந்த, பலவகைக் கவலைகளினாலேயாம்.

அவன் ஒரு சிறுகிராமத்திலே கிறிஸ்தவக்கோயிலில் வேதோபந்நியாசம் செய்கின்றவனாயிருந்தான்; அக்காலத்தில் அவனுடையபேரும் பிரசித்தியும் வெகுதூரம்பரவி, மேன்மேலும் வெகுசீக்கிரத்தில் அபிவிருத்தியடையும்படியான நிலையிலிருந்தான். அவன் சாதாரணமானவனன்று; மிகுந்த பாண்டித்தியமுடையவன்; பலகலைகளையும் கற்றுத் தேர்ந்தவன்; கம்பீரமாய்ச் சபைகளில் பேசும் தீரமும் வாக்சாதுரியமுமுடையவன்; உத்தமகுலத்திற் பிறந்தவன். இவைமுதலிய பலகாரணங்களால் அவன் மிகவும் உயர்ந்தபதவிக்கு வெகு சீக்கிரத்தில்வருவானெனத் தெளிவாக விளங்கியது. அப்படியாயின்

அவன் இத்தன்மையான கஷ்டதசையை அனுபவிக்கும்படியானது யாதுகாரணமென்பீர்களோ? அதைப்பற்றிய கதை பின்னால் சொல்லுகிறோம்.

அந்தப் பெரியமனிதனுக்கு லாரென்ஸ் வெபர் என்று பெயர். அவன் மாக்டபர்க்கு நகரத்துக்கு அருகில் ஒரு சிறிய காணியாட்சிக்காரனுடைய மகன். அவன் தன் நிலங்களைப் பயிர்செய்வதோடு தையல்வேலையும்செய்து ஜீவனம்பண்ணிவந்தான்.

லாரென்ஸ் என்பவன் ஒன்பது பிள்ளைகளுள் கடைசியானவன். மற்றப்பிள்ளைகளின் உபயோகத்திற்கே அந்தக்குடும்பத்து ஆஸ்திகள் செலவழிந்துபோனமையால், இந்தக் கடைசிமகனை ஆலயத்துக்கு வேண்டிய கல்விகள் கற்கும்படி ஏற்பாடுசெய்தனர். அவ்வண்ணமே அவன் 18-வது வயதில் ஒரு பரீக்ஷையில் தேறி, பிறகு கடவுளைப்பற்றிய வேதசாஸ்திரங்கள் கற்கும்படி ஹாவிவித்தியாசாலைக்குச் சென்றான். ஆயினும் அக்காலத்திலே ஜர்மனிதேசத்தில் பலகலகங்கள் நேரிட்டதனால் அந்தப்படிப்புச் செவ்வையாய் ஈடேறவில்லை.

இப்படியிருக்க ஒருவருஷத்திற்கெல்லாம் அவனுடைய தாய் தந்தையர் இரண்டுபேரும் அவனுடைய துர்ப்பாக்கியத்தால் இறந்துபோனார்கள். ஆயினும் அக்காலத்தில் சில பணக்காரப்பிள்ளைகளுக்குப் படிப்புசொல்லும்படி நேரிட்டதனால் அந்த வரும்படி அவனுடைய ஜீவனத்துக்குச் சிறிது ஆதாரமாயிற்று. அதைக்கொண்டு ஊக்கத்தைக் கைவிடாமல் படித்துத்தேறி 23-வதுவயதில் ஒரு பெரிய பரீக்ஷைகொடுத்து மிக்க கவுரவம் பெற்றவனாகி, காஸெல் நகரத்தில் ஒருபெரிய குருபீடத்திலிருந்த அம்மான் ஒருவருடைய ஆதரவைக்கொண்டு அவ்விடம்போய்ச் சேர்ந்தான். இந்த லாரென்ஸ் நீதி, நல்லொழுக்கம், உண்மை, உதாரம், தேசாபிமானம் முதலிய பல நற்குணங்கள் உள்ளவனாயிருந்தமையால் அவ்விருவரும் ஒருமனப்பட்டுச் செவ்வையாகவே வாழ்ந்திருந்தனர். இப்படியிருக்க அத்தேசத்தில் ஒரு யுத்தம் உண்டாக, அதில் சேரவேண்டாமென்று அம்மான் சொல்லியும் அதைக்கேளாமல் சுதேசாபிமானியான லாரென்ஸ் அதில் புகுந்தமையால் அவ்விருவருக்கும் மனஸ்தாபம் உண்டாயிற்று. அதுகாரணமாக, யுத்தத்தில் வெற்றிபெற்றபிறகு லாரென்ஸ் திரும்பிவந்து எவ்வளவு வேண்டிக்கொண்டும் கேளாமல், அவனை அங்கிருக்க வேண்டாமென்று அம்மான் துரத்திவிட்டான்.

அதன்பிறகு லாரென்ஸ் வெபர் பலவிடங்களில் அலைந்துதிரிந்து கடைசியில் ஓர் ஊர்போய்ச்சேர்ந்து அங்கே பல உபந்நியாசங்கள் செய்துகொண்டிருக்கையில், அவ்விடத்தில் ஒரு காணியாட்சிக்காரனுடைய மகளை மணம்புரிந்துகொள்ளும்படி நேரிட்டு, அவளுக்குச் சீதனமாகவந்த நிலத்தில் ஜீவனம்செய்துகொண்டிருந்தான். அவன் மிக்க வருந்தி உழைப்பவனாகையால் அவன் கையின்கீழ் அந்தப்

பூமி வெகு நன்ருய்ப் பலித்துவந்தது. ஆயினும் அவனுக்கு வாய்த்த மனையாள் குடித்தனத்தின் கருத்தறியாத வீணுடம்பாக்காரியும் கணவன் சொல்லைக் கேளாதவளுமாகி வெகுவாய்த் தந்தைவீட்டிலே வசித்துக்கொண்டிருந்தமையால் அவளால் அவனுக்கு அத்தனையாகச் சுகம் கிடைக்கவில்லை. ஆயினும் மாமனர் உயர்ந்த பதவியில் இருப்பதால் அவனுடைய சகாயத்தைக்கொண்டு விருத்தியடையலாமென நினைத்திருந்தான். லாரென்ஸினுடைய துர்ப்பாக்கியத்தால் அம்மாமன் வெகு சீக்கிரத்திலேயே இறந்துபோனதனல், அவனுடன் லாரென்ஸுக்கு இருந்த கோரிக்கையெல்லாம் அழிந்து உள்ளதைக்கொண்டு திருப்தியடைந்திருக்கும்படியாயிற்று. மனையாட்டி மாத்திரம் அவனுக்கு இணங்கி நடக்கத்தக்க நற்குணமுள்ளவளாயிருந்தால் அவன் அவ்வளவிலேயே திருப்தியடைந்திருப்பான். அதற்குப் பிரதியாய் அவள் கணவனைத் தன்கையில் ஒரு புதிய விநோதமான விளையாட்டுக்கருவிபோலவே பாவித்திருந்தாள்.

இவ்வாறிருக்கையில் அவர்களுக்கு முதலில் ஒருபிள்ளையும் பிறகு ஒருபெண்ணும் பிறந்தனர். அவர்கள் வெகுவாய்த் தாயின் மாதிரியை அனுசரித்தவர்கள். கடைசியில் எர்மன் என்ற எளிய பையன் ஒருவன் பிறந்தான். அவன் தந்தையின் தன்மையை அனுசரித்தவன். நாளளவிலே மூத்த மகனுக்கும் மகளுக்கும் யோக்கியவயது வந்தது. அதற்குள் தாயின் வீண் ஆடம்பாமான செலவுகளிலேயே அவர்களுடைய ஆஸ்தி அநேகமாய்ச் செலவழிந்துபோயிற்று. மிகுந்தது மகளின் கலியாணவரிசைக்கும் மூத்தமகனது உத்தியோகச் செலவுமுதலியவற்றிற்குமே போதாமல் அவர்கள் வைத்திருந்த புஸ்தகங்களையும் விற்கும்படியாக நேரிட்டது. ஆனதுபற்றிச் சிறியமகனைப் படிப்பிக்கவாயினும் கண்ணியமான ஒரு வியாபாரத்தில் பழக்கவாயினும் வழி யாதொன்றுமில்லாமற்போயிற்று. அதனுல் லாரென்ஸ் மிகவும் விசனமடைந்து, அம்மகனை எந்தவழியில் விருத்திக்குக் கொண்டுவருகிறதென்று விசாரமுற்றிருக்கையில், ஸாக்ஸனிதேசத்தில் பாதாக்ஷவேலை செய்துகொண்டிருந்த அவர்களுடைய சிற்றப்பன்முறையான பந்து ஒருவன் இவர்களுடைய க்ஷேமசமாசாரங்களைத் தெரிவிக்கும்படி எழுதிய கடிதமொன்று வந்தது. அதுகண்டு இந்த லாரென்ஸ் தன் குறைகள்யாவையும் விவரமாய் எடுத்து எழுத, அதற்குப்பதில் அந்த உறவினன், உம்முடைய பிள்ளைக்காக நீர் விசாரப்படவேண்டாம்; என்னிடம் அனுப்பிவிட்டால் நான் அவனைப்போஷித்து யோக்கியதையும் கற்பிக்கிறேன். என் வீட்டிலுள்ள பத்துப்பிள்ளைகளோடு அவனும் பதினோராவது பிள்ளையாயிருக்கட்டும். அவன் எனக்கு அதிகமன்று எனக் கடிதம் எழுதினுன். இந்தக் கடிதத்தின்மேலேதான் முன்சொல்லிய கொடிய வாக்குவாதம் உண்டாயிற்று. அதன்மேல் நடந்தது என்ன என்பீர்களோ? கேளுங்கள்:

கடைசியில் லாரென்ஸ் எவ்வளவுசொல்லியும் கேளாமல் அவன் பெண்ஜாதி, உன்னுடன் நான் ஒன்றும் பேசவில்லை; இம்மகன் என் பேச்சைக்கேளாமல் வேறுவிதமாகநடந்தால் மறுபடி நான் அவன் முகத்தை நோக்கவேமாட்டேன் எனக் கடிந்துபேசிப் போய்விட்டாள். அது கேட்டு லாரென்ஸ் தன் மகனைக் கட்டிக்கொண்டு, குழந்தாய், நாம் இவனைப் பழிப்பதில் பயனில்லை; நமது தரித்திரத்தையே பழிக்கவேண்டும்; எப்படியாயினும் ஆகட்டும்; உனக்கு ஒருகுறையும் உண்டாகாதிருக்கும்படி கடவுள் உன்னைக் கடாக்ஷிப்பாராக. நீ உன் சிற்றப்பனிடம்போய்த்தான் பிழைக்கவேண்டும்; வேறு வழியில்லையென்று கூற, அந்த மகன், உங்களைவிட்டுப் பிரியவேண்டுமேயென்கிற துக்கமொன்றேயொழிய அவ்விடம்போவதில் எனக்கு மற்றொரு துயரமுமில்லை என்றுசொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

காஸ்பர் என்னும் அந்தச் சிற்றப்பன் இச்சிறுவனைத் தன் சொந்த மகன்போலவே பாராட்டி மிகுந்த அன்புடன் போஷித்துத் தொழிலும் கற்பித்துவந்தான். அவன் பெண்சாதி பிள்ளைகளும் அப்படியே எர்மன் விஷயத்தில் ஐயோ பாவமென்று அதிக விசுவாசமாயிருந்தார்கள். ஆறுவருஷகாலம் எர்மன் அங்கேயே தொழில்கற்றுவந்தான். தொழில்கற்று நன்றாய்த் தேர்ந்தபிறகு அந்த யஜமானன் இச்சிறுவனை அவன் தாய்தந்தையர்களைப்போய்ப் பார்த்துவிட்டுவரும்படியனுப்ப, எர்மன் அவ்வண்ணமே தகப்பனிடத்திற்குச் சென்றான்.

அக்காலத்தில் எர்மனுடைய சகோதரன் பர்லின்நகரத்தில் நியாயசபைத்தலைவனாய்ப் பெரிய அதிகாரம்பெற்றிருந்தான். அதனால் அவனை இச்சிறுமகன் போய்ப்பார்த்தால் ஏதாவது நன்மைகிடைக்குமெனக் கருதித் தந்தையானவன் அவனைப்போய்ப் பார்த்துவிட்டு வரும்படிசொல்ல, தந்தைசொல் ஒவ்வொன்றையும் ஒரு மேலான நீதிமொழியாக மதிக்கும் உத்தமகுணமுடையவனான அச்சிறுமகன் அப்படியே ஆகட்டுமென்று உடன்பட்டு, தன் சகோதரனிருக்குமிடஞ்சென்று, இனியவார்த்தைகளால் ஒருகடிதமெழுதித் தான் காணவந்திருப்பதாகக் கொடுத்தனுப்பினான். அப்பொழுது யாரோ சில பெரியமனிதர்கள் அவனைப் பார்க்கவந்திருக்கிற தருணம். இக்கடிதத்தைப் பார்த்தவுடனே அந்த அண்ணன் மிகக் கோபங்கொண்டு ஒருகடிதமெழுதி, அதனுள் ஒரு ரூபாய்வைத்து மடித்துக் கொடுத்தனுப்பிவிட்டான். வெளியேபோய் எர்மன் அந்தக் கடிதத்தைப் பிரித்துப்பார்த்தபோது அதில் எழுதியிருந்ததாவது:—உனக்குச் சிறிதும் விவேகமில்லை; உன் அந்தஸ்து என்ன, என் அந்தஸ்து என்ன? நீயாவது இப்பொழுது இங்குவந்து என்னைப் பார்க்கவாவது; நீ இந்த நகரத்திலேயே வசிக்கக்கூடாது; வசித்தால் எனக்கு மிகவும் இகழ்ச்சி உண்டாகும்; உன்னால் நமது மாதாவின் மகா குலத்திற்கு இழிவு

நேர்ந்தது போதாதா; நீ எங்கேயாவது தூரதேசத்தில் ஓடிப்போய்ப் பிழை; வேண்டுமானால் ஒவ்வொருசமயத்தில் சிறிதுபொருள் உதவிசெய்கிறேன்; இன்று நீ என்னைப் பார்க்கவேண்டுமாயின் இராத்திரி இன்னவிடத்திற்கு வந்துசேர் என்று எழுதியிருந்தது. இத்தனைக்கும் அதில் கையெழுத்தில்லை. அதைப் பார்த்தவுடனே எர்மன் மனங்கசந்து, அந்தக் கடிதத்துடன் ரூபாயையும் அப்படியே நன்றாய்ச் சுருட்டி ஒருபையில் முடிந்து உறுதியாய்க் கழுத்திலே கட்டிக்கொண்டு, இனி இவனுக்கும் நமக்கும் செத்தால் தீட்டேயொழிய வாழ்ந்தால் உறவில்லையென்று நிச்சயித்து, அகதிக்கு ஆகாயமே துணையென்று கடவுளையே நம்பிக்கொண்டு அங்கிருந்து தேசங்கள்சுற்றப் புறப்பட்டான்.

போகும்போது வழியில் அங்கங்கேயுள்ள தொழிற்சாலைகளைப் பார்த்து அங்கங்குள்ள விசேஷங்களைத் தெரிந்துகொண்டும், தகுந்தவிடங்களில் தானும் தொழில்செய்து திரவியம் சம்பாதித்துக்கொண்டும், வாலிபத்தில் முழுமூடராயிருந்து வயதுவந்தபிறகு சிறந்த பண்டிதர்களான பல மகான்களைப்போலவே, இடையிடையே தான் வாலிபத்தில் கல்வி கற்றிராத குறையைத்தீர்த்துக்கொள்ளும்படி தேசபாஷைமுதலியவைகளையும் விநோதமாய்க் கற்றறிந்துகொண்டும் ஐரோப்பாவிலுள்ள பலதேசங்களும் சுற்றினான். அப்போதப்போது தகப்பனார்க்கும் பொருள் உதவிசெய்துவந்தான். இவ்வாறிருக்கத் தந்தை இறந்துபோனாரென்ற செய்திகேள்விப்பட்டு மிக்க விசனமடைந்து சுதேசம் திரும்பிவிட்டான்.

அவ்விடத்திலே மாக்டபர்க்கு நகரத்தில் ஒருசீமானுடைய மகள் பாதரக்ஷை தைப்பதுமுதலிய தொழில்செய்யும் தோல்வியாபாரசாலை வைத்திருந்தாள். அந்தத் தொழிற்சாலைக்கு அவள் பலதடவை பலபேர்களைக் காரியக்காரராக நியமித்திருந்தாளாயினும் அவர்களுள் ஒருவரும் உண்மையாக நடவாமையால் வியாபாரம் சரியாக நடந்தேறாமல் நஷ்டமும் நேரிடும்போலிருந்தது. அதனால் அவள் தன் தொழிற்சாலைக்குத் தகுந்த காரியதரிசி ஒருவன் வேண்டுமென விளம்பரஞ்செய்திருந்தாள். எர்மன் அவ்விடம் போனவுடனே இச்செய்தி கேள்விப்பட்டு அதற்குத் தான் ஒருவிண்ணப்பம் எழுதிக்கொள்ள, அவள் இவனுடைய யோக்கியதைகளைக் கேள்வியுற்று, வெகு சந்தோஷமாய் அவனைக் காரியதரிசியாக நியமித்துக்கொண்டாள். எர்மன் தோல்வியாபாரங்களில் மிகத் தேர்ச்சிபெற்றவனாகையால், இவன் கையின்கீழ் அந்த வியாபாரம் மிகவும் விருத்தியடைந்துவந்தது. வெகு சாசமானவிலைக்குச் சரக்குக் கிடைத்த ஒருசமயத்தில் அவன் தன் கைப்பொருளையும் கடனாகக் கொடுத்துச் சாக்குவாங்கி அதற்குப் பாடுபட்டானென்றால் அந்தத் தொழிற்சாலையை விருத்திக்குக் கொண்டுவருவதில் அவனுக்கு இருந்த ஆஸ்தையைப்பற்றி நாம் வேறென்ன சொல்லவேண்டும்.

அவனுடைய உண்மையான நடத்தைகளையும், யோக்கியதையையும், சாமர்த்தியத்தையும் கண்டு அந்தச் சாலையின் யஜமானி மிகவும் மகிழ்ச்சிகொண்டாள். அதனால் அவனையே தான் கலியாணஞ்செய்துகொள்ளவேண்டுமென்ற எண்ணமும் நாளளவிலே அவள்மனதில் உண்டாயிற்று.

அவளுடைய தொழிற்சாலை, இதற்கு இணை மற்றெதுவும் இல்லையென்னும்படியான, நிலைமைக்கு வந்தபிறகு ஒருநாள் எர்மன் அந்தச்சாலையின் யஜமானியை நோக்கி, நான் எத்தனைநாளைக்கு ஒருவன்கீழ் வேலைசெய்கிறது; சுயமாய் ஒரு தொழிற்சாலை ஸ்தாபிக்கவேண்டும்; எனக்குச் செலவுகொடு என்று கேட்க, அவள் அவனது குற்றமற்ற மனதைக்கண்டு மிகவும் மகிழ்ச்சிகொண்டு, இந்தச் சாலை உங்களுடையதேயன்றி என்னுடையதல்லவே; இதைவிட்டுத் தாங்கள் மற்றெங்கேபோவது என்று சொல்லி, தன் கருத்தை வெளியிட்டு வேண்டிக்கொண்டாள். எந்தவிதத்திலும் தடைசொல்ல முடியாமல் அந்தப் பெண்ணைக் கடைசியில் அவன் விவாகஞ்செய்துகொள்ளலானான்.

ஒருவருஷத்திற்கெல்லாம் அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு லாரென்ஸ் எனவே பாட்டன் பெயரை இட்டார்கள். அம்மகன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வெகு புத்திசாலியாயிருப்பதுகண்டு எர்மன், இச்சிறுவனை நன்றாய்ப்படிப்பித்து பாதரக்ஷைக்காரன் பிள்ளையும் பிரபுவாகக் கூடுமென்பதை நமது அண்ணனுக்குத் தெரிவிக்கவேண்டுமெனத் தீர்மானித்து, அதற்குவேண்டிய முயற்சிசெய்துகொண்டிருந்தான். பின்பு அவர்கள் நாளுக்குநாள் வர்த்தகத்தில் விருத்தியடைந்து மிகுதியாகப் பொருள்சேர்த்துக்கொண்டு, நற்குண நற்செய்கைகள் நிறைந்த நாயகமணிகள் என்று யாவரும் கொண்டாட வெகு கண்ணியமாக வாழ்ந்திருந்தனர்கள்.

இவ்வாறிருக்க, எர்மனுடைய சகோதரி பல துன்பங்கள் அனுபவித்து இறந்துபோனாளெனவும், தாய் கூழுக்கும் கந்தைக்குங்கூட வழியில்லாமல் அல்லாடித் தவிக்கிறாளெனவும் செய்தி தெரியவந்தது. இச்செய்தியை எர்மனுக்கு அறிவித்ததுகூட அவனுக்குத் தொழில்கற்பித்த சிற்றப்பனார். அதுகேட்டு எர்மன் மிக்கவிசனமடைந்து, தந்தை சமாதியைத் தரிசிக்கவேண்டுமென்று உத்தேசித்து அவ்விடம் சென்றான். அங்கே தாய் தவித்துக்கொண்டிருந்த தவிப்பைப் பார்த்து மனந்தாளாமல் தன் வீட்டில்வந்து சுகமாயிருக்கும்படியழைக்க, அவள், தான் கைப்பொருள்யாவும் செலவுசெய்து காப்பாற்றிய மூத்தமகனும் மகளும் தன்னைக் கைவிட்டசெய்திகளையெல்லாம் சொல்லிப் புலம்பி, தான் தெரியாமையால்செய்த பிழைகளைப் பொறுக்கும்படி வேண்டிக்கொண்டு அவனுடன் அவன் வீடுபோய்ச்சேர்ந்து சுக

மாயிருந்தாள். மருமகளும் மாமிவார்த்தைக்கு எதிர்வார்த்தை சொல்லாமல் அதிக விசுவாசத்துடன் அவளை ஆதரித்துவந்தாள்.

இதற்கு இடையிலே சிறுவனான லாரென்ஸ் அதிபுத்திசாலியாய் வெகு விரைவில் பல கலைகளையும் கற்றுத்தேர்ந்து பல பரீக்ஷைகளும் கொடுத்து மிகுந்த கவுரவம்பெற்றுவந்தான். எர்மன் தோல்வியாபாரம் செய்பவனாயினும், அவன் ஒருபெரிய தொழிற்சாலைக்குத் தலைவனாய் மிகுந்த நாணயமும் செல்வாக்கும் உடையவனாயிருந்தமையால், எல்லோரும் அவனை நன்குமதித்தனர்; பலர் அவனுடைய வாக்சகாயத்தையும் விசுவாஸத்தையும் வேண்டினர். பலவாறு சொல்லியென்ன? சுவதந்தரனான ஒரு பெரிய பிரபுவென்றே சொல்லத்தக்கவனாயிருந்தான். ஆயினும் சந்திரன்போல உலகமெங்கும் விளங்கிய அவனது கீர்த்தியில் ஒரேஒரு சிறிய களங்கம் அமைந்திருந்தது. அதாவது, அவன் தன் அண்ணனிடத்திலேகொண்ட கொடிய பகையேயாம். பல வருஷங்கள்வரையில் அவன் அண்ணனைப்பற்றி யாதொன்றும் விசாரிக்கவேயில்லை. அண்ணன் இறந்துபோய்விட்டதாகவே எண்ணி அவன் பெயரைக்கூட ஒருவரும் தன்முன் சொல்லக்கூடாதென்று திட்டஞ்செய்திருந்தான். அவனது அருமை மனையாட்டிக்குக்கூட அவன் இப்படியிருப்பது சரியல்லவெனவே தோன்றியிருந்தது.

இவ்வாறிருக்கையில் சிலகாலத்துக்குப்பிறகு அந்நகரத்து நியாயாதிகாரி ஒருவர் எர்மனுடைய அண்ணன் இறந்துபோனசெய்தியைத் தெரிவிக்கும்படி அவன்வீட்டுக்கு வந்தார். இச்செய்தியைச் சொல்லி இறந்துபோனவனுடைய குடும்பத்தைப் பாதுகாக்கும்படி எர்மனுக்குச் சொல்லவேண்டுமென்று பர்லின்நகரத்திலிருந்து செய்திவந்ததனால் அதற்காக இந்த நியாயாதிகாரி இவனிடம்வந்தது. அவர் தன் அண்ணன்பேரை எடுத்தபோதே எர்மன், போதும் போதும், அந்தச் சண்டாளன் பேரை என்முன் சொல்லவேண்டாம்; தங்களுக்கு மிகவும் வருத்தமாயிற்று என்றுசொல்லி, வெகுகோபத்துடனே வந்தவருக்கு மரியாதை செய்து அனுப்புவதற்காகப் பழம் பணியாரங்கள் எடுத்துக்கொண்டுவரும்படி உள்ளேசென்றான். அங்கே அவன் மனையாள் நடந்த செய்தி தெரிந்துகொண்டு இன்சொல்லாகவே, ஏன் இவ்வளவுகோபம் என்றுகேட்க, அவன் அந்தச் சண்டாளன்பேச்சு நமக்கு வேண்டாம் போவென்றான். அதுகேட்டு அவள், அப்படியாகாது, செத்தபிறகும் பகைகூடுமோ? அவர்சொல்வதைச் சாவதானமாய்க் கேட்கவேண்டுமென்றாள்.

மறுபடி அந்த நியாயாதிகாரி சொன்னதாவது, உமது அண்ணன் பெரிய கடன்காரனாய், தன் பெண்சாதியுடன் ஒருபெண்ணையும் பிள்ளையையும் நடுத்தெருவில் அல்லாடவிட்டு இறந்துபோனார். நீர்தான் இனி அவர்களைக் காப்பாற்றவேண்டுமென்றார். 'கடன்காரனாய்' என்ற பேச்சைக் கேட்டவுடனே எர்மன் எழுந்து

குதித்துக் கூத்தாடி, கடன்காரன் ஆனான்! கடன்காரன் ஆனான்! இன்றுதான் எனக்குச் சந்தோஷமாயிற்று என்று கூவினான். அதுகேட்டு அந்தப்பிரபு, இதென்னவோ காலவிசேஷம், இதன் வரலாறு இன்னதென்று தெரியவில்லையென மனம்வெறுத்துச் சரேலென்று எழுந்துபோகப்பார்த்தார். அதுகண்டு இது மரியாதையல்லவென்று எர்மனுடைய மனையாட்டி தன் கணவன் நடத்தையைப்பார்த்து விசாரமடைந்து அவ்விருவரையும் சமாதானப்படுத்தி, எர்மன் அவ்வாறிருப்பதற்கு யாதுகாரணமோ அதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு பிறகு ஏதேனும் யோசிக்கலாமென்றுசொல்ல, எர்மன், ஆதியில் தனக்கும் தன் அண்ணனுக்கும் நடந்த விருத்தாந்தத்தைச் சுருக்கமாய் எடுத்து உரைத்தான். அதை அந்தப்பிரபு எவ்வாறு கருதினரோ தெரியாது; இனிமேல் ஏதாவது பேசினால் பேச்சுவளருமென நினைத்தாரோ என்னவோ? தான் சொல்லவந்த செய்தியை நேரில் ஒன்றும் சொல்லாமல் ஒருகடிதத்தில் எழுதிவைத்துப் போய்விட்டார்.

அதனால் லாரென்சுக்கு அண்ணனுடைய பூர்வோத்தரங்கள் தெரியாமலேபோயிற்று. அவன் அத்தனை உயர்ந்த அதிகாரம்பெற்றிருந்தும் மூத்தமனையாட்டியின் துர்க்குணங்களால் அத்தன்மையான கஷ்டதசைக்கு வந்துவிட்டான். அவள் இறந்துபோனபின்பு வாய்த்த இரண்டாவது மனையாள் நல்ல குணவதி. அவளுக்குத்தான் ஒருபெண்ணும் பிள்ளையும். அவ்வண்ணன் சாகுந்தறுவாயில் தான் தன் தம்பிக்கு முன்செய்த கொடுமையை நினைத்து மனம்வருந்தி, என் தம்பி ஜீவகாருணியமும் அடுத்தவரைக் காக்கும் உத்தமகுணமும் உள்ளவன்; மேலும் சகோதரவிசுவாசமுடையவன். இந்நற்குணங்களே இப்போது அவனை இந்த உயர்ந்தபதவிக்குக் கொண்டுவந்திருக்கின்றன. நீ அவனைப்போய் அடுத்துப் பிழைக்கவேண்டும் என்று தன் பெண்சாதியுடன் சொல்லி உயிரைவிட்டான். அந்தச் செய்தியைச் சொல்வதற்காகவே இந்த நியாயாதிகாரி இப்போது இவனிடம் வந்தது.

பிறகு இவர்கள் சமாதானப்பட்டவழி எவ்வாறு என்பீர்களோ? அதற்குக் காரணம் எர்மனுடைய மகன். அவன் உலகத்தில் ஒருவரும் வருந்தக் கண்ணால் பார்க்கப் பிரியமுடையவனல்லன். அதனால் அவன் இச்செய்தி கேட்டவுடனே தந்தையை எவ்விதத்திலாயினும் முறையே சமாதானப்படுத்தி அவர்கள் விஷயத்தில் கொண்டிருக்கும் பகையைப் போக்குவிக்கவேண்டுமென்று தன் தாயாருடன் சொல்லிவிட்டு, தான் பர்லின்நகரத்தில் தன் பெரியதகப்பனார் பிள்ளைகள் இருக்குமிடத்திற்குச் சென்று அவர்களுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்தான். பின்பு பல பெரிய பிரபுக்களைக் கொண்டு தன் தகப்பனாருக்கு இவ்விஷயங்களைத் தெளியச்சொல்லுவித்து இவர்களை அவ்விடம் அழைப்பித்துக்கொள்ளும்படி செய்தான்.

லேதான் சிறுவன் கீழ்ப்படிந்து பிசகிப்போகாமலிருந்தது நன்குமதிக்
கத்தக்கதாயிற்று. இவ்வாறே சிருஷ்டிகர்த்தாவும் தான் படைத்த
வைகளெல்லாம் தன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் மகிழ்ந்து
ரக்ஷிப்பார்; நம்பினவர்களை அவர் ஒருபோதும் கைவிடமாட்டார்.

சிறுவர்க்கான கதை.

மூன்றுசகோதரர்கள். (தொடர்ச்சி.)

அஜீப் என்னும் சிறுவனால் மோசம்செய்யப்பட்டவர்கள் அது
விஷயத்தைப்பற்றி நியாயஸ்தலத்தில் பிரியாதுசெய்தார்களென்று
முன் சஞ்சிகையிற் சொன்னோமே. அவ்வண்ணமே நியாயாதிபதி
அவர்களை அழைப்பித்து விசாரித்தபோது அஜீப் சொன்னதாவது:—
மகாபிரபுவே, இந்த ஏழையின் வார்த்தையைச் சற்று தயைசெய்து
கேட்கவேண்டும்: உங்களிடத்திலுள்ள பாத்திரங்களைக் கொண்டுவா
ருங்கள், நான் செப்பனிட்டுத் தருகிறேனென்று இவர்களை நான்
வேண்டி யழைக்கவில்லை; ஒரேநிமிஷத்தில் பதினாயிரம்பேர் என்
வீட்டுக்கு வந்து, செப்பனிட்டு நாளைப்பகலில் கொடுத்துவிடவேண்
டுமென்று பதினாயிரம் தவலைகளைக் கொண்டுபோட்டார்கள். அத்
தனை தவலைகளையும் நான் ஒருவன் செவ்வைப்படுத்த எத்தனைநாள்
செல்லுமோ தாங்களே யோசித்துப்பார்க்கலாம். ஆகையால் நான்
என்னால்கூடியவளவு செப்பனிட்டுக்கொடுத்து அதற்குத்தக்க கூலி
பெற்றுக்கொண்டேன்; என்பேரில் வீண்பழி கூறினால் நான் என்
னசெய்கிறது; பிரபுக்கள் சித்தம் எப்படியோ அப்படி நடந்துகொ
ள்ளச் சித்தமாயிருக்கிறேன் என்றான். அதுகேட்டு அங்கு வந்தி
ருந்த பிரியாதிகள், செப்பனிட்டா கொடுத்தாய்; அடா பாவி, மோ
சஞ்செய்ததுமன்றியில் பொய்யும் சொல்லத்துணிந்தாயோ என்று
கூக்குரலிட்டார்கள். இவற்றைக்கண்டு அங்கிருந்த ஒரு பிரபு அவர்
கள் கூச்சலையடக்கி, நியாயாதிகாரியை நோக்கி, இச்சிறுவன் பாத்தி
ரங்களைச் செவ்வையாகச் செப்பனிட்டுத் தருவானென இவர்களுக்கு
இச்செய்தியைச் சொன்னவள் ஒரு கிழவி; அவளை அழைப்பி
த்து விசாரித்தால் உண்மைதெரியவரும்; பிரபுக்கள் அதைச் சற்றுக்
கவனிக்கவேண்டும் என்று சொல்ல, நியாயாதிபதி இது ஒரு நல்ல
யுக்திதானென்று நினைத்து உடனே அந்தக்கிழவியை அழைப்பித்
தான். அவள் வந்தவுடனே அவளைநோக்கி அஜீப்பைக் காண்பித்து,
இச்சிறுவனைப்பற்றி உனக்கு ஏதேனும் தெரியுமா என்றுகேட்க,
அவள், என்னிடத்தில் அடிபோன தவலையொன்றிருந்தது. அதை
நான் இவனுக்குக் காட்டி, இத்தவலைக்குப் புதிதாய் அடிபோட்டுக்
கொடுப்பாயா என்று கேட்டதற்கு, இவன் அப்படியே செய்துதருகி
றேனென்று தவலையை வாங்கிக்கொண்டு புதிய தவலைபோல வெகு

நன்றாய்ச் சீர்ப்படுத்திக் கொடுத்தான். அந்த வேலைக்குக் கூலியும் கொஞ்சமாகவே வாங்கிக்கொண்டான். அதுகண்டு நான் வெகுசந்தோஷமடைந்து அச்செய்தியை அக்கம்பக்கத்தாரெல்லாருக்கும் தெரிவித்தேன்; இதுதவிர இவனைப்பற்றி மற்றெதுவும் எனக்குத் தெரியாது என்றாள். அதுகேட்டு அவ்வளவுடன் நியாயாதிபதி திருப்தியடையாமல் அக்கிழவியைப் பின்னும் பல கேள்விகள் கேட்கலானான்.

வி௵. இவன் உன் பாத்திரத்திற்குப் புதிதாக வேறே தகடுபோட்டுப் பற்றவைத்துக் கொடுத்தானா, அல்லது முன் இருந்ததையே ஒருவாறு செப்பனிட்டுத் தந்துவிட்டானா?

விடை. புதிதாக வேறு தகடேபோட்டுச் சீர்ப்படுத்திக் கொடுத்தான்.

வி௵. தண்ணீர் அதில் எங்கேயாவது பொசிகின்றதா, அல்லது கெட்டியாயிருக்கின்றதா?

விடை. புதுத்தகடுபோட்டுக் கெட்டியாய்ப் பற்றவைத்திருக்கையில் தண்ணீர்பொசிய வழியேது? அப்படிப்பட்டது ஒன்றும் இல்லை ஐயா.

வி௵. அப்படியாயின் அப்பாத்திரத்தை இப்பொழுது இங்கே கொண்டுவந்து காண்பிப்பாயா என்று கேட்டான்.

அதற்கு அந்தக்கிழவி, பிரபுக்கள் பார்க்கவேண்டுமென்றால், அதற்குத் தடைகூறுவாருண்டோ என்றுசொல்லி, உடனே அந்தத் தவலையைக் கொண்டுவந்து காண்பித்தாள். அதை நன்றாய்ப்பார்த்து நியாயாதிபதி அஜீப்பை நோக்கி, இப்பாத்திரத்தை இவ்வாறு செப்பனிட்டவன் மற்றவர்களுடைய பாத்திரங்களையும் ஏன் இப்படி சரியாகச் செப்பனிடவில்லையென்று கேட்டதற்கு அச்சிறுவன், அவளுக்கு ஒப்புக்கொண்டபடியே அப்பாத்திரத்தைச் சீர்ப்படுத்தினேன்; இவர்களுக்கு ஒப்புக்கொண்டபடியே இப்பாத்திரங்களைச் சீர்ப்படுத்திக் கொடுத்தேனென்று கூறினான். அதன்மேல் நியாயாதிபதி அவனைக் கேட்ட கேள்விகளாவன:—

வி௵. பிள்ளாய், இவர்களிடத்தில் நீ பாத்திரங்களை வாங்கிக் கொள்ளும்பொழுது எந்த ஏற்பாட்டின்மேல் வாங்கிக்கொண்டாய்?

விடை. ஒரு ஏற்பாடுமில்லை. இவர்கள் எல்லோரும் கூட்டமாய்க் கூடிவந்து தங்கள் பாத்திரங்களைச் சீர்ப்படுத்தித் தரவேண்டுமென்று பலவந்தமாய் என் வீட்டில் போட்டுவிட்டுப் போனார்கள். என் கையில் ஆனமட்டும் நான் செப்பனிட்டுக் கொடுத்தேன்.

வி௵. உன்னைப்போலப் பாத்திரம் செப்பனிட வாங்கிக்கொள்ளுகிறவர்கள் இப்படிதானா செப்பனிட்டுத் தருகிறார்கள்?

விடை. ஐயா நான் அந்த வேலைக்காரனல்லவே! ஆதலால் தவலையைச் செப்பனிடுவதாவது வெளுக்கத் தேய்த்துக்கொடுப்பதுதான் என்றெண்ணி, இப்படிச் செய்துகொடுத்தேன். நாங்கள் அண்ணன்

தம்பிகள் மூன்றுபேருமாய்க் கூடி முதனுள் சாயங்காலம் இப்பாத்திரங்களைத் தேய்க்கத் துவக்கினேம்; இவையெல்லாம் தேய்த்தாவதற்குள் பொழுதுவிடிந்துபோயிற்று. இராத்திரி முழுவதும் நாங்கள் மூன்றுபேரும் கண்மூடவேயில்லை; இப்படி பாடுபட்டு வேலைசெய்து வைத்துக் காலையில் இவர்கள் வந்தவுடனே, உங்கள் பாத்திரத்தைச் செவ்வையாய்ப் பார்த்தெடுத்துக்கொண்டு போங்கள் என்று சொன்னேன். அப்படியே நன்ருய்ப் பார்த்துக்கொண்டு சரிதானென்று அவரவர் தம்தம் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, நான் கேட்பதற்கு முன்னமே கூலியைக் கொடுத்துவிட்டுப்போனூர்கள். இதில் என் மேல் ஏது குற்றமிருந்தாலும் பிரபுக்கள் விதிக்கிற தண்டனைக்கு ஆளாகிறேன் என்ருன்.

அப்பொழுது அவ்விடத்திற்கு வேடிக்கைப் பார்க்கவந்திருந்த கம்மாளன் ஒருவன் நியாயாதிபதியின் சமீபத்தில் சென்று மொழிந்ததாவது: ஐயா, இச்சிறுமகன் சொன்னது முழுதும் உண்மையே. முந்தாநாள்காலையில் இவன் அடிபோன தவலையொன்றை என்னிடம் கொண்டுவந்து சீர்ப்படுத்திக்கொண்டுபோனுன். அது தெரியாமல் இவர்களெல்லாரும் ஒரேநாளில் இத்தனை பாத்திரங்களையும் சீர்ப்படுத்தித் தாவேண்டுமென்று இவன்கையில் கொடுத்தால் இவன் என்னசெய்வான்? தன் கையில் ஆனமட்டும் வஞ்சனையில்லாமல் செவ்வைப்படுத்திக் கொடுத்தான்; இதற்குக்கூட இவர்கள் கொடுத்த கூலி மிகவும் போதாதுதான்; இதைப்போலப் பத்தத்தனை கொடுத்தாலும் இவர்கள் கஷ்டம் தீராது என்ருன். அதுகேட்டு நியாயாதிபதி இவர் சொல்லுகிற நியாயம் சரியானதுதானென்று சந்தோஷித்து, ஒருவர்பேரிலும் தப்பிதமில்லையென்று பிரியாதைத் தள்ளிவிட்டான். அதுகேட்டு மோசம்போனவர்கள் யாவரும் அதை ஒப்புக்கொள்ளாமல், எங்களுக்கு நியாயம் கிடைக்கும்படி பிரபுக்கள் சித்தம் இரங்கவேண்டும்; ஏழைகளைக் கண்ணெடுத்துப் பார்க்கவேண்டுமென்று ஒன்றுகூடிக் கூக்குரலிட, இனி யாராவது கூச்சலிடுவாராயின், அபராதம் விதிக்கப்படும் என்று நியாயாதிபதி திட்டஞ்செய்ய, அதைக் கேட்டவுடனே பயமடைந்து எல்லோரும் வாயை மூடிக்கொண்டு நின்ருர்கள்.

பிறகு நியாயாதிபதி அஜீப் என்ற சிறுவனைநோக்கி, பிள்ளாய், நீ ஏதோ தந்திரமாய்ப்பேசித் தப்பித்துக்கொண்டாயாயினும், வாஸ்தவத்தில் இவர்களை மோசஞ்செய்துவிட்டாயாகையால், அதற்காக உன்னை இருநூறு அடி அடிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது என்ருன். அதுகேட்டு அந்தச் சபையிலிருந்தவர் அனைவரும் வெகு சந்தோஷமடைந்து சரிதான், சரிதான் என்று கூவினூர்கள். அதன் பின்பு நியாயாதிபதி மறுபடியும் அஜீப்பைப்பார்த்து, முதலில் நீ செய்தகுற்றத்திற்காகத் தண்டனை விதிக்கப்பட்டது; இப்பொழுது உனது சாதுரியத்திற்குத் தக்க வெகுமதிசெய்யத் தீர்மானித்திருக்கி

ரேம். ஆகையால், உனக்கு வேண்டியதைக் கேட்டுக்கொள்ளலா மென்று சொல்ல, அச்சிறுவன் மிக்க மகிழ்ச்சிகொண்டு, பிரபுக்க ளே, தருமதுரையான தங்களுடைய தரிசனம் கிடைக்கவேண்டு மென்று நான் இவ்வுபாயம் செய்தேனே யொழிய மோசம் செய்ய வேண்டுமென்று எண்ணிச்செய்தவனன்று; நான் கோரினபடியே தமதுதரிசனமும் கிடைத்துத் தங்களுடன் சம்பாஷணையும் செய்து விட்டேன்; இனிமேல் எனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை; சிக்ஷித்தாலும் ரக்ஷித்தாலும் எல்லாம் தங்களுடைய பாரமே யென் ருன். வடிவத்தில் சிறுத்தவனுயினும் புத்தியில் பெருத்தவனுகி அவன் இவ்வாறு ஸமயோசிதமாய்ப் பேசின பேச்சைக்கேட்டு நியாயாதிபதி மிகவும் மகிழ்ச்சிகொண்டு, அவனுக்கு விதித்த தண்ட னையை மன்னித்து, இத்தன்மையானவனுடைய உதவி நமக்கு மிக வும் அவசியமானது என்று அவனைத் தம்மிடத்தில் ஒரு மந்திரியாக நியமித்துக்கொண்டான். அஜீப்பினுடைய அண்ணன்மார்களோ முழுமூடர்களா யிருந்தமையால், வெகு வருத்தப்பட்டு அவனுடைய செல்வாக்கின் மேல் அங்கே வாயில்காக்கும் சேவகராக நியமிக்கப் பட்டார்கள்.

இவ்வாறு அஜீப்பானவன் தன் தகப்பன் எண்ணினபடியே வய தில் சிறியோனுயினும் புத்தியில் பெரியோனுகி நாளளவிலே மிக்க பாக்கியம் பெற்றவனுயினுன்.

சமாசாரம்.

அதிசயமான ஒரு கன்று.—சேலம்ஜில்லா நாமக்கல்தாலூக்காவில் இருப் புப்பாதைக்கு 21 மைல் தூரத்திலுள்ள பெரியபத்தி என்னும் கிராமத்தில் ஒரு பசு, மூன்று கண்களும், நான்குகாலுமுடைய ஒரு கன்றை ஈன்ற தாம். அந்தக் கன்று தன் மூன்ருவது கண்ணைத்தொட யாராவது விரலை நீட்டினுல் உடனே அக்கண்ணை மூடிக்கொள்கின்றதாம். இதைக் கண்டு வெகுபேர் ஆச்சரியப்படுகின்ருர்கள்; எல்லாம் வல்லகடவுளுக்கு எதுதான் அசாத்தியமானது? அவர் திருவுள்ளத்தில் நினைத்தால் இன்னும் எவ்வளவோ அற்புதமானவைகளையும் படைத்து நாம் மகிழ்ச்சிகொள்ளும்படி செய்வார்.

கந்தகபூமி.—கோதாவரிஜில்லா நகப்பூர்தாலூக்காவில் கோகனுமடம் என்னும் கிராமத்தில் கந்தகபூமிகள் இருக்கின்றனவென்று அவ்விடத்து சப்மாஜிஸ்திரேட்டு தெரிவித்திருப்பதாக மெஸ்தர் இ. ஜே. ஸாயல்துரை யவர்கள் போர்ட்டாருக்குத் தெரிவித்தாராம். போர்ட்டார் உத்தரவின்மேல் அவ்விடத்து டாக்ட்டர் அந்தக் கிராமத்துக்குச் சென்று 50 ராத்தல் மண்ணைப் பரிசோதனைசெய்ததில் விசேஷமாக கந்தகம் அகப்பட்டதென்று போர்ட் டாருக்குத் தெரிவிக்க, அதன்மேல் அவ்விடத்தார் ஒருவரும் இனிமேல் அவ்வூரில் மண் எடுக்கக்கூடாதென்று விளம்பரஞ்செய்தார்களாம். ௫

S. P. C. K. Press, Vepery, Madras. 1885.

உறைவாங்கித் தபாலில் போடலாமென வைத்திருந்தானோ என்ன வோ? எழுதி ஏழெட்டுநாளாகியும் யாதுகாரணமோ அது தபாலில் போடப்படவில்லை; அந்தக்கடிதம் இப்போது பரிசோதனைசெய்தவர் களுக்குப் பெரிய ஆதாரமாயிற்று. அவன் வைத்திருந்த பணத் தைப் பிடிங்கிக்கொள்ளும்பொருட்டு யாரோ அவனைக் கொலைசெய் துவிட்டார்களென்று அவர்கள் அறிந்துகொண்டனர்.

பின்பு அந்தப்பிரேதத்தை அவ்விடத்திலிருந்து நகரத்துக்குப் பரி சோதனைக்காகக் கொண்டுபோய்விட்டார்கள். பிறகு இந்தக் கொலை நடந்தவிடத்துக்குச் சிறிது தூரத்திலிருந்த ஒரு பிரபு சொல்லிய செய்தியினால் அதன்விவரம் பின்னும் தெளிவாகத் தெரியவந்தது. அந்தப்பிரபு சொன்னதாவது:—

முதனாள் மாலைவேளையில் நான் என் மாளிகையிலிருந்து பல கணியின்வழியாய்த் தெருவிலே பார்த்துக்கொண்டிருந்தேன். அப் பொழுது யாரோ இரண்டுபேர் ஏறக்குறைய ஒரேவிதமான உடுப் பும் வடிவமும் உள்ளவர்களாய்ப் பட்டணத்திலிருந்து அவ்வழியாக வந்தார்கள். போகும்போது ஏதோ கலகப்பட்டுப் பேச்சாடிக் கொண்டே போனார்கள். அவர்கள் நான் உட்கார்ந்திருந்ததைப் பார் க்கவில்லையென்றுகாண்கிறது. நெடுந்தூரம் போமளவும் நான் அவர் களை உற்றுப்பார்த்துக்கொண்டேயிருந்தேன். போகப்போக அவர் கள் விவாதம் அதிகமாயிற்று. அங்கே சிறிய ஒரு கிராமத்துக்குக் கொடிவழி யொன்று பிரிகிறது; அவ்விடத்திலேபோய் அவர்கள் நின்றுவிட்டார்கள். அக்கொடிவழியில் ஜனங்கள் அதிகமாக நடப் பதில்லை; அருகிலுள்ள மலைப்பிரதேசங்களில் வசிப்பவர்களுக்குத் தான் அவ்வழி தெரியும். அப்படியிருக்க அவர்கள் அவ்வழியிலே புகுந்து மறைந்துபோய்விட்டார்கள்.

அவர்கள் வருவதற்குச் சிறிதுநேரம் முன்புதான் மற்றொருவன் அவ்வழியே சென்றான். இவற்றையெல்லாம்பார்க்க இதென்ன வென்று எனக்கு வெகு ஆச்சரியமாயிற்று. முன்சென்ற மனிதன் நான் இருப்பதைப்பார்த்து என்னிடம்வந்து, அருகிலுள்ள கரிஸ் டாப்பு என்னும் ஊருக்குப்போக வழி யிதுதானா, இன்னும் எவ் வளவுதூரமிருக்குமென்று கேட்டுக்கொண்டு வெகுமரியாதையாய் எனக்கு வந்தனம்பண்ணிப்போயினான். அவன் முகத்தைப் பார்க் கையில் அவன் மிக்கயோக்கியனெனவே எனக்குத் தோன்றியது; அவனும் அந்தக் கிளைவழியிலேதான் புகுந்து போயினான். இவ் விடத்தாருக்கே செவ்வையாய்த் தெரியாத இந்தக் கொடிவழியில் பொழுதுபோனவேளையிலே இவன் புகுந்துபோவ தென்னவென்று நான் யோசித்துக்கொண்டிருக்கையிலேதான் முன்சொல்லிய மற் றிருவர் அவ்வழியாகவந்தது. அம்மூவருள் எவனாவது ஒருவன் திரும்பிவருவானோவென்று நான் கால்மணிநேரமளவும் அங்கேயே

காத்துக்கொண்டிருந்தேன்; ஒருவனும் வரவில்லை. அப்படியிருக்கத் திடீரென்று அவர்கள்போன பக்கத்திலே சிறிதுநேரத்துக்கெல்லாம் வெடியோசை யொன்று உண்டாயிற்று. அதுகேட்டு நான் இதென்னவென்று திடுக்கிட்டு, இவ்வழியாய் இப்பொழுது போனவர்களிலேதான் ஏதோ ஒரு விசேஷம் நேர்ந்திருக்கவேண்டும்; அவர்களுள் எவனுவது திரும்பிவருகிறுனு பார்ப்போமென்று அங்கேயே பின்னும் சிறிதுநேரம் காத்துக்கொண்டிருந்தேன் அப்பொழுதும் ஒருவரும் வரவில்லை.

பிறகு உள்ளேபோய் யாரையாவது வேலைக்காரரைத் தூரத்தியாயினும் அந்தக் காட்டில் ஏதாவது விசேஷமுண்டாவெனப் பார்த்துவரச்சொல்லவேண்டுமென்று அவ்விடம்விட்டு எழுந்திருக்க நினைத்தேன். அத்தருணத்தில், முன் என்னை வழிகேட்டமனிதன் திரும்பிவந்தான். வந்தவன் நேராக வழியே போகாமல் நானிருந்த சாளரத்தண்டைக்குவந்தான். அப்பொழுது நன்ருய் இருளுகிற சமயமாகையால் சற்று நிதானித்துப் பார்த்தாலொழிய ஒருவன் முகம் ஒருவனுக்கு நன்ருய்த் தெரியாமலிருந்தது. அவனைப்பார்த்தவுடனே, ஏதாவது விசேஷம் நடந்திருக்கவேண்டும்; அதைச் சொல்வதற்காகவே இவன் இவ்விடம்வந்தானெனத் தெரிந்துகொண்டு நான், அடுத்த காட்டிலிருந்தல்லவோ நீ வருகிருய்; அங்கு ஏதாவது விசேஷமுண்டோ என்று கேட்டதற்கு அவன், ஆம், விசேஷமுண்டு; நீர் ஏதாவது கேள்விப்பட்டீரோவென்று சொல்லிக்கொண்டே என் முகத்தையே பார்த்துக்கொண்டு நான் நின்ற பலகணியின் சமீபத்தில் வந்துவிட்டான். அதுகேட்டு நான், ஆம், வெடியோசையொன்று கேட்டது; அதன் விவரமென்னவென்று வினவ, அவன் அதற்கு ஒன்றும் உத்தரம் சொல்லாமல், சமீபத்தில் வாருங்கள்; ஒரு செய்தி சொல்லவேண்டுமென்று வேண்டியழைத்தான். அவனைப்பார்க்கையில் பைத்தியக்காரனே என்னவோ வென்று எனக்கு அச்சமுண்டானதனுல் கிட்டப்போகத் துணியாமல் நான் தூரத்திலேயே நின்றுகொண்டிருந்தேன். அவன் சிறிதுநேரம் தெருவிலே காத்துக்கொண்டிருந்து, நான் போகாமையால், இவன் என்னவோ மூடனுயிருக்கிறுன்; எந்நேரம் காத்துக்கொண்டிருந்தும் சமீபத்தில் வரவில்லை; ஆனது ஆகிறது, பொழுதுபோயிற்று; சரியாய் இருப்புப்பாதைவண்டிக்குப் போகவேண்டும் என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான் என்ருன்.

இச்செய்திகளைச் சொன்னதுமன்றியில் அந்தப் பிரபு அம்மனிதர்களுடைய அடையாளங்களையும் சரியாய்த் தெரிவித்தான். உடனே அம்மனிதனைக் கண்டு பிடித்துக்கொண்டுவரும்படி நாலாமூலையிலும் தூதர்களைத் தூரத்தினுர்கள். யாரை விசாரித்தாலும் அவர்களுடையசெய்தி ஒருவர்க்கும் தெரியவில்லை. முதனுள் இராத்திரி

அவர்கள் இறங்கியிருந்த சத்திரக்காரன் மாத்திரம், இவ்வடையாளங்களுள்ள மூவரும் இங்கேவந்திருந்ததுண்டு என்றுசொல்லி, தேகத்திலுள்ள அடையாளங்களைப்பார்த்து, கொலையுண்டிருப்பவனும் அவர்களுள் ஒருவனாயிருக்கலா மென்றான்.

அவர்களைத் தேடிக்கொண்டு போனவர்களுள் ஒரு தூதன் அந்நகரத்துக்கடுத்த இதன்ஹேன் என்னும் கிராமத்துக்குச் சென்றான்; அங்கே விசாரித்தபோது அத்தன்மையான மனிதன் ஒருவன் அங்கு இருப்பதாகத் தெரியவந்தது; தெரியவரவே உடனே அவனைக் கண்டுபிடித்து நியாயஸ்தலத்துக்கு அழைத்துக்கொண்டுவந்தான். இத்தூதன்போய்க்குறிப்புகளைச்சொல்லி அழைத்தபோது கான்ராத்து என்னும் அச்சிறுவன், அத்தன்மையானவன் நானேயென்று உண்மையை ஒப்புக்கொண்டு தானே தைரியமாய்ப் புறப்பட்டுவந்தானேயல்லது சிறிதும் உண்மையை ஒளிக்கவில்லை. பிறகு நியாயஸ்தலத்தில் விசாரணை ஆரம்பமாகி, அதில் அந்தக் கொலைசெய்தவன் இவனேயெனத் தெளிவாயிற்று. எவ்வாறெனில், தானே கொன்றுவிட்டதாய் அவனே ஒப்புக்கொண்டான்; அவன் கையிலிருந்த குண்டுகளும் இறந்தவனது கண்ணில் ஏறியிருந்த குண்டும் ஒருதன்மையாகவே யிருந்தன; அமெரிக்காதேசத்து நோட்டுகள் நான் கொண்டுவருகிறேனென்று, இறந்தவனிடமிருந்த கடிதத்தில் கண்டிருந்தபடி அந்த நோட்டுகள் இவனிடமிருந்தன. இத்தன்மையான பல அத்தாட்சிகளால் கான்ராத்தே அந்தக் கொலைசெய்தவனென நிரூபணமாயிற்று. அதனால், அமெரிக்காதேசத்துப் பொன்விளைபூமியான காலிபோர்னியாதேசத்துக்கு இறந்தவன் கொன்றவனாகிய இவ்விருவரும்போய் மிகுதியாய்ப் பணம்சம்பாதித்து அதைச் சரிபாதியாகப் பங்கிட்டு எடுத்துக்கொண்டு வந்ததாகவும், வரும்போது கான்ராத்து தன்பணம் போதாதென்ற பேராசையால் மற்றொருவனைக் கொன்று அவன் வைத்திருந்த பணத்தைத் திருடிக்கொண்டதாகவும் அங்கிருந்த ஜனங்கள் எண்ணினார்கள்.

இவ்வாறாகச் சாட்சிகளெல்லாம் சரியாய் ஏற்பட்டபிறகு நியாயாதிகாரி குற்றவாளியை நோக்கி, இப்போது உன்மேல் குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது. அதற்கு ஏதாயினும் சொல்லவேண்டியதிருந்தால் சொல்லி, உன் நியாயங்களைக் கேட்டுக்கொள்ளலாம் என்று கட்டளையிட, அவ்வண்ணமே அவன் தன் கதையை ஆதியோடு அந்தம் சொல்லத் தொடங்கினான்:

ஓ சபிகர்ளே, நான் இத்தேசத்தானென்பது பலபேர்க்குத் தெரிந்திருக்கலாம். 15 வயதில் இவ்விடம்விட்டு வெளியேசென்று கருமாரத்தொழில் கற்றுச் சிறிது பொருள் சம்பாதித்தேன். பிறகு அமெரிக்காவைப்பார்க்கவேண்டுமென்ற ஆவல் அதிகமாகி நான்கு வருஷங்களுக்குமுன் அவ்விடத்திற்குப் புறப்பட்டேன். அங்கே

காலிபோர்னியாதேசத்தில் பொன் மிகுதியாய் வெட்டியெடுக்கிறூர் களெனக் கேள்விப்பட்டு, நானும் அத்தொழில் செய்து திரவியம் சம்பாதிக்கவேண்டுமென அவ்விடம்போக இருக்கையில், அங்கே போய் வந்த சிலர், குறைந்தது இரண்டுபேராவது ஒன்றுகூடிப்போ ணூல்தான் அங்கே பொன் கண்டெடுக்கச் சாத்தியப்படும் என்று சொன்ணூர்கள். அதைக்கேட்ட நான் தகுந்த துணை எங்கே அகப் படுவான் என்று தேடிக்கொண்டே போகும்போது வழியில் ஒருவன் அகப்பட்டான். அவன்தான் இப்பொழுது கொலையுண்டிருக்கும் ஸ்பிரெஞ்சர் என்பவன்; எனக்கு இவன் சிலவருஷம் மூத்தவனு யிருக்கலாம். இவனும் என்னைப்போலவே பொருள் தேடவேண்டு மென்ற கருத்துடனே வந்ததாகக்கூறினமையால், இவன் நமக்கு நல்ல துணையேயென்று கூட அழைத்துக்கொண்டுபோனேன். அப் படியே நாங்கள் இருவருமாய்ச்சென்று அவ்விடத்தில் வேலைசெய்து அத்தேசத்து தாலர் என்னும் நாணயம் முப்பதினுயிரத்துக்குமேல் சம்பாதித்தோம். அது சுமார் நம்ம ரூபாய் 30000க்குச் சரியாகி றது. பிறகு சுதேசத்துக்கு வரவேண்டுமெனக் கருதி அந்த மொத்தத் தில் பாதியை அங்கேயே அத்தேசத்து நோட்டாக மாற்றிக்கொண்டு மற்றதை வழிச்செலவுக்காக வைத்துக்கொண்டு அந்த மொத்தத்தை இருவரும் சரிபாதியாகப் பாகித்து எடுத்துக்கொண்டோம்.

என்துணைவன் மனவுறுதியுடையவனல்லவென அத்தேசத்திலே யே எனக்குத் தெரியவந்தது; துஷ்டசகவாசத்திலேயே மிகச் சார் புடையவனுயிருந்தான். ஆயினும் நான் வெகு தந்திரமாய்ச் சூதாட் டம் குடி முதலியவைகளில் மிகுதியாய்ப் புகாதபடி லந்தன்வந்து சேருகிறவரையில் பார்த்துவந்தேன். லந்தன்நகரில் எமது துர்ப்பாக் கியத்தால் நாங்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியும்படி நேரிட்டது. அப்படிப் பிரிந்ததுதான் கடைசியில் என்துணைவன் கொல்லப்பட்ட தற்கும், நான் இப்படி குற்றவாளியாய் உயிரையுமிழக்கும்படியான அபாயத்துடன் நியாயசபையாரின் முன்புவந்து நிற்கும்படியான தற்கும் காரணமாயிற்று. முதனுள் என்னைவிட்டுப் பிரிந்த ஸ்பிரெஞ் சர் மறுநாள் இராத்திரிவரையில் இருப்பிடம்வந்து சேரவேயில்லை. போகும்போது நான் வேண்டியபடி எச்சரிக்கைசொல்லியனுப்பி னேன். அப்படியே அவன், நான் ஒன்றும் தீச்செயல் செய்வதில்லை யென்று உறுதியாய்ச் சொல்லிக் கைநிரம்பப் பணத்தையெடுத்துக் கொண்டு, அமெரிக்காவில் அவன்கண்ட சிநேகிதன் ஒருவனுடன் போயினுன். அந்தப்பணம் அத்தனையும் குடியிலேயே செலவழிந்து போனதாகத் தெரிகிறது. மறுபடி திரும்பிவந்தபோது யாருக்கோ கடிதமொன்று எழுதினுன். அதற்குத் தற்காலத்தில் உறை அகப்ப டாமையால் மறுநாள் அதைத் தபாலில் போடலாமென்று தன் உடைப்பைப் புத்தகத்தில் வைத்துக்கொண்டான். அப்பொழுது நான் ஏதோ ஒரு அவசரவேலையாச் சற்று வெளியேபோக நேரிட்

டது. போய்த் திரும்பிவந்து பார்த்தபோது அவன் அவ்விடத்திலில்லை; மறுபடி எங்கேயோபோய்விட்டான். மறுநாள் காலை 8-மணிக்கு மிகவும் முகம்வாடினவனாய்த் திரும்பிவந்து என்னைப் பார்த்தவுடனே, என் பணமெல்லாம் போய்விட்டதே! என்று வாய் குளறிச் சொல்லிக்கொண்டே கண்ணீர்விட்டுப் புலம்பத்தொடங்கினான். பின்பு நான் அவனைப் பலவிதமாய்ச் சமாதானப்படுத்தி நடந்த வரலாறு என்னவென்று கேட்டதற்கு, அமெரிக்காதேசத்துத் தோழன் தன்னை எங்கேயோ அழைத்துக்கொண்டுபோனதாகவும், அங்கே பின்னும் பலபேருடன் கூடி மிகுதியாய்க் குடித்து வெறித்துப் பின்பு சூதாடப் புகுந்ததாகவும், அந்தச் சூதாட்டத்தில் தன் பொருள் அத்தனையும் இழந்துவிட்டதாகவும், பொருள்போன துக்கத்தில் தான் மூர்ச்சைபோய்க் கீழே வீழ்ந்துவிட்டதாகவும், சிறிது நேரம் கழித்துப் பிரஞ்ஞைவந்து எழுந்துபார்த்தபோது தானிருந்த விடம் சூதாடினவிடமல்லாமல் வேறிடமாயிருந்ததாகவும், பிறகு அங்கிருந்து வெகு வருத்தப்பட்டு என்னிடம் வந்து சேர்ந்ததாகவும் கூறினான். அன்று இராத்திரி குடித்துச் சூதாடி எல்லாப்பொருளையும் பறிகொடுத்தது இன்னவிடத்திலென்றுசொல்லக்கூட அவனுக்கு ஒரு அடையாளமும் தெரியவில்லை; அது லந்தன் நகரத்தில் இன்னமூலையென்பதுகூடத் தெரியவில்லை. இப்படியானதற்குக் காரணம் மனதைத்தீயவழியில் செல்லவொட்டாமல் அடக்குகிற திறமை அவனிடத்தில் சிறுதுமில்லாமையேயாம். அவனுடைய சங்கடத்தைப்பார்த்து நான் மிகவும் பரிதாபப்பட்டு, மறுபடி காலிபோர்னியாவுக்குச் செல்லும்படி வழிச்செலவுக்கு என்பங்கில் 500-ரூபாய் கொடுப்பதாய்ச் சொன்னேன். அதற்கு அவன், முன் யானிருந்ததுபோல இப்பொழுதும் யாராவது ஒருவன் தன்னைப்பாதுகாத்துக் கொள்ளத் துணைவனாய் அகப்பட்டாலன்றி மறுபடி அங்கே போவதிற் பயனில்லை யென்றுதெரிந்து, சுதேசமான ஆஸ்திரியாவுக்கே போய் நான் கொடுக்கும்பணத்தை வைத்துக்கொண்டு ஏதாவது சொற்பமாய் வியாபாரம் செய்து பிழைப்பதாகச் சொன்னான். அந்தப் பணத்தை ஊர்போய்ச் சேர்ந்தபிறகு நான் கொடுக்கும்படியாகவும், வழிச்செலவுக்கு வேண்டியதைமாத்திரம் அப்போதப்போது சிற்சிலவாய்க் கொடுக்கும்படியாகவும் ஏற்பாடுசெய்துகொண்டோம்.

அவ்வண்ணமே லந்தனைவிட்டுப்புறப்பட்டுப்போகையில் அவன் வழியில் பலதடவைகளில், நீ கொடுப்பதாகச் சொன்னது உண்மைதானா, உண்மைதானாவென்று பலதரம் கேட்டுச் சச்சரவுசெய்துகொண்டேவந்து, என் ஊருக்குச் சமீபத்தில் ஒரு காட்டுவழியிலே நான் புகப்போகிறபோது அவன் என்னை எதிர்த்துநின்று, உன் ஊருக்குவர எனக்கு இஷ்டமில்லை; நீ கொடுப்பதாகச் சொல்லிய பணத்தை இங்கேயே கொடுக்கிறாயா இல்லையாவென்று நிர்ப்பந்தித்துக் கேட்டான். அவன்கையில் காசு அகப்பட்டால் ஒருநிமிஷத்தில்

அழித்துவிடுவான் எனத் தோன்றினமையால், ஊருக்குவந்தாலன்றிக் கொடுப்பதில்லையென்று நான்சொல்ல, அவன் வேறுவிதியில்லையென்று அரைமனதாகவே ஒப்புக்கொண்டுவந்தான். அங்கிருந்து சிறிதுதூரம் சென்றவுடனே மறுபடி திடீரென்று திரும்பி அவன், எனக்கு மிகவும் இளைப்பாயிருக்கிறது; நான் இங்கே சற்றுநேரம் நின்றுதான் வருவேனென்றான். அப்படியே ஆகட்டுமென்று நானும் ஒப்புக்கொள்ள, இருவருமாய் அவ்விடத்தில் உட்காந்தோம்.

பிறகு அவன் என்னைப்பார்த்து, கான்ராத், நீ பணத்தை இங்கேயே கொடுத்துவிடு; நான் இப்படியே திரும்பிப்போகிறேன். அந்த மூலைக்காட்டுக்கு நான் ஏன் உன் பின்னே ஓடிவரவேண்டும்? நீ ஐந்நூறு என்று சொன்னது சரியல்ல; ஐயாயிரமாய்த் தரவேண்டும். இது நாம் இருவருமாய் ஒன்றுகூடிச் சம்பாதித்த பொருளேயல்லவா? என்னவோ துர்ப்பாக்கியத்தால் என் பங்கு கைநழுவிப்போய் விட்டதாயினும் நீ இப்படி அடியோடு மோசஞ்செய்யலாமா? நியாயமாய் நீ உன்பங்கில் சரிபாதியே கொடுக்கவேண்டும். ஆயினும் மூன்றிலொருபங்கு கொடுத்தால் போதுமானது என்றான்.

அதுகேட்டு நான் திடுக்கிட்டேனாயினும் சற்று ஆலோசித்து, அப்படியே யாகட்டும்; நீ சரியாக வியாபாரம் செய்யப் புகுவாயானால் உன்னிஷ்டப்படியே தருகிறேன்; பொழுதுபோய்விட்டது; போவோம் வாவென்றேன். அப்படியே புறப்படுகிற தருணத்தில் யாரோ ஒரு புதுமனிதன் சரேலென்று அங்குவந்து எங்களை நோக்கி, உங்கள் நடத்தைகளையெல்லாம் நான் பார்த்துக்கொண்டிருந்தேன்; அக்கிரமம் செய்யாதேயுங்கள் என்று அதட்டிச் சொல்லிவிட்டு மறைந்துபோயினான். பிறகு ஸ்பிரெஞ்சர் என்னைத் திரும்பிப் பார்த்து, நீ அப்புறம் பணம் கொடுப்பாயென்பதில் எனக்கு நம்பிக்கையில்லை; இங்கேயே கொடுத்து என்னை அனுப்பிவிடவேண்டும் என்று கோபமாய்க் கேட்டான். ஊர்போய்ச் சேர்ந்தாலொழிய ஒரு காசுகூடக் கொடுப்பதில்லை யென்று நான் சொல்லக்கேட்டு, அவன் உடனேகத்தியை உருவிக் கையிலெடுத்துக்கொண்டு, நாயே, இதோ உன்பிராணனுக்கு வந்தது வாவென்று என்மேல் பாய்ந்தான். பாயவேநான், ஓகோ, பிரமாதம் விளைந்ததேயென்று துப்பாக்கியைக்கையிலெடுத்துக்கொண்டு, வேண்டாம், தீயவழியில் புகாதே; கெட்டுப் போவாய் என்று சொல்ல, அதையும் கேளாமல் அவன்என்னைப் பிடிக்க ஓடிவரவே, ஐயோ, நான் என் உயிரைக் காத்துக்கொள்வதற்காக என்தோழனைக் கொல்லும்படி நேரிட்டது. என் துப்பாக்கி குண்டு பட்டு அவன் கீழே வீழ்ந்துவிட்டான்; உடனே ஓடி அவனைக் கட்டிக்கொண்டேன்; பிணமாய்க் கிடந்தான். அதன்மேல் நான் செய்யவேண்டுவதென்ன? முன் வந்து எச்சரிக்கை சொல்லிப்போன பெரியவர் ஒருவேளை திரும்பிவருவாரோவென்று அந்தக் காட்டிலேயே சிறிதுநேரம் தனியாய்க் காத்துக்கொண்டிருந்தேன்; அவர் வரவே

யில்லே. அதனுல் நான் ஊருக்குப்போய்விட்டேன். பிறகு நடந்தவையாவும் தங்களுக்குத் தெரிந்தவைதாமே. சர்வசாக்ஷியான கடவுளின் முன்பாக நான் சொன்னவையாவும் உண்மையே. என்னுயிரைக்காத்துக்கொள்ளும் பொருட்டு என் துணைவனை வேறுவிதியின்றி நான் அடிக்கும்படி நேரிட்டதேயன்றி வேறல்ல. என் துணைவன் இறந்துபோய்விட்டான். இனி இவ்விஷயங்களுக்கெல்லாம் சுவாமி சாக்ஷியேயொழிய மற்றெவரும் சாக்ஷியில்லேயென்ருன்.

பிறகு நியாயாதிகாரி அவன் வாக்குமூலத்தில் பற்பல ஆக்ஷேபங்களை ஆக்ஷேபித்துக்கேட்க, அவைகட்கெல்லாம் அவன் சரியான சமாதானம் சொல்லிக்கொண்டேவந்தான். அவையாவும் எடுத்துரைக்க இங்கு இடமில்லே.

இவ்வாக்குமூலங்களால் கான்ராத்தின்மேல் சிறிதும் குற்றமில்லேயெனத் தெளிவாயிற்ருயினும், இரண்டொருவருக்கு அது உண்மைப்படவில்லே; தன்மேல் குற்றம் தாங்காமல் தப்பித்துக்கொள்ளும்படி பொருந்தப் பொய்க்கதைகட்டிக்கொள்வது யாவர்க்கும் சுபாவமேயல்லவோ? ஆதலின் இவன் பேச்சை அத்தனையாக நம்பக்கூடாது. யாரோ விசித்திரமான சாட்சி யொருவன் இருப்பதாகச் சொன்னுனே; அவனெங்கே? அவன் வந்தாலன்றி இந்த வியவகாரத்தின் உண்மையைக் கண்டறிவது கூடாதென்று நியாயாதிகாரிகளுள் சிலர் அபிப்பிராயப்பட்டார்கள்.

அந்த விசித்திரமான சாட்சி யெங்கேயென்று சத்தமுண்டானவுடனே, இதோ! இதோ! என்று கூவிக்கொண்டு ஒருவன் நியாயாதிபதியின் முன்வந்து நின்ருன். அவனேக்கண்டு சபையிலுள்ளோர் அனேவரும் மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். இவன்தான் கான்ராத்தும், ஸ்பிரெஞ்சரும் கலகப்பட்டுக்கொண்டிருக்கும்போது அவர்களுடைய விவாதங்களேச் சரியாகக் கேட்டுக்கொண்டிருந்தவன். பிறகு இவனே விசாரணைசெய்ததில், இவன் சொன்னதும் முன் கான்ராத்து சொன்னதும் முற்றும் சரியாகப் பொருந்தியிருந்தன. முதல் முதல் மூன்றுபேர் தன் வீட்டுவாயில்வழியாய்ச் சென்றதாகத் தெரிவித்த பிரபுவும், தன்னுடன் ஏதோ செய்திசொல்லும்படி தன் வீட்டுவாயிலில்வந்து காத்துக்கொண்டுநின்றவன் இவனே என்ருன்.

இந்தச் சாக்ஷியின் வாக்குமூலத்தில் ஒரு புதுமையைக்கேளுங்கள். இவன் கரிஸ்டாப்புக்குப்போகும் காட்டில் கலகப்பட்டுக்கொண்டிருந்த இருவருக்கும் எச்சரிக்கை சொல்லிவந்த சிறிதுநேரத்திலேயே வெடியோசை உண்டாயிற்றே; அதைக் கேட்டவுடனே இதென்னவென்று அவன் அவ்விடம்போய்ப் பார்த்திருக்கலாமல்லவா? பார்த்திருந்தால் அச்செய்தியை உடனே அவன் அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கக் கூடுமே. இவ்விஷயத்தை நியாயாதிகாரி மனதிற்கொண்டு, நீ அந்தக் காட்டைவிட்டு அப்பால் போனபிறகு

யாதாயினும் வெடியோசை உன் காதுக்குக் கேட்டதா என்று வினவ, அவன், அப்படிப்பட்ட தொன்றும் எனக்குக் கேட்கவில்லை; கேட்டிருந்தால் உடனே நான் போய்ப் பார்த்திருக்கமாட்டேனு வென்முன். அதுகேட்டு நியாயாதிகாரி, என்ன? உன்னைவிட இன்னும் அதிகதூரத்திலிருந்த இந்தக் கனவான் தனக்கு அந்த ஓசை கேட்டதாகச் சொல்லுகிருர்; சமீபத்திலிருந்த உனக்குக் கேட்கவில்லையென்றுல் இதென்ன ஆச்சரியம் என்று வினவ, அவன் நீங்கள் ஏன் இது விஷயத்தைப்பற்றி மறுத்து மறுத்து வினவுகிறீர்கள்; நான் செவிடன்; என் காதுக்கு ஒன்றும் கேட்கவில்லையென்முன். இதுவரையில் சபையார்சொன்ன பேச்சுகளையெல்லாம் கேட்டு நீ சரியாய்ச்சமாதானம்சொல்லியிருக்க, செவிடனென்று இப்பொழுது பொய்பேசுகிருயா? ஜாக்கிரதையாய்ப்பேசு என்று அவர்கள்மறுபடி அதட்டிக்கேட்க, அவன், தான் செவிடனென்பதற்கு ஆதாரமாய்ப் பல டாக்டர்கள் கொடுத்திருக்கும் பத்திரிகைகளையெல்லாம் எடுத்துக்காட்டி, நான் இப்பொழுது சபையார் சொன்னவிஷயங்களைத் தெரிந்துகொண்டது எனது கட்புலனுலேயேயன்றிச்செவிப்புலனுலல்லவென்று அதைப் பற்றிய பல செய்திகளையும் விவரமாய் எடுத்துக் கூறினுன். இவற்றுலும் இவைபோன்ற பின்னும் பல அத்தாட்சிகளாலும் கடைசியில் நியாயாதிகாரிகளுக்கு உண்மை இத்தன்மையதென்று தெளிவாக விளங்கியது. குற்றவாளியாகக் கருதப்பட்டிருந்த கான்ராத்து விடுதலைசெய்யப்பட்டான்; அவனது உதாரபுத்தியையும் உண்மை தவருமையையும் கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்து அவனை வாழ்த்திவிட்டுப்போனுர்கள்.

நன்னடக்கை அல்லது மரியாதை.

நன்னடக்கையென்பது நற்புத்தி, நற்குணம், தன்சுகத்தைத் துறந்தாயினும் பிறர்க்காகப்பாடுபடுதல் இவைகளடங்கிய ஓர் குணமாகும். இந்தக் குணம் திடீரென்று உண்டாகக்கூடியதல்ல; சிறுவயதிலிருந்து பழக்கத்தினுல் உண்டாகவேண்டும். அது ஒருபொழுதும் சுலபமானதல்ல. சிறுவயதிலிருந்தே உண்டானுல்தான் இந்தக் குணம் உடன்பிறந்ததாகும். இந்தக்குணத்தினுல் விளையும் நன்மை மிகவும் அதிகமானது.

நன்னடக்கை நம்மிடமிருக்குமாயின் பிரபுக்கள் நம்மைப் பார்க்கும் பொழுதே நமக்கு மரியாதைபண்ணுவார்கள். ஒருமனிதனுடைய வித்தைகள் அவனுடன் பேசியே அறியவேண்டியவை; நன்னடக்கையோ அப்படியல்ல, முகக்குறியாலேயே தெரியவரும். மரியாதை என்பதற்குச் சிலர் தாழ்ந்து வந்தனம் பண்ணுவ

தென்றும் மேனுக்கு உபசாரம் செய்வதென்றும் அர்த்தங்கொள்ளு வார்கள். இவைகள் நன்னடக்கையாகா; மனப்பூர்வமான அபி மானத்துடன் செய்யும் மரியாதையும் கௌரவமுமுள்ள நடத் தையே நன்னடக்கை என்னப்படும்.

நற்புத்தியென்பதுதான் எப்பொழுதும் நன்னடக்கையை நிச்ச யப்படுத்தவேண்டியதாயிருக்கிறது. ஒரு காலத்தில் ஒருமனிதரிடம் பேசும் பேச்சு மரியாதையாயிருக்கலாம். அதே பேச்சு மற்றொரு காலத்தில் மற்றொருவரிடம் அமரியாதையாய் இருக்கலாம். அப்பா ஸௌக்கியமா என்று சில பேரை நாம் விசாரித்தால் அவர் கள் மரியாதையாய் நினைத்துக்கொள்வார்கள். நம்மைவிட ஐச்வரி யம் முதலியவைகளில் உயர்ந்தவர்களை நாம் இப்படியே விசாரிப் போமேயானால் அவர்கள் நமக்குப் பைத்தியம்பிடித்திருப்பதாய் எண்ணுவார்களல்லவா?

நன்னடக்கையுள்ள ஒருவன் மிகவும் மரியாதையுடன் அவரவர் களுக்கு ஏற்றபடி பேசுவான். பெரிய மனிதர்களுடைய வீட்டுக்குப் போனால் எந்த இடத்தில்போய் உட்காரவேண்டுமோ அந்த இடத் திலேபோய் உட்காருவான். ஒரு ஸபையில் எல்லாரும் நின்று கொண்டிருக்கத் தான் மட்டில் உட்காரமாட்டான். ஒருபோசனபங் தியில் எல்லாருக்குமுன் காய்கனிகளைத் தான் ஒருநாளும் புசிக் கான்.

உயர்ந்த நன்னடக்கை இவ்வுலகத்தில் ஒவ்வொருவனுக்கும் இரு க்கவேண்டியது அவசியமே. அப்படியன்றியில் கடுகடென்றாவது படபடவென்றாவது கூச்சமாயாவது ஒரு மனிதனிருப்பானேயா னால் அவன் ஒன்றுக்கும் உதவான். நற்குணமும் வித்தையும் தங் கத்தைப்போல விலையுள்ளனவாயிருக்கின்றன; அப்படியிருந்தபோ திலும் நல்ல மெருகுமட்டில் இல்லாதிருக்கும் பக்ஷத்தில் அவைகள் பிரகாசிக்கமாட்டா. ஆயினும் மெருகிட்ட பித்தளை மெருகிடாத பத்தரைமாற்றுத் தங்கத்தைவிட அதிகமாய் ஜனங்களைப் பகட்டுகிற தல்லவா? அதுபோலவே சிலர் என்னதான் மூடர்களாயும் துர்க் குணமுள்ளவர்களாயும் உள்ளுக்குள் இருந்தபோதிலும் வெளிமரி யாதை முதலியவைகளில் பகட்டாய் மின்னிக்கொண்டிருப்பதினால் சிலர் மனதைக் கவரக்கூடும்.

முதலாவது நன்னடக்கையென்பதில் ஒவ்வொரு தேசத்திலிருக் கும் ராஜரீதிமரியாதைகளும் அடங்கியிருக்கின்றன. அவைகள் தெரி யவேண்டியது அவசியமே. வியன்னா தேசத்தில் ஜனங்கள் தங்கள் அரசனுக்கு ஸலாம் பண்ணுவதற்குப் பதிலாக நமஸ்காரம்பண்ணுகி றார்கள். பிரான்சுதேசத்தில் அரசன்கையில் முத்தங்கொடுக்கிறார் கள். ஸ்பெயின் இங்கிலாந்து முதலான தேசங்களில், ஸலாம், கைக்கு முத்தம் இரண்டும் நடந்துவருகின்றன. இந்தப்படியே ஒவ் வொருதேசத்தில் ஒவ்வொருவிதமான மரியாதைகள் நடந்துவரு

கின்றன. ஆனால் இந்த விஷயங்களில் நாம் செய்யவேண்டியதென்னவென்றால், அந்தந்த ஊரில் இருக்கும் வழக்கப்படி அங்கங்கே நடந்தேதீரவேண்டும். "ஊருடன் ஒத்துவாழ்."

இரண்டாவது, ஒரு சங்கத்தில் நாம் போய் உட்காரும்பொழுது அதிலிருக்கும் ஒவ்வொருவருக்கும் தக்கபடி நாம் சரியாய் நடப்பதும் நன்னடக்கை யென்பதில் அடங்கியிருக்கிறது. சங்கமாய்ச் சேர்ந்து ஒரு பொதுஸ்தலத்தில் வெகு பெயர்கள்போய் உட்காரும் பொழுது அவர்களில் ஒவ்வொருவருக்கும் தாம் மற்றவர்களுடன் சமமாய் அந்த இடத்தில் வந்து உட்கார்ந்திருக்கிறோமென்னும் அபிப்பிராயம் வந்துவிடுகிறதல்லவா? அவ்விடத்தில் யாரேனுமொருவனுக்கு நீ மரியாதைக்குறைவாய் நடந்துகொண்டால் அது அவனை எவ்வளவோ அவமானம் பண்ணுவதற்குச் சரியாகும். ஒருமனிதன் சங்கத்தில் உன்னுடன் பேச ஆரம்பித்துக்கொண்டிருக்கும் பொழுது நீ அவனைப்பற்றிப் பராமுகமாயிருப்பதாக ஜனங்களுக்குக் காட்டிவிட்டால் அது அவன்மனதை எவ்வளவோ பீடிக்கும்.

மூன்றாவது நன்னடக்கை யென்பதில் ஒவ்வொரு ஸ்தலத்தினுடைய மரியாதைகள் அடங்கியிருக்கிறன. ஒருவித வழக்கம் ஒரே கிராமத்தில் இரண்டு இடங்களில் வெவ்வேறாக இருக்கலாம்; இவைகளை நன்றாய் அறிந்து தக்கபடி நடக்கவேண்டியது அவசியம்.

கடைசியாய் நீகைக்கொள்ளவேண்டியதென்னவென்றால்: நீ என்னதான் படித்தாலும் நன்னடக்கை இல்லாவிடில் உன் படிப்புகளெல்லாம் பூதங்காத்த புதையல்போல விளங்கவேமாட்டா. படிப்பில்லாமல் நன்னடக்கை மட்டில் உள்ளவனா யிருந்தால் அதுவும் சவத்துக்குச் செய்த அலங்காரம்போலத் தோன்றுமேயல்லாது வேறல்ல. படிப்பும் நன்னடக்கையும் உன்னிடத்தில் கலந்துஇருந்தால் நீ எல்லாரிடமும் மேன்மைபெற்று, பொன்மலர் நாற்றமுடைத்து என்று ஜனங்கள் சொல்ல வாழ்வாய்.

ஆகையால் நன்னடக்கையுடையவனாக ஒவ்வொருவிதத்திலும் முயற்சி செய்யவேணும்; ஒவ்வொரு சங்கத்திலும் நன்னடக்கையில் தேர்ந்தவர்கள் செய்யும் செய்கைகளைக் கவனித்துப்பார்; அவைகளுக்குமேலாக நீசெய்ய எத்தனப்படவேண்டும். அப்படி எத்தனப்பட்டால்தான் கடைசியில் அவர்களுக்கு உள்ளமட்டும் உனக்கும் நன்னடக்கை கிட்டும். குலமகளுக்கு மானம் எப்படியோ விலைமகளுக்கு மேனி மினுக்குதல் அப்படியே; இருட்டுக்கு ஒளி எப்படியோ அப்படியே ஒரு மனிதன் முன்னுக்கு வர நன்னடக்கையாம்.

சிநேகம்.

சில வாலிபர்கள் சிறிதும் கபடமில்லாமல் உலக வழக்கம் கொஞ்சமேனும் தெரியாதவர்களாயிருக்கின்றனர். இவர்களிடம் யாராவது போக்கிரி அல்லது துஷ்டன்வந்து சேர்ந்துகொண்டு பரம மித்திரன்போல் காட்டுவானேயானால் அதைக் கபடமென்று சிறிதேனும் எண்ணாமல் அவனை முற்றிலும் நம்பிவிடுகிறார்கள்; அவனிடத்தில் அதிக நம்பிக்கை வைத்துவிடுகிறார்கள். கடைசியாய்க் கைப்பொருள்களையெல்லாம் இழந்து அவஸ்தைப்படுகிறார்கள். ஆகையால் இவ்விதமான கபடநேசர்களை யொருநாளும் நம்பலாகாது. அவர்கள் உன்னிடத்தில் எவ்வளவு வேஷத்துடன் வருகிறார்களோ நீயும் அவ்வளவு வெளிமரியாதையுடன் அவர்களைப் பெற்றுக்கொள். பேச்சுமட்டும் இன்பமாய்ப் பேசலாம், நம்பிக்கையென்பதை யொருநாளும் வைக்காதே. உண்மையான சிநேகம் திடீரென்றாவது அல்லது சொற்பகாலத்திற்குள்ளாவது உண்டாகவேமாட்டாது. அது கொஞ்சங்கொஞ்சமாய் நாளடைவிலே உண்டாகவேணும். சிநேகிப்பவர்கள் இருவர்களிடமும் ஒரேவித நற்குண நற்செய்கைகள் இருந்தாலொழிய சிநேகமென்பது அவர்களுக்குள் வேரூன்றாது. அன்றியும் முதலில் நாம் பார்க்கும்பொழுதே எவன் நம்மிடம் அதிக அன்பைக் காட்டுகிறானோ அவன் சிநேகம் நாளுக்குநாள் குறைந்து கடைசியில் கபடவேஷமாய் முடியும். நல்ல சிநேகமென்பது அப்படியில்லாமல் முதல்முதல் மிகவும் சூக்ஷ்மமாயும் கொஞ்சங் கொஞ்சமாயும் ஆரம்பித்து நாளாக நாளாக நன்றாய் வேரூன்றி நிற்கும்.

சில பெயர்கள் சிறிதுகாலம் அந்யோந்யசிநேகமாயிருப்பார்கள். ஆயின் இவர்களது நேசம் நீடித்திராது. இப்படி இவர்கள் கொஞ்சகாலம்மாத்திரமே இருப்பது நமக்கு நன்மையே. ஏனெனில் இவர்கள் யாவர்களென்றால் குடி அல்லது குடிசை நுழைதல் முதலான துர்நடைத்தைகள் உள்ளவர்களாம்; இந்தத் துர்நடைத்தைகளே இவர்களுடைய சிநேகத்திற்கு முதலில் காரணங்களாகின்றன. ஐயோ அந்நியாயம்! இதையும் சிநேகமென்று சொல்லுகிறார்களே! நல்நடத்தைகளைக் கெடுக்கவந்த சண்டாளர்களென்று ராஜாங்கத்தார் இவர்களைத் தண்டிக்காமல் விட்டுவிடுகிறார்களே! இவர்கள் முதலில் ஒருவருக்கொருவர் சகாயமாய்க் கடன் கொடுத்துக்கொள்வார்கள். சண்டை சச்சரவுகளில் ஒருவனையொருவர் பாதுகாத்துவருவார். பிறகு ஏதாவது ஒரு சங்கடகாலத்தில் ஒருவன் மற்றொருவனை விட்டுவிட்டுத் தன்னைக்காப்பாற்றிக்கொள்ள எவ்வளவு பொய்சொல்ல வேண்டுமோ அவ்வளவையும் சொல்வான்.

ஒருமனிதன் 'ஸத்தியமாய் ஆணைப்படிக்கு' என்று ஒரு சமாசாரத்தை நீநம்புதலின்பொருட்டுச் சொல்ல ஆரம்பிப்பானேயானால் அவன் உன்னை மோசம்செய்ய வந்தவனென்று நிச்சயமாய் எண்ணு; அவன் சொல்லப்போகிற சங்கதியில் உண்மையில்லாததனாலல்லவோ சத்தியம் ஆணைமுதலான மொழிகளை அவன் முறையிடுகிறான். இப்படி அவன் செய்வதெல்லாம் நமக்கு நம்பிக்கையுண்டாகும் பொருட்டேயாதலின்அதை நாம் ஒருநாளும் நம்பக்கூடாது. அவன் சொல்லும் பேச்சில் உண்மையிருக்கும் பக்ஷத்தில் ஸத்தியம் ஆணை முதலியவைகளை யெடுத்துக் கூறுவானேனன்.

அறிமுகம் நேசம் இவ்விரண்டையும் நாம் நன்றாய்ப் பகுத்தறியவேண்டும். சிலர் நமக்கு அறிமுகமாய் இருக்கலாம். அவர்களை அவ்வளவுடனே வைத்துக்கொள்ளவேணுமே யல்லாது நமது சிநேகிதர்களென்று ஜனங்கள் சொல்ல இடங்கொடுக்கக்கூடாது. ஒருகால் மதிமயங்கி நாம் அப்படி செய்வோமேயானால் அது நமக்குப் பின்னால் கெடுதியாய் முடியும். நீ யாருடன் சிநேகம் பண்ணுகிறாயோ அவர்களுடைய யோக்கியதையைக்கொண்டு ஜனங்கள் உன் யோக்கியதையும் நிச்சயிப்பார்கள். "நீ யாருடன் இணங்கி யிருக்கிறாய் சொல்லு, உன் யோக்கியதையை நான் சொல்லிவிடுகிறேன்" என்று ஒரு பழமொழி ஸ்பெயின் தேசத்தில் வழங்கிவருகிறது. அதற்குச் சரியாக நமது தேசத்து ஔவையென்னும் சீமாட்டியும், "கற்றாரைக் கற்றாரே காமுறுவர், கற்பிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்" என்று சொல்லியிருக்கிறாள். இந்த வசனங்களின் முக்கிய தாற்பரியமாவது, படித்தவர்கள் படித்தவர்களோடும், படியாத மூடர்கள் மூடர்களோடும் சேருவதுபோல ஒரே குணமுள்ளவர்களே ஒருவரோடு ஒருவர் சேருவார்களென்பதேயாம். இந்தக் கருத்தை உத்தேசித்தே, ஒருவன் யாரோடு இணங்கியிருக்கிறானோ அவர்கள் பேரைச் சொன்னாலே அவனது குணத்தைத் தெரிந்துகொள்ளலாமென்னும் அர்த்தமுள்ள ஸ்பெயின்தேசத்துப் பழமொழியும் ஒன்று வழங்கிவருகிறது. நாம் ஒரு போக்கிரியுடன் அதிக சகவாசம் வைத்துக்கொண்டால் நம்மையும் ஜனங்கள் ஏன் போக்கிரியென்று சொல்லக்கூடாது. ஆகையால் கெட்டவர்களுடன் நாம் சேரவே கூடாது; அவர்களுடன் நாம் சேரக்கூடாதென்பதால் அவர்களைச் சத்துருக்களாகப் பண்ணிக்கொள்ளவேண்டுமென்பதல்ல; அவர்களிடம் நமக்கு சிநேகமும் வேண்டாம் சண்டையும் வேண்டாம். அவர்கள் குணத்திற்காக நமது மனதில் வெறுப்பு இருப்பினும் அவர்களை நாம் நேரே காணும்பொழுது முகத்தில் சிரிப்பிருந்தால் அதனால் யாதொன்றும் குறைந்துபோகாது; மனதிற்குள்ஒவ்வொருவருக்கும் அடக்கமான அபிப்பாரயமிருக்கவேண்டியது அவசியமே; வெளியில்மாத்திரம் எல்லாருடனும் கலகலப்பாய் இருக்கவேண்டும். கலகலப்பாய் இராமல் கடுகடுப்பாய் இருப்போமேயானால் அது மிகவும் துன்

பங்களை விளைவிக்கும். அதிக கலகலப்பும் கூடாது, முற்றிலும் கடு கடுப்பும் கூடாது. இவ்விரண்டிற்கும் நடுநிலை யொன்றுண்டு. அதைத் தெரிந்துநடப்பவர்கள் க்ஷேமத்தை யடைவார்கள். தெரியாதவர்களோ பிரயோஜனமற்றவைகளில் வெகு அடக்கமாயிருந்து ஜனங்களுடைய விரோதத்தைச் சம்பாதிப்பார்கள்; தங்களுக்குத் தெரிந்தவைகளைக் கண்டவர்களிடமெல்லாம் சொல்லி தங்கள் மதிப்பைக்குறைத்துக்கொள்வார்கள்.

ஸம்ஸ்கிருத கவிகள் சரித்திரம்.

சென்றசஞ்சிகையில் நவரத்நங்கள் என மகிமைபெற்ற மகா கவிகளைக்குறித்துச் சொன்னோமே. இப்பொழுது அந்த நவரத்நங்களைப்போலவே சிறந்தவராகி மிகப்பிரசித்தராயிருக்கிற மற்றும் சில ஸம்ஸ்கிருத கவிகளைப்பற்றி இங்கு ஒருவாறு எழுதுவோம்.

பவபூதி மகாகவி.

இக்காலத்தில் பேரார் (Berar) என்று வழங்குகிற விதர்ப்ப தேசத்தில் பத்மபுரம் என்று ஓர் பிரதான நகரம் இருந்தது. அந்த நகரத்தில் உதும்பரஜாதி பிராமணர்கள் சிலர் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் பட்டகோபாலனென்றொரு பெரியவர் இருந்தார். இவர்தாம் பவபூதி மகாகவியின் பாட்டனார். இவர்களுடைய கோத்திரம் காச்யபகோத்திரம். யஜுர்வேதத்தின் தைத்திரீய சாகையை இவர்கள் அத்தியயனம் பண்ணிவந்தார்கள். இந்த பட்டகோபாலருக்கு ஓர் குமாருண்டு; அவர்பெயர் நீலகண்டர். இவர் ஜாதுகரணி என்னும் பெண்ணை மணம்புரிந்துகொண்டார். இவ்விருவர்களுக்கும் உண்டானவர் பவபூதி. பவபூதிக்கு 5-ம் தலைமுறையில் மகாகவி என்று ஒருவரிருந்தார். அவர் வைதிககருமங்களில் மிகுந்த ஆஸ்தையுடையவரென்றும், வாஜபேயயாகம் செய்தவரென்றும் தெரியவருகிறது. பவபூதி என்பவர் தாம் ஸம்ஸ்கிருத நாடகங்கள் எழுதுவதற்குமுன் வெகுகாலம் படித்துக்கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. வேதம், உபநிஷத்து, சாங்கியபாதம், யோகம் முதலியவைகளைத் தான் நன்றாய்ப் படித்திருப்பதாகத் தன் நாடகங்களில் காட்டிக்கொள்ளுகிறார். அன்றியும் பவபூதி "கியானநிதி" என்றொரு பெரிய சந்நியாசியிடம் வேதாந்தத்தைச் செவ்வையாய் அப்பியசித்ததாகத் தெரியவருகிறது.

இவர்செய்த முக்கிய கிரந்தங்கள் மூன்றுநாடகங்கள். அவைகளாவன: மகாவீரசரித்திரம், உத்தராமசரித்திரம், மாலதீமாதவம். இவைகளில் மகாவீரசரித்திரம், அவர் முதல் முதலில் செய்தபடி

யால் அவர்பெயருக்குத் தகுந்த அவ்வளவு அழகாயில்லை. மற்ற இரண்டு நாடகங்களும் மிகவும் நேர்த்தியானவைகள். அபிப்பிராயங்களை எடுத்துக்காட்டுவதில் காளிதாசனைவிட பவபூதியை உயர்ந்தவராகச் சொல்லலாம். பதங்களால் பவபூதி படிக்கிறவர்களை மயக்கிவிடுவதில் அதிக சமர்த்தர். நதி, அருவி, மலை, காடு இவைகளை பவபூதி வர்ணித்ததுபோல ஒரு ஸம்ஸ்கிருதகவியும் வர்ணிக்கவேயில்லை.

இந்த மகாகவி வசித்தகாலத்தை நிச்சயப்படுத்த நல்ல ஆதாரங்கள் இருக்கின்றன. கநோஜா (Kanouja) தேசத்து அரசனான யசோவர்மன் பவபூதியைத் தனது ஸம்ரக்ஷணையில் வைத்துக்கொண்டிருந்தான் என்று ராஜதரங்கிணி என்னும் புஸ்தகத்தில்கண்டிருக்கிறது. இந்த யசோவர்ம ராஜன் காச்மீரதேசாதிபதியான லளிதாதித்தியன் என்பவனால் ஜயிக்கப்பட்டான். லளிதாதித்தியன் ஆண்டகாலம் கி. பி. 693–முதல் 729–ம் வருஷம்வரையில் என்று அநேக சிலாசாஸநங்களினால் ஏற்படுகிறது. இதைக்கொண்டு பவபூதி கி. பி. 700 வருஷத்துக்குச் சரியாய் வஸித்ததாகச் சொல்லலாம். அதாவது காளிதாஸனுக்கு 200 வருஷங்களுக்குப்பிறகாகிறது. காளிதாஸன் கிரந்தங்களைப்படித்துத் தன் நாடகங்களை எழுதினதாக பவபூதியும் அநேக இடங்களில் காட்டியிருக்கிறார். அவரது மாலதீமாதவத்தில் ஒன்பதாவது அங்கத்தில் மாதவன் என்னும் கதாநாயகன் தன் நாயகிக்கு ஒரு மேகத்தைத் தூதனுப்புகிறான்; அதானது காளிதாஸனுடைய மேகதூதமென்னும் காவியத்திலிருந்து எடுத்திருக்கக்கூடும். மேலும் இரண்டாவது அங்கத்தில் காமந்தகி என்னும் கிழவி சாகுந்தலத்தை எடுத்துப்பேசுகிறாள். இதுவும் காளிதாஸனுடைய புஸ்தகங்களைப் படித்தறிந்திருப்பதாக பவபூதிதான் காட்டிக்கொண்டதுபோலும்.

சில ஜனங்கள் காளிதாஸனும் பவபூதியும் ஒரேகாலத்தில் வசித்தார்கள் என்றும், பவபூதி உத்தரராமசரித்திரத்தை எழுதிக் காளிதாஸனிடம் கொண்டுபோய்ப் பிழைதிருத்தச் சொன்னாரென்றும், அப்பொழுது காளிதாஸன் ஒரு தாஸியிடம் உட்காந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தானென்றும், அச்சமயத்தில் பவபூதி ஒரு சுலோகம்படிக்க அதுகேட்டு சுன்னம் அதிகமாய்ப்போச்சுதென்று காளிதாஸன் சொன்னானென்றும், அதைக்கொண்டு பவபூதி தன் சுலோகத்தை திருத்திக்கொண்டாரென்றும் சொல்வார்கள். எப்படியெனில் "ராத்ரிரேவம் வ்யரம்ஸீத்." ("ராத்ரிரேவம் வ்யரம்வீத்") என்று பவபூதி ஒருசுலோகத்தை முடித்திருந்தாராம். அதன் அர்த்தம் "இரவு இம்மாதிரி கழிந்தது" என்பது. ஸம்ஸ்கிருதத்தில் ம் என்பது சுன்னமென்றுசொல்லப்படும். வெற்றிலைபோட்டுக்கொள்ளும்பொழுது சுன்னம் (சுண்ணாம்பு) அதிகம் என்று இரண்டு பொருள்படக் கூறியதுகேட்டு "ராத்ரி ரேவம் வ்யரம்வீத்" என்ப

தில் சுன்னமாகிற மகர ஒற்று அதிகமென்றகருத்து உணர்ந்து பவபூதி யானவர் "ராத்ரிரேவ வ்யரம்ஸீத்" என்று திருத்திக்கொண்டார். இதன் அர்த்தம் "ராத்ரி மாத்திரமே கழிந்தது" என்பதாகையால் முன்சொன்னதைவிட இது ரசமாகவிருக்கிறது. ஆயினும் முதலில் "ஏவம் வ்யராம்ஸீத்" என்று பவபூதி எழுதிப் பிறகு "ஏவ வ்யரம் ஸீத்" என்று காளிதாஸன் நடையைக்கண்டு திருத்திக்கொண்டிருக் கலாம் ஆதலின் இதனாலேயே இவ்விருவர்களும் ஒரேகாலத்தில் வசித்ததாக உத்தேசித்துக் கூறுவது உசிதமாய்த்தோன்றவில்லை. இன்னும் வேறு ஆதாரங்கள் இருக்குமாயின் அவைகளைக்கொண்டு இவ்விருவரும் ஒரேகாலத்தில் வசித்தவரென்று கூறினாலும் கூறத் தகும்.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

தனஞ்சயர்.

ஸம்ஸ்கிருத நாடகங்களுக்குரிய லட்சணங்கள் முதல்முதல் பாதர் என்கிற மகரிஷியால் கூறப்பட்டதாக சனங்கள் சொல்லு கிறார்கள். ஆனால் பெரும்பாலும் ஸம்ஸ்கிருதத்தைக் கற்றுணர்ந்து நாடகங்களைப்படித்து ஆனந்திக்கிறவர்கள் "தசரூபகம்" என்கிற கிரந்தத்தையே நாடுவார்கள். பரத மகரிஷியால் செய்யப்பட்ட நாட் டியசாஸ்திரத்தைப்போல தசரூபகம் அவ்வளவு பழைமையானது அல்லாவிடினும், இதில் சொற்சுவை பொருட்சுவை மிகவுமதிகம். இக்கிரந்தத்தைச்செய்தவர் தனஞ்செயரென்ற மகாகவி. அவரது சரித்திரத்தைப்பற்றிச் சற்று வெளியிடுவோம்.

தசரூபகமென்கிற கிரந்தத்தின் கடைசி சுலோகத்தால் தனஞ்செ யரென்ற மகாகவி, விஷ்ணு என்ற ஒரு பிராமணருடைய குமார ரெனவும், முஞ்சன் என்ற ஒரு அரசனுடைய காலத்தில் வடதே சத்தில் இருந்தாரெனவும் தெரியவருகிறது. இந்த இரண்டொரு விஷயத்தைத் தவிர வேறு யாதொரு நிச்சயமானகாலமும் நமக்குப் புலப்படவில்லை. நாமிப்பொழுது முஞ்சன் என்ற சரித்திரபுருஷ னது காலத்தை நிச்சயிப்போமேயானால் அதைக்கொண்டு சற்றேறக் குறையத் தனஞ்செயருடைய காலத்தைக் கண்டறிந்ததாகச் சொல் லலாம். இதுவரையில் நமது பரீக்ஷைக்குள் வந்திருக்கின்ற அநேக சிலாசாஸனம் தாம்பிரசாஸனமுதலிய ஆதாரங்களால், முஞ்சன் என்று பெயர் பொருந்தி இராஜகுலத்திலுதித்தவர் ஒருவரேதானி ருந்ததாகக் காணப்படுகின்றது. இவர் தாராபுரியில் அரசாட்சி செய்த போஜமகாராஜாவின் சிற்றப்பன். இவர் சாலிவாகன சகம் 974-வருஷம் இருந்தார் என்பதற்கு ஆதாரமிருக்கின்றது. இதைக் கொண்டு கி. பி. 1052-வது வருஷம் அதாவது சற்றேறக்குறைய 830 வருஷங்களுக்குமுந்தி தனஞ்செயர் நமது தேசத்தைக் கிரந்தங் களால் அலங்கரித்ததாகச் சொல்லலாம்.

அன்றியும் இவர் இருந்தகாலம், இதுதானென்று நிச்சயிக்க இன்னமொரு ஆதாரமிருக்கின்றது. தனஞ்செயர் செய்த தசரூபக

மென்கிற கிரந்தத்திற்கு, தனிகர் என்றகவி அதேகாலத்தில் பதவுரை செய்திருக்கிறார். தனிகரும், விஷ்ணு என்கிற பிராமணருடைய குமாரர். சகம் 974–வருஷம் பிறந்த ஒரு தாம்பிரசாஸனத்தால் தனிகரென்னும் பண்டிதரின் குமாரனான வசந்தனுக்குச் சில நிலங்கள் கொடுக்கப்பட்டதாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளினால் நமக்கு விளங்குகின்றவை யாவை என்றால்; தனிகர், தனஞ்செயர் இருவர்களும் சகோதரர்களென்றும், ஆதிஸம்ஸ்கிருத பாஷையைக் கற்றறிந்தவர்களென்றும், இவர்களில் ஒருவர் நாடக லட்சணமாகிய தசரூபகத்தை எழுத, மற்றொருவர் அதற்கு வியாக்கியானம் எழுதினாரென்றும், இவ்விளையவர்க்கு அப்பொழுது தானம் வாங்கத் தகுந்த யோக்கியதையுள்ள ஒரு குமாரனிருந்தானென்றும், தெரியவருகின்றன. சிலர் தனஞ்செயர், தனிகர் என்றுசொல்லப்படுகின்ற இவ்விருவர்களுக்கும் தகப்பனார் விஷ்ணு என்பவரே என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், இவ்விரண்டு பெயர்களினாலும் குறிக்கப்படுகின்றவர் தனஞ்செயர் ஒருவரே என்றும், அவர்தாமே தம் கிரந்தத்திற்கு உரை எழுதிக்கொண்டார் என்றும் சிலர் சொல்லுவார்கள். அவர்கள் பெயர்கள் வெவ்வேறாகக் குறிக்கப்பட்டு ஒருவர் புஸ்தகம் எழுதினதாகவும், மற்றொருவர் அதற்கு உரை எழுதினதாகவும், அநேக ஆதாரங்களிருப்பதாக நாம் முன்னமே காட்டியிருக்கிறோமல்லவா? ஆகையால் இவ்விருவர்களும் சகோதரர்கள் என்று சொல்லவேண்டுமேயல்லாது இருவரும் ஒருவரென்று சொல்லலாகாது. இவர்கள் வாழ்ந்திருந்தகாலம் கி. பி. 1050, அதாவது 830 வருஷங்களுக்கு முந்தின காலமென்று முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா? பின்னும் சில கவிகளைப்பற்றி மேல் சஞ்சிகைகளில் வெளியிடுவோம்.

சமாசாரம்.

இந்துதேசப் பொருட்காட்சி.—லண்டன்மாநகரத்தில் சில பெரிய மனிதர்கள் ஒரு சபையாகச்சேர்ந்து இத்தேசத்திலுள்ள பலவிதமான பொருள்களையும் அழைப்பித்து வருஷந்தோறும் சந்தைபோலக் காட்சிசாலையொன்று அமைக்கவேண்டுமென்று ஏற்பாடுசெய்து, அவ்வண்ணமே இவ்வருஷமும் செய்யப்போகிறார்கள். அந்தச் சந்தைக்கு இதுவரையில் அழைப்பித்து வைக்காதவைகளான, இத்தேசத்து மூன்று ராஜதானிகளிலும், சுதேசப்பிரபுக்களுடைய ராஜ்யங்களிலுமுள்ள பாடசாலைகளில் படிக்கின்ற சிறுவர் சிறுமியர்கள் எழுதும் கையெழுத்துப்புத்தகம், வர்ணம் வைத்து எழுதும் தேசபடங்கள், சிறுமிகள் தைத்த தையல்வேலை முதலானவைகளை அழைப்பித்துவைக்கும்படி ஏற்பாடுசெய்து, இத்தேசத்துச் சிறுவர்களின் கையெழுத்துப் புத்தகம் முதலியவைகளை அழைப்பித்துக்கொள்ளும்படி இவ்விடத்துக்குச் சிலரை அனுப்பியிருக்கிறார்களாம். இந்தச் சபைக்கு மகாகனம்பொருந்திய பிரின்ஸ் அவ் வேல்ஸ் பிரபு அவர்கள் அக்கிராஸனாதிபதியாயிருக்கச் சம்மதித்து அதற்குத் தம்மாலியன்றவளவு உதவிபுரியும்படியாகவும் அங்கீகரித்திருக்கிறாராம். நமது தேசத்தில் கல்வி இன்னும் மேன்மேலும் விருத்தியாவதற்கு இவ்வேற்பாடுகள் மிகவும் ஸாதகமாகுமெனத் தோன்றுகின்றது.

S. P. C. K. Press, Vepery, Madras. 1886.

ஆக்ஷேபம் செய்யமாட்டானே" என்றாள். அதற்கு லிங்கப்பன் "அதெல்லாம் நமது பழைய அரசன்நாளில் குற்றமாகமாட்டாது; இப்பொழுது அவர் ஸ்தானத்தில் வந்திருக்கும் அங்கிரசு என்னும் ஞானி இரக்கமற்றவராக இருக்கிறார். வல்லபன் நீலாக்ஷியைக் கலியாணஞ்செய்துகொள்வதாக வெகுவாய்ச் சொல்லியும் அவன் முதலில் செய்த குற்றத்திற்காக அவனைக் கொல்ல நிச்சயித்திருக்கிறார். எங்களால் கூடியமட்டும் இப்புது அரசனுக்குச் சொல்லியாகிவிட்டது. இனி நீதான் அரசனிடம்போய்ப் பேசி உன் தமையனை விடுவிக்கவேண்டும். இதற்காகவே என்னை வல்லபன் உன்னிடம் அனுப்பினான்" என்றான். அதற்குச் சுமதி முதலில் கொஞ்சம் அதைரியப்பட்டு, பிறகு அகத்தியம்போய்ப் பேசுவதாக ஒப்புக்கொண்டு, பேசி முடியும் சமாசாரத்தையும் பொழுதுபோகுமுன்னம் சொல்லியனுப்புவதாக லிங்கப்பனுக்குச் சொல்லி அனுப்பிவிட்டாள்.

தான் சொன்ன சொற்படியே சுமதியும் உடனே அரசனிடம் சென்று அவன் காலில்விழுந்து தன் தமையனுடைய உயிர்ப்பிச்சை கேட்டாள். அரசன் சட்டத்தையெடுத்துக்காட்டி, சட்டப்படி நான் நடக்கிறவனேயன்றிச் சிபார்சுக்கு இடங்கொடுக்கிறவனல்லனென்று, கொஞ்சமேனும் இடங்கொடுக்காமல் பேசினான். அதற்குச் சுமதி "சட்டங்கள் எப்படியிருந்தபோதிலும் தயையென்பது மனிதனுக்கு வேண்டும். அது இல்லாவிடில் எவ்வளவுதான் சரியாக நடந்தபோதிலும் அரசர்கள் பாவத்தைக் கட்டிக்கொள்வார்களேயன்றிப் புண்ணியம் பெறவேமாட்டார்கள்" என்று சொல்ல, அதற்கு அரசன் கொஞ்சமேனும் காதுகொடாமல் "நாளை சாயந்தரத்திற்குள் உன்தமையன் தலையை வாங்கிவிட உத்தரவு கொடுக்கப்போகிறேன்" என்றான். அதற்குச் சுமதி நடுநடுங்கி "ஐயோ ஆடுகோழிகளைக்கூட இரண்டொருநாள் வைத்திருந்து கொல்லுகிறோமே; அவ்வளவு தாமதங் கூட இல்லாமல் என் தமையனைக்கொல்லவேண்டுமா?" என்று கண்ணும்கண்ணீருமாய் நிற்க, அதைக்கண்டு அங்கிரசு கொஞ்சம் மனதிரங்கினவனாய்க் காட்டி, "நாளையதினம் வா, யோசிப்போம்" என்றான். அதைக்கேட்டுச் சுமதிகளித்துத் தன் தமையன் யமன்வாயிலிருந்து விடுபட்டாற்போல எண்ணி, மறுநாள் அரசனைப்போய்க் காணத் தீர்மானித்துக்கொண்டு வீடுவந்துசேர்ந்தாள்.

இப்படி இவளை வரச்சொன்னதில் அங்கிரசுகொண்டகருத்து நல்ல கருத்தல்ல; அவருடைய திடசித்தமும் ஞானமும் இவள் அழகாகிய சூரியன்முன் பனிபோல உருகிவிட்டன. இவளைத் தனது கொடிய காமத்திற்குள்ளாக்கி அதற்குப் பதிலாக இவள் தமையனை விடுவிக்க நினைத்துவிட்டான்.

இவள் மறுநாள்காலையில் தன் தமையனை விடுவிக்கக் கேட்பதற்காக அரண்மனை போய்ச்சேர, அங்கிரசு இவளுக்கு ஏகாந்தத்

தில் தரிசனம்கொடுத்து, அன்றிரவில் தனிமையாகத் தன் தோட்டத்தில் தன்னுடன்வந்து இருப்பாளேயானால் வல்லபனை விடுவிப்பதாகச் சொன்னான். அதைக் கேட்டுச் சுமதி மயிர்க்குச்செறிந்து "இதை உண்மையாகப் பேசினீர்களா, அல்லது வேடிக்கையாகவா?" என்று கேட்க, அரசன் "உண்மையாகத்தான் பேசினேன்" என்றான். அதற்குச் சுமதி "நல்லது இப்பொழுது என் தமையனை விடுவிக்காத பக்ஷத்தில் நீர் என்னைக் கேட்ட சங்கதியை ஊர்முடியச் சொல்லி உமது வஞ்சனை குணத்தை வெளிப்படுத்திவிடுகிறேன்" என, "நீ என்ன சொன்னாலும் உன் பேச்சை யார் நம்பப் போகிறார்கள். நான் இதுவரையில் தோஷமற்றவனாயிருந்தது எல்லாருக்கும் தெரியுமாகையால் நீ சொல்வதை யாரும் நம்பார்கள். நான் கேட்டுக்கொண்டதற்கு உடன்படுவாயாகில் உன் தமையன் பிழைப்பான்; இல்லையெனிலோ அவன் மாண்டுபோவான். இதற்கு விடை நாளைக்குள் நீ சொல்லவேண்டும்" என்று அங்கிரசு சொன்னான்.

சுமதி இந்த அநியாயங்களைத் தான் யாரிடம் சொல்லித் துக்கப்படுகிறதென்றெண்ணிக்கொண்டு தன் தமையன் இருக்கும் சிறைச்சாலையை நோக்கிச் செல்ல, அங்கே அவனிடம் ஒரு சன்னியாசிவந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்டாள். இப்படிப் பேசிக்கொண்டிருந்த சன்னியாசி நிஜமான சன்னியாசியல்ல; சன்னியாசிவேஷம் பூண்டுவந்த வஸந்தராஜன் என்னும் பெரிய அரசன். இவன் இந்த வேஷத்துடனே தனித்தனியே வல்லபனையும் நீலாக்ஷியையும் அவரவர் சிறைச்சாலையில் கண்டுபேசி, அவர்கள் செய்தகாரியம் குற்றமென்பதை உணரும்படிச் செய்தான். வல்லபன் இருந்த சிறைச்சாலைக்குச் சமீபத்தில் சுமதி வந்து "இவ்விடத்தில் நல்ல ஸத்புருஷரும் சாந்தமூர்த்திகளும் இருக்கட்டும்" என்று ஆசீர்வதித்தாள். அதைச் சன்னியாசி வேஷம்பூண்ட அரசன் கேட்டுச் சந்தோஷித்து, நீ யார், இவ்விடம் ஏன் வந்தாய்? என்று கேட்க, சுமதி, என் தமையன் வல்லபனிடம் இரண்டொரு பேச்சுப் பேசவந்தேனென்றாள். அரசனாகிய சன்னியாசி, அப்படியே செய்யென்று சொல்லி, தான் உத்தரவுபெற்றுக்கொண்டு வெளியில்போவதுபோல மறைந்து, இவர்கள் பேசும் பேச்சைக்கேட்க இவர்களுக்குத் தெரியாத ஒரு அறையில் மறைந்து நின்றான்.

சுமதி, தான் அங்கிரசு ராஜனிடம்போய்ப் பேசினதையும், அவன் வல்லபனை விடுவிப்பதற்காகத் தன்னைத் தனிமையில் அன்றிரவு அரண்மனையில் வந்துசேரக் கேட்டுக்கொண்டதையும் சொல்லி, "அண்ணா இம்மாதிரி அவமானம் நமது குலத்திற்கு வருவதைக் காட்டிலும் நீ நாளைக்குப் பிராணனை விடுவது நலமென்று தோன்றுகிறது" என்றாள். அதற்கு வல்லபன் "என் பிராணனைவிட உன் மானம் பெரிதா?" என, சுமதிக்குத் தன்னையறியாத கோபமும் துக்க

மும் வந்துவிட்டது. "மானத்தைவிட நீ பிராணன் பெரிதென்று நினைக்கிறாயே; எவ்வளவு அற்பபுத்தி! இவ்வளவு அற்பபுத்தி உன்னிடம் இருக்குமென்று நான் எண்ணவேயில்லை. நான் சந்தோஷத்துடன் பிராணனைவிடுவேனேயல்லாது மானத்தை விடமாட்டேன். நன்றியற்றவனே! நீ கெட்டாய், உன் பிராணனைவிட உன் தங்கையின் மானத்தைக் குறைவாக எண்ணினாயே! உனக்கு இராவணனைப் போலப் பத்துத்தலையிருந்தபோதிலும் அவைகளையெல்லாம் ஒவ்வொன்றாக வெட்டுப்படப் பார்ப்பேனேயல்லாமல், அவைகளில் ஒன்றையேனும் காப்பாற்ற என் மானத்தை இழக்கமாட்டேன்" என்று இவ்வாறு பேசினாள். அப்பொழுது இவர்கள்பின் பதுங்கி நின்ற சன்னியாசிவேஷம்பூண்ட அரசன் இவர்கள் முன்வந்து நின்று, "வல்லபா! ராஜப்பிரதிநிதியானவன் இவளைக்கெடுக்கவேண்டுமென்று ஒருநாளும் எண்ணங்கொண்டிருக்கமாட்டான். அவன் சொன்ன பேச்சு இவளைப் பரிசோதிப்பதற்காகவேயன்றி வேறல்ல. இவள் மரியாதையாய் மறுதலித்து வந்துவிட்டாள். இனி நீயும் நாளையதினம் உன் பிராணனை இழக்கவேண்டியதுதான். அதற்குள் தெய்வத்திற்குச் செய்யவேண்டிய பிரார்த்தனைகளை நீ மனதிற்குள் செய்துகொள்" என்றான். இப்படி இவர் சொன்னதை வல்லபன் கேட்டுத் தான் கூச்சமின்றித் தன் தங்கையுடன் பேசினதற்காகத் தன்னையே நொந்துகொண்டு துக்கத்தாலும் வெட்கத்தாலும் ஒன்றும் சொல்ல நாவெழாமல் திகைத்து நின்றான்.

உடனே சுமதி வெளியில்வந்துவிடவே சன்னியாசியும் அவள் பின்சென்று "உன்னை அழகாய்ச்செய்த ஈசன் உன் குணத்தையும் அழகாய்ச்செய்தானே" என, அதற்கு அவள், நமது அரசன், அங்கிரசு நல்லவரென்று நினைத்து மோசம்போய்விட்டாரே; அவர் எப்பொழுது நமது நாட்டிற்குத் திரும்பிவருவாரோ அறியேனே. நான் அவரைக் காண்பேனேயானால் இந்தப் பாவியின் நடத்தையை அவரிடத்தில் வெளிப்படுத்திவிடுவேன்" என்றாள். தான் பேசுவது அரசனோடென்றும், அப்பொழுதே அங்கிரசுவின் நடத்தையை அரசனிடம் வெளிப்படுத்திவிட்டாளென்றும் அவள் எண்ணவேயில்லை. அவள் சொன்னதைக்கேட்டுச் சன்னியாசி வேஷம்தரித்த அரசன் "அதில் ஒன்றும் பிசகுவரமாட்டாது; வஸந்தராஜன் தான் திரும்பிவரும்பொழுது எல்லாவற்றையும் தப்பாமல் விசாரித்துக்கொள்வார். நான் ஒன்று சொல்லுகிறேன், நீ அதைக் காதுகொடுத்துக் கேட்பாயானால் உன் மானமும் கெடாது, உன் தமையனும் பிழைப்பான். இன்னும் ஒருவருக்கு உபகாரமும் செய்ததாகும்" என்றான். சுமதி அதைக்கேட்டதும், மானம்மட்டும் கெடாதபக்ஷத்தில் நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறேன். என்னை என்னசெய்யச்சொல்லுகிறீர்களென, அதற்குச் சன்னியாசி வேஷம்பூண்ட வஸந்தன் பின்வருமாறு சொல்லலானான். "முன்னே சூரசேனன் என்றொரு

போர்வீரன் இருந்தான். அவனுக்குச் சுமுகி என்றொரு தங்கை யிருக்கிருள். அவளை அங்கிரசுக்கு அவள் தமையனுனவன் கலியாணஞ்செய்துகொடுத்து அவளுக்குக் கொடுக்கவேண்டிய சீதனத்தை யெல்லாம் ஒரு கப்பலில் ஏற்றி இந்த ஊருக்குக் கொண்டுவந்து கொண்டிருந்தார்; நடுச்சமுத்திரத்தில் கப்பல் ஒருபாறையில் மோதி உடையவே, அந்தச் சீதனங்களுடன் அந்தச் சூரன் கடலில்மாண்டான். தன் பெண்சாதிக்குச் சேரவேண்டிய ஆஸ்தி சேராததினுல் அங்கிரசு அவளை ஒரு குற்றத்தைச்சாட்டித் தள்ளிவைத்திருக்கிருர். அந்தப்பெண் தனது தமையனையும் ஆஸ்தியையும் நீரில் இழந்ததுபோல நிலத்தில் புருஷனையும் இழந்து துக்கப்பட்டுக்கொண்டிருக்கிருள். ஆகையினுல் சுமதீ, நாம் இருவருமாய்ச் சேர்ந்து ஓர் தந்திரம் செய்யவேண்டும்: நீ அங்கிரசினிடம் சென்று அவர் குறிக்குமிடத்திற்கு இன்று இரவு தனிமையாய் வருவதாக ஒப்புக்கொண்டு வந்துவிடு; உனக்குப்பதிலாகச் சுமுகியை நாம் அவள் புருஷனிடம் அனுப்பிவிடுவோம். இப்படி நாம் செய்வது ஒரு பாவத்திலும் சேர்ந்ததாகாது. அங்கிரசு அவளைக் கலியாணம்செய்த புருஷனல்லவா. ஒரு புருஷனுடன் அவன் நற்குணமுள்ள பெண்சாதியைச் சேர்த்துவைப்பது நமக்கு எவ்வளவோ புண்ணியம்" என்றிவ்வாறு சன்னியாசி சொல்ல, சுமதி அதைக் கேட்டுச் சந்தோஷமடைந்து சன்னியாசியின் நற்குணத்தை மெச்சி, அப்பொழுதே அவன் சொன்ன ஏற்பாட்டை முடித்துவைக்க அங்கிரசுவினிடம் சென்றுள். அரசனும் தான் செய்த ஏற்பாட்டைச் சுமுகியினிடம் சொல்ல அவள் வீடு சென்றுன். இதற்குமுன்னமே தானே தன் சன்னியாசி வேஷத்துடன் அவளைக்கண்டு அவள் துக்கத்தைக் கேட்டிருந்தவனுகையால் அரசனுகிய வஸந்தராஜன் இவ்விஷயத்தில் இவ்வளவு சிரமப்படும்படியாயிற்று.

சுமதியானவள் அங்கிரசுவைக்கண்டு சொல்லிவிட்டுச் சன்னியாசி சொல்லியிருந்தபடி சுமுகி வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அங்கு இவள் வரவை எதிர்பார்த்திருந்த சன்னியாசியும் ராஜப்பிரதிநிதி என்ன சொன்னுரென்று கேட்க, அதற்குச் சுமதி, தான் காரியத்தைச் சரிவர முடித்துவந்துவிட்டதாகச் சொல்லி, அரண்மனைக்கருகில் செங்கற்சுவரால் மதிள் எடுத்த ஒரு தோட்டமிருக்கிறதென்றும், அதன் மேற்புறத்தில் திராக்ஷைக்கொடியால் போடப்பட்ட ஒரு பந்தலிருக்கிறதென்றும், அவ்விடத்தில் தான் இராத்திரிக்கு வந்து சேரவேண்டுமென்றும் இவைமுதலாய் அங்கிரசு சொன்ன செய்திகளைச் சொல்லி, அவன் கொடுத்த தோட்டக் கதவுகளின் இரண்டு திறவுகோல்களையும் காண்பித்தாள். அதைச் சன்னியாசி வாங்கிச் சுமுகியினிடத்திற் கொடுத்து "நீ இவள் சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு செய்வாயேயானுல் உன் புருஷனை அடைவாய்" என்றுன். சுமுகி அதுகேட்டு மிகச் சந்தோஷமடைந்து இன்னும் வேறு

ஏதாவது சங்கேதமுண்டோவென்று கேட்க, அதற்குச் சுமதி, ஒன்று மில்லை; ஆனால் நீ அவனைவிட்டுத் திரும்பிவரும்பொழுதுமாத்திரம் மெதுவாய், என் தமையனைமாத்திரம் மறக்கக்கூடாதென்று சொல்லி வரவேண்டியதென்றாள். (இன்னும் வரும்.)

ஸம்ஸ்கிருத கவிகள் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

பாணன்.—மயூரன்.

கவிநவரத்தினங்களையும், பவபூதி தநஞ்சயன் முதலிய வித்வான்களையும்பற்றி முன்கூறினோமே; இப்பொழுது பாணன், மயூரன் என்னும் இரண்டு கவிகளைப்பற்றிச் சிறிது எழுதுவோம்.

பாணன்.

வடமொழியை நன்றாகக் கற்றறியாத பலர், அதில் வாசகநடையே கிடையாதென்றும், செய்யுள்நடைதான் வெகுவாய் வழங்கி வருகிறதென்றும் சொல்லுகிறதுண்டு. இது வடமொழிக்கு வீணன தூஷணையேயன்றி வேறல்ல. ஏனெனில், வடமொழியிலும் மற்றப் பாஷைகளைப்போல, செய்யுள்நடை எவ்வளவோ, அவ்வளவு வாசகநடையுமுண்டு. இவ்வித வாசகநடையில் தேர்ச்சியடைந்தவர் பாணன் என்ற மகாகவியாம். இவர் இருந்த காலத்தைச் செவ்வையாகக்குறிக்க அநேக ஆதாரங்களிருக்கின்றன. பாணகவி செய்திருக்கும் கிரந்தங்களுள் முக்கியமானவைகள் ஹர்ஷசரித்திரமும், காதம்பரியுமாம். இதுவரையில் நாம் கண்டுபிடித்திருக்கிற ஆதாரங்களால் பாணன்என்பவர் கன்னியாகுப்ஜத்தில் ஆண்டுவந்த சீலாதித்திய மகாராஜாவின் காலத்தில் இருந்ததாகவும், அவர் வாத்ஸியாயனவம்சத்தார் எனவும், சித்திரபானு என்னும் ஒரு பிராமணருடைய குமாரரெனவும் தெரியவருகின்றது. இந்த சீலாதித்தியனுடைய காலம்,கி. பி. 7-வது நூற்றாண்டின்மத்தியில் ஆனதால்,இதைக்கொண்டு பாணகவியும் அக்காலத்தில் இருந்தாரென்று கூறக்கூடும். பாணகவியே, தாம்செய்த ஹர்ஷசரித்திரத்தில் தமது சிநேகிதர்களாகிய, பத்ரன், நாராயணன், ஈசானன், மயூரன் என்ற கவிகளைக் குறித்திருக்கிறார். மேலும் மயூரன் என்றவர் பாணனுடைய மாமனார். சார்ங்கதாபத்ததி என்ற புஸ்தகத்தில் பாணன், மயூரன் இவ்விரண்டுகவிகளும், ஸ்ரீ ஹர்ஷனுடைய காலத்தில் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முற்கூறிய சீலாதித்தியனும் இந்த ஸ்ரீ ஹர்ஷன் என்பவனே. பாணகவியின் வாசாலத்துவம், காதம்பரி என்கிற கிரந்தத்தைப் படிப்பவர்களுக்கு நன்றாய்த் தெரியவரும். "வாணோச்சிஷ்டம் ஜகத்ஸர்வம்."-

"பாணோச்சிஷ்டம் ஜகத்ஸர்வம்." என்ற ஒரு பழமொழி ஸம்ஸ்கிருதத்தில் வழங்குகின்றது. அதனது தாத்பரியம் என்னவென்றால், பாணன் உமிழ்ந்துவிட்ட எச்சில் ஸம்ஸ்கிருதமென்பதாம். அதாவது, வடமொழியை அவரவ்வளவு நன்றாகப்படித்தவர் கிடையாது என்றதுபோலும். அன்றியும் காதம்பரியில் பாணன் வருணிக்காத சங்கதி புதிதாக ஒன்றிலும் கிடையாது. சுபாவத்தை வருணிப்பதில் காளிதாஸன், சூத்திரகன் இவர்களுக்குச் சமானமாகவும், மனதை உறுக்கத்தக்க துக்கம்முதலியவைகளைச் சொல்வதில் பவபூதிக்கு மேலாகவும் சொல்லலாம். காதம்பரியில் பிள்ளையில்லாக்குறையை அரசன் சொல்லி அழுகிற பாகத்தைப் படித்துக் கண்ணீர்வடிக்காதவர் கிடைக்கவே கிடையாது. இவரது கிரந்தமாகிய காதம்பரியைப் படிக்க ஆரம்பித்தால் காலம்போகிறதுகூடத் தெரியாது; பசியும் தோன்றாது. அதைக்கொண்டு ஸம்ஸ்கிருதத்தில் ஒருபழமொழி வழங்கிவருகின்றது. அதென்னவென்றால், "காதம்பரீரஸஜ்ஞாநாநாமாஹாரோபி நரோசதே." "காதம்பரீ ரஸக்ஞானும் ஆஹாரோபி நரோசதே." காதம்பரியின் ரசத்தை யறிந்தவர்களுக்குச் சாப்பாடுகூட அவ்வளவு இனிப்பைத் தராது என்பதாம். அன்றியும் "காதம்பரி" என்ற பதத்திற்கு கள்ளு என்கிற அருத்தமும் உண்டு. எப்படிக் கள்ளுண்பவனுக்கு ஆகாரத்தில் உருசியும் பிரியமுமிராதோ அதுபோலக் காதம்பரி படிப்பவனுக்கு மற்றக் கிரந்தங்களில் ஆனந்தமிருக்கவேமாட்டாது என்பதாம். அது அவ்வளவும் உண்மையே. காதம்பரியைக் கற்றறிந்தவர்களே அதையறிவார்கள். பாணகவி பார்வதீ பரிணயம் என்ற ஒரு சிறுநாடகம் செய்திருக்கிறார். அது மிகவும் அழகான கிரந்தம். இதனால்தான் இவர் வாத்ஸியாயனவம்சத்தார் என்பது வெளியாகின்றது. இவர் சரித்திரத்தை இவ்வளவுதூரம் எடுத்துச் சொல்லிவந்தோம், இவரது மாமனாகிய மயூரனுடைய சரித்திரத்தையும் இதனுடன் சேர்த்துச் சொல்லுவோம்.

மயூரன்.

மயூரகவியின் காலம், கி. பி. 7-வது நூற்றாண்டின் மத்தியில் என்றும், இவர் பாணனுடைய மாமனார் என்றும் முன்னமே சொன்னோமல்லவா? இவர் இருந்தவிடம் உஜ்ஜயினீ. இவர் மகா பண்டிதர். இவரும் பண்டிதராயிருந்து இவரது மருமகனான பாணனும் பண்டிதராயிருக்கவே, இவ்விருவர்களும் ஒருவர்மேலொருவர் பொறாமைப்பட்டார்கள். உடனே அரசன் இவ்விருவர்களையும் வரவழைத்து, படிப்பில் எவர் உயர்ந்தவர், எவர் தாழ்ந்தவர் என்று தீர்மானித்துக் கொண்டுவரும்படி காச்மீரதேசத்திற்கு அனுப்பிவைத்தான். அவ்விடத்தில் அப்பொழுது ஸம்ஸ்கிருதபாஷை மிகவும் சிறப்பான பாக்கியம் பெற்றிருந்தது. இவ்விதமான கல்விச்சண்டைகளுக்கு உத்தரவு சொல்லும் திறமையைக் காச்மீரதேசத்துப் பண்டிதர்கள்தாம் அடை

ந்திருந்தார்கள். மயூரகன், பாணன் இவ்விருவர்களையும் பரீக்ஷித்துப் பார்க்கையில், பாணன் கொஞ்சம் அதிகமாகக் கற்றறிந்தவரென்று அங்கிருந்தவர்கள் நிச்சயித்தார்கள். இவ்வித நிச்சயமானது இவ்விருவர்களுக்குள் சாதாரணமாயிருந்த மனஸ்தாபத்தைப் பின்னும் அதிகமாக்கிவிட்டது. பின்பு ஒருநாள் பாணனும், அவர் பெண்சாதியாகிய மயூரனுடைய பெண்ணும் ஏதோ ஒருவிதத்தில் மனவருத்தப்பட்டுச் சண்டையிட்டுக்கொண்டிருக்கையில், மயூரன் தம் பெண்ணைப்பார்த்து "சண்டி" என்று திட்டினாராம். அவள் மகா பதிவிரதையாகையால் "நீர் குஷ்டரோகியாகப் போகக்கடவது" என்று, தன் தகப்பனாரென்றும்பாராமல் மயூரனைச் சபித்தாள். அப்படியே மயூரன் குஷ்டரோகியானார். இப்படி தமக்கு வந்த துக்கத்தைமாற்ற அவர் மயூரசதகம் என்ற சூரியன் விஷயமான ஸ்தோத்திரம் ஒன்று செய்தார். உடனே அவர் தேகம் முன்போலாகிவிட்டது. இதைக் கண்ட அத்தேசத்தரசன் மயூரனை வரவழைத்து அவனை மிக்க மகிமைபெற்றவர் என்று மெச்சினான். இதைப் பொறுக்காத பாணன் தம் இருகரங்களையும் வெட்டி எறிந்து, தாம் உபாஸித்துவந்த சண்டிகா தேவியைக்குறித்துச் சண்டிகாஸ்தோத்திரத்தை மயூரன் பாடின விருத்தத்திலேயே பாடினார். உடனே இவருக்கும் போனகைகள் திரும்பிவந்தன. இவைகளைக் கண்டு அக்காலத்திய ஜயினர்கள் இவ்வித ஸாஹஸங்கள் தங்களாலும் செய்யக்கூடும் என்று காட்டக்கருதி, தங்கள் குருவாகிய மதங்கசூரியை வேண்ட, அவர் தம் தேகத்தை 42 சங்கிலிகளால் நன்றாய்க் கட்டச்சொல்லி, 42 சுலோகங்களில் பக்தாமரஸ்தோத்திரத்தைப் பாடினாராம். அப்போது ஒவ்வொரு சுலோகம் முடியும்பொழுதெல்லாம் ஒவ்வொரு சங்கிலி தெறிபட்டுப்போய்விட்டதென்று சொல்லுகிறார்கள். இவ்வற்புதங்களால் நாம் ஊகிக்கவேண்டியவை யாவை எனில், இம்மூவர்களும் மிகுந்த சாமர்த்தியம் உடையவர்கள் என்பதும், சற்றேறக்குறைய ஒரேகாலத்தில் அதாவது கி. பி. 7-வது நூற்றாண்டின் மத்தியில் இருந்தவர்கள் என்பதும், இவர்கள் புஸ்தகங்களாகிய மயூரசதகம், சண்டிகாஸ்தோத்திரம், பக்தாமரஸ்தோத்திரம் இவைகளும் சற்றேறக்குறைய ஒரேகாலத்தில் எழுதப்பட்டனவென்பதுமேயாம்.

துரௌபதி கூந்தல் முடித்தல்.

கங்காநதிக்கரையிலுள்ள பல நகரங்களிலும் மிகப் பிரசித்திபெற்றோங்கிய அஸ்தினபுரியில் அரசுபுரிந்துவந்த சந்திரவமிசத்து அரசர்களுள் பாண்டுமகாராஜனுக்குப் பஞ்சபாண்டவர்களெனப்

புகழ்பெற்று விளங்கிய தருமபுத்திரர், பீமன், அர்ச்சுனன், நகுலன், ஸகதேவன் என்னும் ஐந்து குமாரர்களும், பாண்டுமகாராஜனுடைய தமையனுன திருதராஷ்டிரனுக்குத் தார்த்தராஷ்டிரர் எனப் பேர்பெற்ற துரியோதனன் துச்சாதனன்முதலிய நூறுபுத்திரர்களும் பிறந்தார்கள். அவர்கள் சிறுபிராயமாய் விளையாடிக் கொண்டிருக்கையிலேயே பாண்டவர்களின்மேல் துரியோதனுதியருக்குப் பங்காளிப்பகையொன்று உண்டாகி, பின்பு அவர்களுக்கு உண்டான செல்வம் மேன்மைமுதலானவைகளைப்பார்க்க எரிகிற வுடம்பில் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றினதுபோலாகி, அப்பகை மேன்மேலும் அதிகரித்தது. பாண்டவர்களுள் மிக்க பல சாலியாயிருந்த பீமசேனனை அவர்கள் பலதரம் விஷம் முதலியவைகளையிட்டுக் கொல்லவழிதேடிஞர்கள்; ஐவரையும் அரக்குமாளிகையிலிட்டு எரிக்கவும்பார்த்தார்கள். ஆயினும் அவை ஒன்றும் பலிக்கவில்லை; தெய்வபலத்தால் அப்பாண்டவர்களுக்கு மலைபோலவந்த விபத்தெல்லாம் பனிபோல விலகிப்போயின. பின்பு பாண்டவர்கள் எல்லா இக்கட்டுக்கும் தப்பிப் பல தேசங்களையும் ஜயித்துக் கீர்த்தி பெற்று வாழ்ந்திருக்கையில், துரியோதனன் அவர்களது பெருமையைப் பார்க்கப்பொருமல் யுதிஷ்டிரனைத் தந்திரமாய்ச் சூதாட்டத்திற்கு அழைப்பித்து, தனக்குப்பதிலாகச் சூதாட்டத்தில் மிக்க வல்லவனுகிய தன் மாமனுன சகுனியென்பவனை ஆடச்செய்து, பந்தயமாகவைக்கப்பட்ட தருமபுத்திரருடைய செல்வங்களையெல்லாம் ஒவ்வொன்ருய்க் கவர்ந்துகொண்டு, அவர் தம்பிகளையும் பெண்சாதியையும் அடிமையாக்கி அவளைச் சபையிலிழுத்து அவமானப்படுத்திஞன். கடைசியில் பன்னிரண்டு வருஷம்வனவாசமும் ஒரு வருஷம் *அஞ்ஞாதவாசமும் பாண்டவர் செய்து வந்தபிறகு அவர்கள் இராச்சியம்முதலானவைகளை மறுபடியும் அவர்களுக்கு ஒப்புவிக்கிறதாகவும், அஞ்ஞாதவாசத்தின் நடுவில் அவர்கள் வெளிப்பட்டால் மறுபடியும் அப்படியே போய்வரவேண்டியதென்றும் அவன் ஏற்பாடுசெய்தான். அவ்வேற்பாட்டின்படியே பாண்டவர்கள் வனவாஸம்போய்ப் பதின்மூன்றுவருஷங்களைச் சிறிதும் அபாயமின்றித் தொலைத்துத் திரும்பிவந்தார்கள் என்ற கதை வெகுவாய் அநேகர்க்குத் தெரிந்திருக்கலாமல்லவா?

அஞ்ஞாதவாஸம்செய்து திரும்பிவந்தபிறகு பாண்டவர்கள் தங்கள் இராச்சியத்தைக் கொடுக்கும்படி கேட்க, துரியோதனன் கொடுப்பதில்லையென்று மறுத்தான். தருமபுத்திரர் மிகவும் சாந்தகுணமும் பந்துக்களிடத்தில் நேசமும் உயிர்களிடத்தில் அன்பும் உடையவராதலின், பங்காளிகளுடன் போர்தொடுத்தால் அநேகம் ஆயிரம் அரசர்களும் பந்துக்களும் உயிரிழக்கநேரிடுமென்று அஞ்

* அஞ்ஞாதவாசம்—இன்னுரென்று எவரும் தெரிந்துகொள்ளாதபடி ஒளித்துவாழ்தல்.

சித்துரியோதனுதியர்செய்த அபகாரத்தைச் சிறிதும் எண்ணுமல் தருமத்தையே முதன்மையாகக் கருதி எவ்விதமாவது சமாதானமாய்ப் போவது நலமென நிச்சயித்துச் சமாதானம் பேசும்படி துரியோதனனிடம் ஸ்ரீ கிருஷ்ணனைத் தூது அனுப்பினுர். இவ்வாறு சமாதானம் பேசப்புகுவது பீமசேனனுக்குச் சிறிதேனும் சம்மதமேயில்லை. ஏனெனில், முன் சூதாடித் தோற்றகாலத்தில் துரௌபதியை ராஜசபையில் கொண்டுவந்து பரிபவப்படுத்தியபோது அதைப் பார்க்கப்பொருமல், அவ்வாறு மானபங்கம்செய்த துச்சாதனனை மார்பைப்பிளந்து அவ்வுதிரத்தைப் பானம்பண்ணுவதுமன்றியில், அந்தத் திருதராஷ்டிரன் பிள்ளைகள் நூற்றுவரையும் தானே கொல்லுவதாய்ப் பிரதிஞ்ஞைசெய்திருந்தானுதலின், அதைத் தான் அவ்வாறே நிறைவேற்றவேண்டுமென்பது அவன் கருத்து. ஆதலின் அவன் கோபங்கொண்டு தமையனிடத்திலிருந்து எழுந்துபோய்விட்டான்.

சகதேவன் அதுகண்டு பீமசேனனைப் பின்தொடர்ந்து சென்று, அண்ணு, நீர் இப்படி கோபங்கொள்ளலாகாது; இதைப்பார்த்து நமது பெரியவர் மிகவும் விசனப்படுகிருர்; சற்றே பொறுத்துக்கொள்ளவேண்டுமென வேண்டிக்கொள்ள, பீமசேனன் சிரித்துக்கொண்டு, நமது தமையனுருக்கு விசனமென்பதுகூடத் தெரியுமா! துரௌபதி முன்னே ராஜசபையில் அவமானப்பட்டு நின்ற நிலையையும், நாம் காட்டில் மரவுரியுடுத்து வேடரோடுவேடராய் அல்லாடியதுமன்றி விராடன்நகரத்தில் செய்யவொண்ணுத இழிதொழில்களையெல்லாம்செய்து வருந்தினதையும் நினைத்து நான் கோபிப்பதற்கு விசனப்படுகிருரேயன்றிக் கவுரவர்செய்யும் காரியத்துக்குச் சிறிதும் விசனப்படவில்லையல்லவா? நல்லது, நான் தமையனுர் சொல்லுக்கு அடங்கி நடக்கின்றவனல்லனென்கிற கெட்டபெயர் எனக்கு வந்தது வந்துவிட்டது; இனி ஆனது ஆகட்டும், கவுரவர்களையெல்லாம் அடித்துத் தொம்சம்செய்கிறவனாயில் இன்று ஒரு நாள் அவர் எனக்குத் தமையனுமன்று, நான் அவர் சொற்படி கேட்டு நடக்கிற தம்பியுமன்று; இவ்விஷயத்தை நீ உன் தமையனுருடன் போய்ச்சொல்லிவிடு என்று உரைத்து வெகு வேகமாக நடந்து சென்றுன். ஸஹதேவன் அவன்செல்வதை அவ்விடத்திலேயே நின்று பார்த்திருக்க, பீமன் துரௌபதியின் இல்லத்தில் புகுந்ததுகண்டு, ஓகோ, இவர் துரௌபதிவீட்டிற்குச் செல்கிருரே; இவர்போய் வருமளவும் நாம் இங்கேயே நின்று பார்த்திருப்போமென்று நின்றுவிட்டான். பீமன் திரும்பிப்பார்த்து ஸஹதேவன் நின்றுவிட்டது கண்டு, நான் இவ்வாயுதசாலைக்குச் சென்று படைக்கலங்களையெடுத்துக்கொண்டு போர்க்களத்துக்குப்போகிறேன்; நீ உன் தமையனுரிடம் சென்று அவர் திருவுள்ளப்படி நடந்துகொண்டிரு என்றுன். அதற்கு ஸஹதேவன், இது துரௌபதியின் கிரகமாயிற்றேயென்று கூற, பீமன், ஓகோ, துரௌபதியின் கிருகத்திற்கா வந்துவிட்டேன்!

நல்லது, கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோலாயிற்று; துரௌபதியைப் பார்த்துவிட்டுத்தான் போர்க்களத்துக்குப் போக வேண்டுமென்று சொல்லி ஸஹதேவனையும் அழைத்துக்கொண்டு அவ்வீட்டுக்குள் சென்றான். அங்கேபோய் உட்காந்து கிருஷ்ணன் ஸமாதானம் செய்யப்போனவிதங்களை ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டு துரௌபதியின் வரவை யெதிர்பார்த்திருக்க, அவள் தலை விரிகோலமாய்த் தன் சேடியுடன் அவ்விடத்திற்கு வந்தாள். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்றபடி அவள் முகத்தைப் பார்த்தே அவள் மிகவும் விசனமுற்றிருக்கிறாளெனத் தெரிந்துகொண்டு பீமன் அவளை நோக்கி, என் கண்மணியே, நீ ஏன் இவ்வளவு விசன முற்றிருக்கிறாய் என்று கேட்க, அருகே நின்ற சேடி சொல்லுகிறாள்.

"மகா பிரபுவே, இன்றுகாலையில் நமது மகாராணியார் காந்தாரி முதலிய பெரியோர்களைத் தொழுதுவரும்படி அவர்களிடம் போயிருந்தாள். திரும்பிவரும்போது வழியில் துரியோதனன் மனைவியாகிய பானுமதி துரௌபதியை நோக்கி, பாஞ்சலீ, உன் பதிகள் தங்கள் ஐவருக்கும் ஐந்துகிராமம் கொடுத்தால் போதுமென்றுகேட்டுச் சமாதானம்பேசுகிறார்களாமே, நீ ஏன் இன்னும் தலைமுடியாமலிருக்கிறாய் என்று பரிகாசமாய்ப்பேசினாள்" என்று சொன்னாள். பீமன் அது கேட்டு, ஸகதேவா கேட்டாயா என, ஸகதேவன், அண்ணா எட்டிச்செடியில் படர்ந்த திராக்ஷைக்கொடியும் அத்தன்மையாகுமல்லவா என்றான். பீமன் மறுபடியும், அதற்குத் துரௌபதி சொன்னபதில் என்ன என்று கேட்க, சேடி, பரிஜனம் பக்கத்தில் இல்லாமலிருந்தால் அல்லவோ மகாராணியார் வாய்திறந்துபேசவேண்டும்; உங்கள் கூந்தல்கள் விரிவதற்குமுன்பு எங்களரசி தலைமுடிவதெப்படி என்று நானே அதற்குப்பதில் சொல்லிவிட்டேன் என்றாள். அதுகேட்டுப் பீமன் மிகவும் சந்தோஷமடைந்து, தானணிந்துகொண்டிருந்த ஆபரணங்களைக் கழற்றி அவளுக்குக் கொடுத்துவிட்டான்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையிலே கஞ்சுகி ஒருவன் ஓடிவந்து, தூதுசென்ற கிருஷ்ணன் போனபடியே திரும்பிவந்து சேர்ந்தார்; அவர் சமாதானமாகச் சொன்னவார்த்தைகள் துரியோதனன் காதில் நாராசம்போல் நுழைய, அவன் கிருஷ்ணனைப்பிடித்துக் கட்டமுயன்றான். ஸ்வாமி அத்தருணத்தில் விசுவரூபங்கொண்டு அவர்களை பிரமிப்பித்துத் திரும்பிவந்து சேர்ந்தார். இப்பொழுது தங்களைப்பார்க்க ஆசைகொண்டிருக்கிறார் என்று சொன்னான். அது கேட்டுப் பீமசேனன், 'கெடுபவர்க்குக் கெடுமதி பிடரியில்' என்றவண்ணம், இந்தத் துரியோதனனுக்குக் கேடுகாலம் கிட்டிக்கொண்டது, மகாயோகிகளுடைய மனதினாலுமெட்டவொண்ணாத சுவாமியை இந்தத் துஷ்டன் கயிற்றால் கட்டமுயன்றானல்லவா என்று சொல்லித் துரௌபதியை நோக்கி, துரியோதனுதியனா அதம்

செய்வதாகிய மகா யாகம் ஒன்று இப்பொழுது நடக்கப்போகின்றது; அந்த யாகத்தை முற்ற நிறைவேற்றினபிறகுதான் இனி நான் உன் முகத்தை வந்துபார்ப்பேன் என்று சொல்லிச் செலவு பெற்றுக்கொண்டு போய்விட்டான். பிறகு கிருஷ்ணன் முதலானவர்கள்கூடி ஆலோசித்து, பந்துமித்திரங்கள் மாண்டுபோம்படி நேரிடுகின்றதேயென்றஞ்சி அதற்காகப் போர்க்குப் பின்வாங்குவது ராஜதருமமல்ல; அபகீர்த்திக்குமிடமாகுமெனத்தேர்ந்து, போர்க்குப் படையெடுக்கவேண்டியது அவசியமேயெனத் தீர்மானித்தார்கள்.

பின்பு பாண்டவர்கள் பாஞ்சாலராஜன் மகனுன திருஷ்டத்தியும்னனையும், கௌரவர்கள் பீஷ்மாசாரியாரையும் சேனுபதிகளாக நியமித்துக்கொண்டனர்கள். போர்தொடக்கமான பத்துநாள்வரையில் பீஷ்மர் வெகு பராக்கிரமத்துடன் யுத்தஞ்செய்து பாண்டவ சேனையை அநேகமாக அதஞ்செய்துவிட்டார்.

அவர் யுத்தபூமியி லிருக்குமளவும் தமக்கு ஜயமில்லையென்று கண்டு பாண்டவர்கள் அவரை வெல்வதற்கு யாது உபாயமென்று ஆலோசித்து, கடைசியில் சிகண்டியென்னும் பேடியைக்கொண்டு வந்து பீஷ்மர்முன்னே நிறுத்தினுர்கள். அவர் பேடியுடன் யுத்தம்செய்ய வெட்கி ஆயுதத்தைக் கீழே எறிந்துவிட, அர்ச்சுனன் அத்தருணத்தில் அவரை அடித்துவிட்டான். பிறகு துரியோதனன் வெகுநேரம் ஆலோசித்துத் துரோணுசாரியரைச் சேனுபதியாக ஏற்படுத்திக்கொண்டான்.

அவர் தமது ஸேனைகளைப் பத்மவியூகமாக வகுத்து யுத்தம்செய்துகொண்டிருக்கையில், அர்ச்சுனன் குமாரனுன அபிமனியுவென்னும் சிறுவன் தன் பராக்கிரமத்தினுல் தன்னந் தனியே அவ்வீரர்களையெல்லாம் வதைத்துப் பத்மவியூகத்திற்குள் புகுந்தான். புகுந்து பல போர்வீரர்களைக் கொன்று மிகவும் இளைப்படைந்து நின்ற தருணங்கண்டு துரோணுசாரியர் அவன் வில்லை அறுத்து விட்டார். அதேக்ஷணத்தில் ஜயத்திரதனும் கர்ணனும் இன்னும் சில அரசரும் சேர்ந்து அபிமனியுவை அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

இந்தச் செய்திகேட்டுத் துரியோதனன் வெகு சந்தோஷமடைந்தவனுய், இந்தச் சமாசாரத்தைத் தன் மனையாட்டியுடன் சொல்லிக் களிப்படையவேண்டுமெனக் கருதி அவளிடத்திற்குச் சென்றுன். அப்பொழுது பானுமதி தன் கணவன் பக்கத்தில் ஜயமுண்டாக வேண்டுமென்று அதற்காகக் கடவுளைக்குறித்து நோன்புநோற்கும்படி உத்தியானவனத்திலுள்ள தேவாலயத்திற்குச் சென்றிருந்தாள். துரியோதனன் அவளிடத்திற்குச் செல்லும்பொழுது அபிமன்னியு கொல்லப்பட்டதை நினைத்துப் பலவாறுக மகிழ்ந்துகொண்டே சென்றுன்.

அப்போது பானுமதி அவ்வுத்தியானவனத்துக்கு வந்து இராத்திரி தான்கண்ட கனவைப்பற்றித் தன் தோழிகளுடன் சொல்லித் துயரப்பட்டுக்கொண்டிருந்தாள். தோழிகள் அவள் துயரப்படுவதைக்கண்டு பலவிதமாகச் சமாதானப்படுத்தி, பானுமதி, அப்படியாயின், நீ கண்ட கனவு என்ன சொல்லு, அதற்கு ஏதேனும் சாந்தி செய்விப்போம் என்று கேட்க, அவள், சகிகாள், ஒரு அழகான கீரிப்பிள்ளை வந்து என் முன்பாக நூறுபாம்புகளைக் கண்டதுண்டமாய்க் கடித்துவிட்டதாகக் கண்டேன் என்று சொல்ல, சகிகள், கிருஷ்ண! கிருஷ்ண! என்று காதை மூடிக்கொண்டார்கள். பானுமதி, இதற்குமேல் நான் கண்டது என்னவோ செவ்வையாக நினைவு வரவில்லை; மனதுக்குமாத்திரம் மிகவும் அச்சத்தை உண்டுபண்ணுகின்றது, சற்று யோசித்துச் சொல்லுகிறேன் என்றாள். இதற்குள் துரியோதனன் தோட்டமெல்லாம் சுற்றிக்கொண்டு இவர்களிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்து, இவர்கள் பேசிக்கொள்வதைச் சற்று நிதானித்துக் கேட்போமென்று அங்கே ஓரிடத்தில் மறைவாய் ஒளித்து நின்றான்.

அப்போது சகி, அம்மா நீ சங்கடப்படவேண்டாம், யோசித்துச்சொல் என்ற வார்த்தையைக் கேட்ட துரியோதனன், இதென்ன, இவளுக்கு நேர்ந்த சங்கடமென்ன? நல்லது, இவள் என்ன சொல்லுகிறாளோ கேட்போமென்று ஊற்றமாய்க் கேட்டுக்கொண்டிருந்தான். பானுமதி, ஸகீ, நான் அந்த *நகுலத்தைக் கண்டதும் அதனழகுக்கு வியந்து அதன்மீது ஆசைகொண்டேன் என்றாள். அதைக் கேட்டவுடனே துரியோதனன் பதைபதைத்து ஆகா, இவள் நகுலன் மீதா ஆசைவைத்திருக்கிறாள்; சரி, சரி, இவள் காலையிலெழுந்திருந்து ஒருவருக்கும் தெரியாமல் ஏகாந்தமான இடத்திற்குவந்தது இதற்காகவேயோ. இவள் உட்கருத்து அறியாமல் நாம் இதுவரையில் மோசம்போனோமே என்று தன்னைத்தானே நிந்தித்துக் கொண்டான். பானுமதி, சகீ, பின்பு நான் எழுந்திருந்து இந்த லதாமண்டபத்துக்குள் புகுந்தேன்; உடனே அந்த நகுலமும் என்னைப் பின்தொடர்ந்து இந்த லதாமண்டபத்திற்குள் விரைவாக வந்து வெகு முறுக்காய் என்னுடைய மார்புவஸ்திரத்தைத் தள்ளிவிட்டதென்று கூறினாள்.

இவ்வார்த்தையைக் கேட்கவே துரியோதனனுக்கு அதிக கோபம் வந்துவிட்டது. போதும் போதும், இனிமேல் கேட்கவேண்டியதில்லை; இப்படியே போய் அந்த நகுலனைக் கொன்றுவிட்டு வரவேண்டுமென்று 5, 6 அடி சென்று, இவளைக் கொல்லவேண்டுமேயல்லது அவனைக் கொல்வது நியாயமல்லவென்று திரும்பினான். பானுமதி, உடனே மஹாராஜா எழுந்திருப்பதற்காக முழங்கின மங்

* நகுலம்—கீரிப்பிள்ளை.

களவாத்தியத்தின் ஓசையால் விழித்துக்கொண்டேன் என்றாள். இந்த வார்த்தையைக்கேட்டதும், துரியோதனன், ஓகோ, இவள் இப்போது சொப்பனவிஷயமாய்ப் பேசிக்கொள்வது போலிருக் கிறது. நல்லது, இன்னும் சற்று நிதானிப்போமென்று நின்றான்.

பானுமதி, இந்தக் கனவு உங்கள் புத்திக்கு எப்படித் தோன்று கிறதென்று வினவ, சகிகள், கீரிப்பிள்ளையையும் பாம்பையுமே கன வில் காணலாகாது; அதனோடு 100 பாம்புகளை ஒரு கீரிப்பிள்ளை கொன்று உன் மேலாடையைப் பிடித்திழுத்ததாகக் கண்டது கெ ட்ட குறிதான். இதற்கு ஏதாவது சாந்திசெய்வோமென்று சொல் லிச் சமாதானப்படுத்தினார்கள். அப்படியே பானுமதி பூஜைசெய்ய ஆரம்பித்தாள். அத்தருணத்தில் துரியோதனன் அவளிடம்சென்று, என் கண்ணே, நீ பயப்படாதே, கனவெல்லாம் பித்தவிகாரமே யொழிய வேறல்லவென்று சொல்லிச் சமாதானப்படுத்திக்கொண் டிருந்தான். அப்பொழுது சுழல்காற்று ஒன்று வீசவே, அவ்விடத் தில் நிற்கமாட்டாமல் அவர்களெல்லோரும் அங்கிருந்து உடனே புறப்பட்டு அத்தோட்டத்திலிருந்த ஒரு உப்பரிக்கைக்குள் போய்ச் சேர்ந்தார்கள்.

அவ்விடத்தில் துரியோதனன் பெண்சாதியுடன் தன் பிரபா வங்களைச் சொல்லி மகிழ்ந்துகொண்டிருக்கையில், கஞ்சுகி ஒருவன் ஓடிவந்து தேரின் துவசம் சுழல்காற்றில் ஒடிந்துபோயிற்றென்று கதறினான். அதைக் கேட்டும் துரியோதனன் அலக்ஷியமாயிருக்க, பானுமதி, இது ஒரு பெரிய அபசகுனம்; இதற்கு ஏதேனும் பரி காரம் செய்யவேண்டுமென்று கூற, அப்படியாயின் வேதபாராய ணம்முதலியவை செய்விக்கும்படி நம் புரோகிதருடன் சொல்லெ ன்று கஞ்சுகியை அனுப்பிவிட்டான்,

இது இவ்வாறிருக்க, அபிமன்னியுவைக் கொன்றவர்களுள் முத ன்மையானவன் சைந்தவனெனக்கேட்டு அர்ச்சுனன், இன்று சூரி யன் அஸ்தமிப்பதற்குமுன் நான் அவனைக் கொல்லாவிடின் அப் போதேஅக்கினிப்பிரவேசம் செய்கிறேனென்று கொடிய பிரதிஞ்ஞை ஒன்று செய்தான். அதைக்கேட்டதும் சைந்தவன் தாயாரும் அவன் மனைவியாகிய துச்சலையும் இச்செய்தியைச் சொல்லிக்கொண்டு துரி யோதனனிடம் வந்து வீழ்ந்து அழுதார்கள். அதுகேட்டுத் துரி யோதனன், பாண்டவர்கள் வீணாய் எத்தனையோ பிரதிஞ்ஞைகள் செய்திருப்பதுபோல இதுவும் ஒன்று; நீங்கள் பயப்படவேண்டாம்; நான் சைந்தவனைக் காப்பாற்றிவிடுகிறேன்; அர்ச்சுனன் தன் பிர திஞ்ஞை நிறைவேறாமல் மாண்டுபோகப்போகிறான்; அவன் போய் விட்டால் மற்ற நால்வரும் உடனே உயிரிழக்கப்போகிறார்களென் பது நிச்சயம்; ஆதலின் இச்செய்தியைக் கேட்டு நாம் சந்தோ ஷிக்கவேண்டுமேயல்லது துக்கப்படவேண்டியகாரணம் சிறிதுமில்லை யென்று அவர்களைச் சமாதானப்படுத்தியனுப்பி,நான் யுத்த பூமிக்குச்

சென்று அர்ச்சுனன் கையில் அகப்படவொட்டாமல் சைந்தவனைக் காப்பாற்றி, அர்ச்சுனன் அக்கினிப்பிரவேசம்பண்ணும்படி செய்து விட்டுத் திரும்பிவருகிறேன், நீ அந்தப்புரம் போய்ச்சேர் என்று சொல்லிப் பானுமதியிடம் செலவுபெற்றுக்கொண்டு போர்க்களத்துக்குச் சென்றான்.

பின்பு துரோணாசாரியர் தன் வியூகத்திற்குள் ஸைந்தவனை ஒருவருக்கும் தெரியாதிருக்கும்படி மறைத்துவைத்துவிட்டுத் தான் சேனையின் முன்புறத்தில் நின்று யுத்தம்செய்ய ஆரம்பித்தார். அர்ச்சுனன் அவரைவென்று வியூகத்தினுள்ளே புகுந்து அங்கே முழுதும் தேடினான்; ஸைந்தவன் எங்கும் அகப்படவில்லை, பொழுதுபோகிற தருணமாகி விட்டது. அதனால் அர்ச்சுனன் உடனே தீக்குளித்துவிடப்போகிறானேயென்று பாண்டவர்கள் மிகவும் விசனப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அதுகண்டு ஆச்ரிதவத்ஸலனான கிருஷ்ணன் தமது திருவாழியைப் பிரயோகித்துச் சூரியனை மறைத்துவிட, அர்ச்சுனன் சூரியன் அஸ்தமித்துவிட்டதாக நினைத்து அக்கினிப்பிரவேசம்செய்வதற்கு வேண்டிய முயற்சிகள்செய்ய ஆரம்பித்தான். அதுகண்டு துரியோதனன் மிகவும் சந்தோஷித்துச் சைந்தவனை யானைமேலேற்றி அழைத்துவர, அந்தத்தருணத்தில் அவனை அடிக்கும்படி கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குச் சொல்ல, சூரியன் அஸ்தமித்துவிட்டபடியால் அக்கினிப்பிரவேசம் செய்வேனேயல்லது இனி இவனை அடிக்கமாட்டேன் என்று அர்ச்சுனன் உறுதியாய்க் கூறினான். இதோ பார், இன்னும் சூரியன் மறைந்துபோகவில்லை; காண்டிவத்தைக் கையிலெடுத்து கணைகளைத் தொடுக்கலாம் என்று கூறிக் கண்ணன் திருவாழியை வாங்கிக்கொள்ள, அர்ச்சுனன் சூரியனைக் கண்டு சந்தோஷித்துச் சைந்தவனுடன் எதிர்த்துப் போர்செய்து அவனைக் கொன்றுவிட்டான். இவ்வாறு தங்கள் பக்கம் ஜயமாகவே பாண்டவர்கள் பீமன் மகனாகிய கடோற்கசனுடைய பேருதவியைக்கொண்டு மறுபடி அன்றிராத்திரியும் யுத்தம்செய்யத் தொடங்கினார்கள். அப்போது கடோற்கசன் ஆகாயமார்க்கத்தில் நின்றுகொண்டு வெகு கடினமாகப் போர்புரிய, அவன் கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் துரியோதனன், இவனை யெப்படியாவது உடனே கொன்றுவிட வேண்டுமென்று கர்ணனை வேண்டிக்கொள்ள, அவன் வேறுவகையில்லாமல் அர்ச்சுனனுக்கென்று தான் காப்பாற்றிவைத்திருந்த சக்தியென்னும் படைக்கலத்தைப் பிரயோகித்துக் கடோற்கசனைக் கொன்றுவிட்டான். அவ்விரவு நடந்த யுத்தத்தில் பாண்டவசேனையிலே விராடன் துருபதன் முதலான அரசர்களும், கௌரவசேனையில் பகதத்தன் பூரிச்சிரவசுமுதலியவர்களும் மாண்டார்கள். இப்பெரும் போர்க்களத்தில் பல பிசாசங்கள் அங்குள்ள உதிரமாமிசங்களைக் குடித்துத் தின்று களித்துப் பாடியாடித் திரிந்துகொண்டிருந்தன. பிறகு கிருஷ்ணன் துரோணாசாரியர் பிழைத்திருக்கு